விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

ஓங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 19 செவ்வாய்க்கிழமை (01.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வரலாறு காணாத மே தினம் இம்முறை யாழ்ப்பாணத்தில்!

## கட்சிகள் இணைந்தும் தனித்தும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள தின கூட்டங்களும் ஊர்வலங்களும் ரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

இம் முறை நாட்டின் பிரதான எதிர்க்கட்சி ன் மேதினக் கூட்டமும் ஊர்வலமும் தமிழ்த் சியக் கூட்டமைப்புடன் இணைந்து நடத் தப்படவுள்ளதே இந்த எதிர்பார்ப்புக்கு முக்கிய காரணம்.

அத்துடன் பல கட்சிகள் தனித்தனியாக தமது மேதின ஊர்வலத்தை ஏற்பாடு செய் துள்ளன.

நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் முடிபிற்கு கொண்டுவரப்பட்டு சுதந்திரமான சூழல் கொண்டுவரப்பட்டுள்ளதனால் கடந்த காலங்களிலிருந்த அச்ச நிலை மக்கள் மத்தி யிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டமும் ஊர்வலமும் யாழ்ப்பாணத் தில் நடைபெறவுள்ளதனால் பொலிஸ் பாது காப்பு (24ஆம் பக்கம் பார்க்க)

## 250 பேருடன் சென்ற படகு கவிழ்ந்தது

(அஸாம்)

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் பிரமபுத்திரா நதியில் சுமார் 250 பேருடன் பயணம் செய்து கொண்டிருந்த படகொன்று கவிழ்ந்ததால் குறைந்தபட்சம் 35 பேர் உயிரிழந்துள்ளனர். துப்ரி மாவட்டத்தின் பகிரா கிராம் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரட்டை அடுக்குகள் கொண்ட இப் படகு கடும் காற்று, மழைக்கு மத்தியில் பிரம புத்திரா நதியில் ப்பயணம் செய்து கொண் டிருந்த போது (24ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரவதைக்கான ஆதாரங்கள் இல்லை

(லண்டன்)

பிரிட்டனிலிருந்து இலங்கைக்கு திரும் பும் குடியேற்றவாசிகளும் அகதிகளும் சித்திரவதை செய்யப்படுவதற்கான ஆதாரங் கள் இல்லையென பிரித்தானிய அரசாங் கம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு திரும்பும் குடியேற்ற வாசி களும் அகதிகளும் சித்திரவதை செய்யப்படு வதாக குற்றச்சாட்டுக்கள் இருந்தன. பிரிட் டனிலிருந்து திரும்புபவர்கள் தொடர்பான இத்தகைய அனைத்து குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எமது உயர்ஸ்தானிகர் ஆலயம் விசாரித்தது.

இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை என 2011ஆம் ஆண்டுக்கான வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையில் பிரித் தானிய வெளிவிவகார மற்றும் பொதுநல வாய அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-11)

## பான் கீ மூன்-மன்மோகன் ஒரே நிலைப்பாட்டில்

(புது டில்லி)

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாய கம் பான் கீ மூனும் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத் துள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இவர்கள் இருவரும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதாக புதுடில்லி அரசியல் வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கு இருநாள் விஜயத்தை மேற் கொண்டிருந்த பான் கீ மூன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் வெளிவிவகார அமைச்சர் (24ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்த மீறல் குறித்து பொறுப்புக் கூறல் அவசியம்


## ஐ.நா.செயலர் வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் முழுமையான பொறுப் புக்கூறும் பொறிமுறை ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடு கள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இவ்விவ காரம் தொடர்பில் பொருத்தமான வழிகளில் பதிலளிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் தான் கேட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு காளை மாட்டை ஒப்படைக்க இணக்கம்

### யாழ்.நீதிபதியிடம் அதன் உரிமையாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதிமன்றினால், வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்ட நல்லினக் காளை மாட்டை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு வழங்க அதன் உரிமையாளர் நேற்று யாழ்.நீதிமன் றில் இணக்கம் தெரிவித்தார்.

நல்லின காளை மாடு தொடர்பில் யாழ்.நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 17 ஆம் திகதி யாழ்.நீதிமன்ற நீதிபதி மா.கணே சராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்ட போது, மாட்டை (23ஆம் பக்கம் பார்க்க)


## ஹிருணிகாவுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

கொலன்னாவ பிரதேசத்தில் இடம் பெற்ற அரசியல் மோதலொன்றில் கொல்லப் பட்ட ஜனாதிபதியின் முன்னாள் ஆலோச கர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு 24 மணி நேர பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கறுவாத்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஹிருணிகாவின் வீட்டுக்கு இந்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட் (24ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எப்போதும் சாவு என்பது இல்லை




## கலைஞர் கருணாநிதி விபரிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்ற போராளிகளுக்குஎப்போதும் சாவு இல்லை என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறினார். நேற்று நடைபெற்ற டெசோ அமைப்பின் கூட்டத்துக்குப்பின் ஊடகவியலாளர்களுக்கு அளித்த செவ்வியிலே அவர் இதனைக் கூறினார். அவர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

# பான்கி மூன் செவ்வி; இலங்கை கலக்கம்

## ஐ.நாவில் கேள்வி எழுப்ப பணிப்பு!



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இந்தியா ருடேக்கு வழங்கிய செவ்வி அரசாங்கத்திற்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் இறுதி மாதங்களில் பத்தாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன் மோசமான மனிதவுரிமை மீறல்களும் இடம் பெற்றிருந்ததாக பான் கீ மூன் இச்செவ்வியில் சுட்டிக் காட்டியிருந்தார்.

அத்துடன் இத்தகைய போர் மீறல்கள் தொடர்பில் பொறுப் புக் கூறப்பட வேண்டும் எனவும் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதி உதாசீனப்படுத்தினால் விபரீதங்களை எதிர்கொள்ள நேரிடும்

## பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத் எச்சரிக்கை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் உதாசீனப்படுத்தினால் அதற்கான விபரீதத்தை விரைவில் எதிர்கொள்ள நேரிடும் என அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரதியமைச்சருமான ஜயரத்ன ஹேரத் தெரிவித்துள்ளார். குருநாகலில் இடம்பெற்ற இரகசிய சந்திப் பொன்றின்போதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர் பலர் கலந்து கொண்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்திற்கு தாவிய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு ஜனாதிபதி ஏராளமான சலுகைகளை வழங்கியுள்ளமையே பிரதியமைச்சருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்த அடிப்படைக் காரணமாக உள்ளதென இந்த இரகசிய கூட்டத்தில் பங்கேற்றிருந்த அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் ஆதரவுடன் அந்தப் பகுதியில் தான் தோன்றித்தனமான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் இதனால் குருநாகல் தொகுதியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளதாகவும் இது குறித்து தொடர்ந்து இவ்வாறு பார்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும் இந்தக் கூட்டத்தின்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத்திற்கு மேலதிகமாக அநுர பிரியதர்சன யாப்பா, சாலிந்த திஸாநாயக்க, எஸ்.பி. நாவின்ன, டி.பி. ஏக்கநாயக்க உள்ளிட்ட குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பல உறுப்பினர்களும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது அதிருப்தி கொண்டுள்ளனர். (எ-11)

# உலகின் மிகப் பெரிய பௌத்த கொடி

உலகில் மிகப்பெரிய பௌத்த கொடி எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதி முதல் பொது மக்களின் பார்வைக்கு திறக்கப்படும் என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எரிக் வீரவர்த்தன தெரிவித்தார்.

கண்டி பொக்காவல இஸிபத்தன விகாரையில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப் பெரிய பௌத்த கொடி தொடர்பாக இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார். கண்டி பொக்காவல இஸிபத்தனாராம விகாரையில் இவ் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எரிக் வீரவர்த்ன, 200 அடி நீளமும் 100 அடி உயரமும் கொண்ட உலகிலேயே மிகப் பெரிய பௌத்த கொடியான இதனை பார்வையிடுவதற்கு பல இலட்சக் கணக்கான மக்கள் வருவார்கள் என்ற நாம் எதிர்பார்க்கிறோம். அவர்களுக்கு தேவையான அனைத்து பொது வசதிகளையும் பிரதேச சபை உட்பட அரச நிறுவனங்கள் மூலம் செய்துள்ளோம் என்றும் கூறினார். (எ-11)

# புலிகளுக்கு உதவியவருக்கு 15 வருட சிறைத் தண்டனை!

## விதிக்க கோருகிறது அமெ. நீதி திணைக்களம்

இலங்கையில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட இலங்கையருக்கு 15 வருட சிறைத் தண்டனை விதிக்க வேண்டுமென அமெரிக்க நீதி திணைக்களம் கோரியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு பொருட்களை வாங்க முயன்றமையால் ரம்ணன் மயில்வாகனம் என்ற சந்தேகநபர் பாரிய குற்றத்தினை மேற்கொண்டுள்ளார் என அமெரிக்க வழக்குரைஞர் ஒருவரால் நியூயோர்க் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணிசமான நீண்ட சிறைத்தண்டனை விதிக்கப்படாதுவிடின் சட்டத்துக்கான மதிப்பைக் கெடுப்பதாகிவிடும். எனவே ஒருவர் ஒரு பயங்கரவாத இயக்கத்துக்கு பொருள் ரீதியான உதவி வழங்கினாலும் கடும் தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என தெரிவிப்பது போல இது விளங்கிக் கொள்ளப்படும் என வழக்குரைஞர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கின் அச்சாணியான இலங்கை உள்நாட்டுப் போர் முடிந்துவிட்டது. மேலும் சந்தேக நபர் தீவிர அரசியல் நோக்கம் கொண்டவர் அல்ல. இவற்றைக் கருத்திற் கொண்டு மயில்வாகனம் ஏற்கெனவே சிறையில் இருந்ததை தண்டனையாக கருதி அவரை விடுவிக்க வேண்டும் என்று குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் நீதிபதியிடம் வேண்டிக் கொண்டார்.

இவரது செயல் தனியொரு நிகழ்வு மட்டுமே. இவர் நிலைமையை சரியாக புரியாமல் தவறுதலாக நடந்துள்ளார். மயில்வாகனம் ஒரு பாடத்தைப் படித்து விட்டார். அவர் தனது செயலுக்காக உண்மையில் மனம் வருந்துகின்றார் என அவரது வழக்குரைஞரான ஜெரிபொவ் குறிப்பிட்டுள்ளார். இதனையடுத்து இந்த வழக்கு மீதான தீர்ப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்காக இரவுப் பார்வை கண்ணாடி வாங்க முற்பட்டதாக 35 வயதான மயில்வாகனம் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அத்துடன் புலிகள் இயக்கத்தினருக்காக கணனிகள், இலத்திரனியல் பாகங்கள் போன்ற சாதனங்களை வாங்க முயன்ற சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு உதவியதாகவும் இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பீடத்தக்கது. (எ-11)






# பட்டப்பகலில் திருட்டு

(கரவெட்டி)

வடமராட்சியில் கப்பூது பகுதியில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் யாரும் இல்லாத நேரத்தில் வீடு புகுந்து 15 பவுண் நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. வீட்டின் உரிமையாளரான எஸ்.திருநாவுக்கரசு தோட்டத்திற்கு சென்றவேளை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்கு நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-11,24)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

## பிரபல மனோதத்துவ நிபுணர்

## Dr. P.ஆறுமுகம்

**T.P.: 0719315664 , 0777569205, 0214922403**

## மீண்டும் யாழில்

**29.04.2012 முதல் 04.05.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் **Dr.P.**ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்** (பழைய கமால் லொஜ்)

392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)

(C-6472)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## அலுவலர்களுக்கான விண்ணப்பம் கோருதல்

**ஆலயத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 05.05.2012ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை ஆலய நிர்வாகப் பணிமனையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலோ அல்லது இடதுபக்க கடித உறையின் மேல் மூலையில் எப்பதவிக்கெனக் குறிப்பிட்டு செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் என்ற முகவரிக்கோ பதிவுத் தபாலில் அனுப்பமுடியும். 06.05.2012ம் திகதி மாலை 3.00 மணிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பம் எக்காரணம் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.**

**01. தொழில் நுட்ப உத்தியோகத்தர்**

1. அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப அலுவலருக்கான சான்றிதழ்
2. வேலை அனுபவம் போன்றவற்றின் சான்றிதழின் நிழற்படப்பிரதி இணைக்கப்பட வேண்டும்.
3. அரச திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

**02. நிறைவேற்று அலுவலர்**

1. ஆலயத்தில் நிரந்தரப் பதவி இதுவாகும்.
2. ஆலயத்தில் தங்கி இருந்து கடமையாற்ற வேண்டும்.
3. பட்டதாரியாக இருத்தல் வேண்டும். BA, BCom
4. அரச திணைக்களத்தில் கடமையாற்றிய பதவி நிலை உத்தியோகத்தரும் விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பங்கள் சுயமாக தயாரித்து அனுப்பமுடியும்.**

**இரு பதவிகளுக்குமான சம்பளம் நேரில் கலந்து பேசி தீர்மானிக்கப்படும்.**

கா.ஆ. தியாகராசா
தலைவர்

ந. மோகனரூபன்
செயலாளர்

அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

(C-6474)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## திருப்பணி வேலைக்கான கூறு விலை கோருதல்

**மேற்படி ஆலய உள் வீதி சுற்றுப்பிரகாரம் பூராகவும் கொங்கிறிற் இட்டு மாபிள் பதிப்பதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. வேலையை மேற்கொள்ள விரும்புபவர்கள் கூறு விலையினை 05.05.2012ம் திகதிக்கு முன்னர் ஆலயத்தில் உள்ள நிர்வாகப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியிலோ அல்லது இட்துபக்க கடித உறையின் மேல் மூலையில் கூறுவிலை எனக் குறிப்பிட்டு செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் என்ற முகவரிக்கோ பதிவுத் தபாலில் அனுப்பமுடியும். 05.05.2012ம் திகதி மாலை 3.00 மணிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பம் எக்காரணம் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.**

01. வேலை விபரத்தை ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து பார்வையிடலாம்.
02. கொங்கிறிற் இடுவதற்கான கட்டுமானப் பொருட்கள் ஆலயத்தினால் வழங்கப்படும். தொழிலாளர் கூலி மட்டுமே கூறுவிலையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
03. ஆலயத்தில் பதிப்பதற்கென வைக்கப்பட்டுள்ள மாதிரி மாபிள் மட்டுமே பதிக்கப்படவேண்டும். மாபிள் கொள்வனவு, பதித்தல் என்பன கூறுவிலை சமர்ப்பிப்பவரையே சார்ந்தது. மாபிள் ஆலயத்தினால் வழங்கப்படமாட்டாது.
04. நிர்வாக சபையினால் குறிக்கப்பட்ட காலத்திற்குள் வேலையை திருப்திகரமாக நிறைவேற்றி முடிக்க வேண்டும்.
05. இது இறை பணி என்பதால் நேர்மை, விசுவாசம் என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.
06. மேலதிக விபரம் தேவைப்படின் ஆலய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 0213213024, 0213207785

அன்னையின் சேவையில்

கா.ஆ. தியாகராசா
தலைவர்

ந. மோகனரூபன்
செயலாளர்

அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

(C-6474)

## இன்று ஒரு தகவல்

### மனமும் சிந்தனையும்

ஒருவரைப் பார்த்து, "உன்னுடைய நண்பர்கள் யார்?" என்று கேள்வி கேட்டுப் பாருங்கள்.

சற்று யோசித்து, யோசித்து பதில் சொல்லுவார். அவரிடமே ''உன்னுடைய எதிரிகள் யார்?'' என்று கேளுங்கள். "கட, கட"வென்று ஒப்பிடுவார்.

நமது மனம் எப்படியென்றால், நண்பர்களை விட எதிரிகளை நன்றாக நினைவிலே வைத்துக் கொள்ளும்.

இதுவொரு ஆச்சரியமான உண்மை.

உங்களினாலே நண்பர்களை மறந்துவிட முடியும்... ஆனால், எதிரிகளை மறந்து விட முடியாது. இதுவொரு வேடிக்கையான நிலைதான்.

நமது மனம் மலர்களை கவனிப்பதில்லை... முட்களைத்தான் அவதானிக்கும்.

தன்னைக் காயப்படுத்தும் எதையும் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளும்.

ஒரு தெளிந்த சிந்தனையுடைய மனம் மிக அழகாக உள்ள எல்லாவற்றையும் அவதானிக்கும். இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையிலே இயல்பாகவே நன்றாக இருப்பார்கள்.

மனதிலே உள்ள ஒரு சிறிய அமைப்பை மாற்றுவதைப் பொறுத்ததுதான் இந்த விடயம் என்று ஓஷோ கூறுகிறார்.

ஒரு யூத கோயில் இருந்தது. அது யூதர்களின் மடமாக காணப்பட்டது. அங்கே ஒரு தலைமைக் குரு இருந்தார். அவர் மிகவும் கண்டிப்பானவர்.

அந்த கோவிலையொட்டி ஒரு தோட்டம் அமைந்திருந்தது. ஒருநாள் காலையிலே அந்தத் தோட்டத்திலே இரண்டு இளம் யூதர்கள் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் மதப் புத்தகங்களையும் படிக்க வேண்டும். பிற விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த இரண்டு பேருக்குமே புகை பிடிக்கிற பழக்கம் இருந்தது. ஆனால், கோயிலில் இருக்கும்போது அவர்கள் புகை பிடிக்க முடியாது. அது கடுமையான குற்றம்.

ஒருநாள் அந்த இரண்டு பேரில் ஒருவன் மிகவும் கலக்கமடைந்த நிலையில் அந்த கோவிலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். வந்தவன் விரைவாக தோட்டப் பக்கம் போனான். அங்கே வேறு ஒருவன் ஆனந்தமாகப் புகைபிடித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் இவனுக்கு அதிர்ச்சி "அடக்கடவுளே! என்ன இது? நீ கேட்காமலே ஆரம்பித்து விட்டியா?" என்றான்.

"இல்லையே... நான் கேட்டுவிட்டேன்!" என்றான்.

"அப்படியா? என்ன மனிதன் இவன்... நானும்தான் கேட்டேன். என்னை வாய்க்கு வந்த மாதிரி திட்டினார். இது என்ன கோயிலா? நரகமா? உனக்கு புகைபிடிக்க வேண்டுமென்று ஆசையாக இருந்தால் நரகத்துக்குப் போ'' என்றார்.

அதுசரி உனக்கு மட்டும் எப்படி அனுமதி வழங்கினார் என்று அவன் கேட்டான்.

அவன் சிரித்தபடியே ''நீ எப்படி கேட்டாய் சொல்'' என்றான்.

''நாம் இந்தத் தோட்டத்திற்கு வர அனுமதிக்கப்பட்டிருக்கிறதே ஜெபத்திற்காகத்தான்... அதனால் ஜெபம் செய்யும் போது புகை பிடிக்கலாமா?'' என்று கேட்டேன்.

அதற்கு அவர் சத்தமிட்டு அடிக்கவே வந்து விட்டார்.

நான் ஒருவிதமாக கேட்டேன். நீ ஒரு மாதிரியாக கேட்டுள்ளாய். ''ஜெபம் சொல்லும் போது புகை பிடிக்கலாமா?'' என்று நீ கேட்டு இருக்கிறாய். "ஐயா! புகை பிடிக்கும்போது ஜெபிக்கலாமா?'' என்று நான் கேட்டேன். அதிலே தவறேதும் கிடையாது என்று பதிலளித்தார்.

ஒரு சிறிய மாற்றம்தான். அது மிகப் பெரிய மாறுதலை ஏற்படுத்தியுள்ளது.

மனம் நல்லவிதமாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டால்... மகிழ்ச்சிக்குப் பஞ்சம் கிடையாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அழிக்கப்பட்ட புலிகளுக்கு உயிரூட்டுவது எப்படி?

## திஸ்ஸ அத்த நாயக்க எம்.பி.கேள்வி

இந்த நாட்டில் நிலை கொண்டிருந்த தீவிரவாத இயக்கம் எனக் கூறப்படும் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து விட்டோம் எனக் கூறிவிட்டு மேதினக் கூட்டத்தை நாம் யாழ்ப்பாணத்தில் நடத்தும்போது அழிந்துபோன புலிகளுக்கு உயிரூட்டும் வகையில் செயற்படுவதாகவும் அரசாங்கம் தென்னிலங்கையில் பிரசாரத்தில் ஈடுபடுவது இனத்துவேசத்தைத் தூண்டுவதாகவும் தொடர்ந்து தமிழ்மக்களை புலிமுத்திரைகுத்தி இந்த அரசாங்கம் முடக்கப்பார்க்கின்றது எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் உள்ள எக்ஸ்போ தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சகல எதிர்க்கட்சிகளையும் இணைத்து இந்த மேதினக்கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவது என ஐக்கிய தேசியக்கட்சி முடிவெடுத்ததோடு இன்று நடைபெறும் மே தினக்கூட்டத்தில் 14 கட்சிகள் பங்குபற்றுகின்றன.

எதிர்க்கட்சிகளை இணைத்து நாம் மேதினத்தை இங்கு நடத்துவதை விரும்பாத அரசாங்கம் தென்னிலங்கையில் பொய் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றது.

அத்தோடு தமிழ் மக்களை விடுதலைப்புலிகள் என அடையாளப் படுத்தும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

புலிகளை முற்றாக ஒழித்து விட்டோம் என முன்பு கூறிய இந்த அரசாங்கம் தற்போது அழிந்துபோன புலிகளை மீண்டும் உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம் எனவும் குற்றச் சாட்டுக்களை முன் வைத்துள்ளது.

சகல மக்களையும் ஒன்றிணைத்து ஒரே நாடு ஒரே மக்கள் என்று வாழ வேண்டும் என்று கூறும் இந்த அரசாங்கம் யாழ்ப்பாணத்தை வேறுபடுத்தி பார்க்க முற்படுகின்றது.

எங்களை புலிக்கு ஆதரவானவர்கள் என முத்திரை குத்த நிலைக்கும் இந்த அரசாங்கத்திடம் நாம் கருணா அம்மான் யார், பிள்ளையான் யார், கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் யார் என்று கேட்கிறோம்.

எனவே, ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களையும் இணைத்து வாழ வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.

மேலும் இந்த மேதினக் கூட்டத்தில் மக்களைப் பங்குபற்ற விடாது மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிகளை இந்த அரசாங்கம் கைவிட்டு விட்டு தொழிலாளர் தினத்தில் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சந்திப்பில் அக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, யோகராஜன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஊவா மாகாணசபை உறுப் பினர் கே.வேலாயுதம் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

இருப்பினும் அக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரம சிங்க பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 70 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 30 | 20 | 40 | 30 |
| தக்காளி | 100 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 | 30 |
| கரட் | 40 | 40 | 30 | 60 |
| பூசணி | 25-30 | 20 | 20 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-70 | 90 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 65 | 100 | 80 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 90 | 60 |
| லீக்ஸ் | 100 | 90 | 30 | 120 |
| பீற்றூட் | -- | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 40 | 40 | 30 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 350 | 320 |
| போஞ்சி | 40 | 100 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-18 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 80 | 70 | 60-80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 | 20-25 |

## இராசி பலன்

*01.05.2012*
*(சித்திரை 19, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு*
*தசமி முன்னிரவு 8.19 மணிவரை*
*மகம் பிற்பகல் 12.53 மணிவரை*
*இராகுகாலம் 2.57-4.27 மணிவரை*
*சுபநேரம் 10.27-11.57 மணிவரை*
*தொழிலாளர் தினம்.*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், அங்காரக வழிபாடு ஆனந்தம் தரும், சேமிப்பு பழக்கம் உயர்வடையும், சுப காரியப் பேச்சுக்கள் சமுகமாக முடியும், உஷ்ண நிலையுண்டு.

**இடபம்** பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வாகன சுகமுண்டு, எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், தன வரவில் இருந்த தடைகள் அகலும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்துவதற்காக முக்கியமான பொறுப்புக்களை எடுத்து நடத்த வேண்டிய சூழ்நிலை அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், தொலை தூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம், தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** அம்பிகை வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், மூத்தவர்களால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் தீரும், போசன சுகமுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும், சயன சுகக்குறைவான நாள்.

**துலாம்** தொலை தூரப் பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்** பிறர் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர், புதிய தகவல்களால் மகிழ்ச்சி கூடும்.

**தனுசு** புத்தி சாதுரியமாகப் பேசி சாதனை கிடைக்கும் நாள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், கௌரவக்குறைவான நாள், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, போசன சுகமுண்டு, கௌரவக்குறைவான நாள்.

**கும்பம்** களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், தொழில் ரீதியாக அனுபவம் மிக்கவர்களைச் சந்திப்பீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்** தொழில் வளர்ச்சிக்காக அதிகம் பாடுபடுவீர்கள், முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், தனவரவு திருப்தி தரும், உடல் நலன் சீராகும், கௌரவமான நாள்.

வளவன்

மேதின எழுச்சி
மே 1
E.P.D.P



# தொழிலாளர்களே! விவசாயிகளே!!
# உழைப்பவர் தினத்தில் ஒன்றுபட...
# உரிமைகள் அனைத்தையும் வென்றுவிட
# எம் தேச மக்களே!!
# பேரணியாக திரண்டு வாரீர்!!!

**இடம் - யாழ் மாநகர திடல் (துரையப்பா விளையாட்டரங்கு அருகாமை)**

**நேரம் - 01.05.2012**

**பேரணி ஆரம்பமாகும் நேரம் - பிற்பகல் 2.00 மணி**

**பொதுக்கூட்டம் - பிற்பகல் 4.00 மணி**

எங்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்துவதற்கான நாள் இன்றைய மேதினம்.

வாருங்கள் உறவுகளே! உண்மைகளை உலகத்துக்கு உணர்த்துவோம்.! எங்கள் எண்ணங்களைச் சொல்லி எதிர்காலத்தை வளமாக்குவோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமையில் இன்று யாழ் மாநகர திடலில் (துரையப்பா விளையாட்டரங்கு அருகாமையில்) ஒன்று கூடுவோம்.!

- அங்கே முரசறைந்துரைப்போம்.!!!

மீள் குடியேற்றத்தைச் சாத்தியப்படுத்தியதில் வெற்றி கண்டவர் யாரென்று....

இயல்பு வாழ்வை மீண்டும் உருவாக்குவதற்குப் பாடுபட்டுழைத்தவர் எவரென்று....

போரினால் அழிவடைந்த பிரதேசங்களின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தியது யாரென்று...

எங்களின் கடலிலே அத்துமீறி எமது கடற்றொழிலாளர்களுக்குப் பிரச்சினையை ஏற்படுத்துவோரைக் குறித்து நடவடிக்கை எடுப்பது எவரென்று....

அரசியற் கைதிகளையும் ஆயிரக்கணக்கான போராளிகளையும் விடுதலை செய்வதற்கு உழைத்தவர்கள் யாரென்று...

போர்க்காலத்திற்கூட அரசியல் காரணங்களுக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் பலரின் விடுதலைக்கு உழைத்தவர்கள் எவரென்று....

மீள் குடியேறிய மக்களின் வாழ்வையும், பிரதேசங்களையும் முன்னேற்றுவதற்காக இரவு, பகலாக உழைத்து வருவது யாரென்று....

நடைமுறைக்குச் சாத்தியமான அரசியற் தீர்வைப்பற்றி - உலகம் ஏற்றுக்கொண்ட அரசியற் தீர்வைப் பற்றிப் பேசுவோர்கள் எவரென்று...

விவசாயிகளுக்குத் தோள் கொடுத்து உழைத்தவர்கள், ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் விடுதலைக்காகவும், அவர்களுடைய வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டவர்கள் யாரென்று....

பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் துணிந்து நின்று குரல்கொடுத்துழைப்பது எவரென்று...

காணாமற்போனோரைக் கண்டு பிடித்து, உங்களிடன் சேர்ப்பதற்கு உண்மையாகவே உழைத்து வருவோர் யாரென்று...

சுமைகளும், நெருக்கடிகளும் இல்லாத உங்களது வாழ்வுக்காக உழைத்துக் கொண்டிருப்பவர் யாரென்று...

நடக்காது என்று சொன்னவை எல்லாம் இன்று நடந்திருக்கின்றன! இதையெல்லாம் சாத்தியப்படுத்தியது யாரென்று....

எடுத்துரைப்போம் அங்கே!

நாளை வரும் மேதினப் பேரணியில் அணிதிரண்டு எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவோம்.!

அலை அலையாகத் திரண்டு வாருங்கள்... அணி அணியாகத் திரண்டு வாருங்கள்.!!

சுமைகளும், நெருக்கடிகளும் தீர்க்கப்படும் ஒரு பயணத்தில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இதற்காக நீங்களும், நாங்களும் கடந்த காலங்களில் பட்ட துயரங்கள் கொஞ்சமல்ல.

முப்பதாண்டுகளாக வாழ்ந்த இருண்ட வாழ்க்கையில் இறுதி மூன்றாண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றக் கீற்றுக்களை உங்கள் மனச்சாட்சியாக எடுத்து வாருங்கள்.

இது உங்களுடைய மேதினம்.! இது உங்களுக்கான மேதினம்.!!

இந்த நாளில் உங்களை நீங்கள் வெளிப்படுத்துங்கள். நாங்கள் இந்த நாட்டில் இணைந்து வாழ விரும்புகிறோம் என்றுரைப்போம்.! இந்த உலகத்துடன் இணைந்து வாழ விரும்புகிறோம் என்று சொல்வோம்.!

வாருங்கள் அன்பான உறவுகளே!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மேதினப் பேரணியில் சேர்ந்து எமது உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்துவோம்.! தொழிலாளர் நாளின் வெற்றி என்பது எங்கள் வாழ்வின் வெற்றியாகும்!!!

### மேதினப் பேரணிகள் ஆரம்பமாகும் இடங்கள்

- பருத்தித்துறை வீதி வீரமாகாளி அம்மன் ஆலய முன்பாக ஆரம்பித்து வேம்படிச் சந்திக்கும்
- பண்ணை ரெலிக் கொம் சுற்று வட்டாரத்தில் ஆரம்பித்து கே.கே.எஸ்.வீதி ஆஸ்பத்திரி வீதி வழியாக வேம்படிச் சந்திக்கும்
- யாழ் புகையிரத முன்றலில் இருந்து ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதியூடாக வேம்படிச் சந்திக்கும்

வேம்படிச் சந்தியில் ஒன்றிணையும் பேரணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் 1ம் குறுக்குத் தெரு ஊடாக பிரதான வீதியைச் சென்றடைந்து அங்கிருந்த யாழ் மாநகர திடலுக்கு (துரையப்பா விளையாட்டரங்கு அருகாமை) சென்றடையவுள்ளது. அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

(சி-6473)

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

# மகன்மாரின் பிரச்சினையை திசை திருப்ப தமிழீழத்தை கையிலெடுக்கும் கலைஞர்

## த டெலிகிராப் தகவல்

(சென்னை)

**இலங்கையில் தமிழ் ஈழம் அமைக்கப்படவேண்டும் என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மீண்டும் கோரி வருகின்றார். இது தமது மகன்மாரான ஸ்டாலின் மற்றும் அழகிரி ஆகியோருக்கு இடையிலான பிரச்சினையை திசை திருப்புவதற்காக மேற்கொள்ளப்படும் உத்தியாகும் என்று த. டெலிகிராப் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் தமிழ் ஈழம் உருவாக்கப் படவேண்டும் என்பதற்காக கடந்த 1980 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர்களின் அமைப்பான டெசோ அமைப்பின் கூட்டம் நேற்று சென்னையில் கருணாநிதியின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அமைப்பு செயற்பட்டு வந்தபோதும் 1991 ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் செயலிழந்து போனது.

இந்த நிலையில் கருணாநிதியின் புதிய பிரவாகம் தமது மகன்மார்களுக்கு இடையிலான போரை மறைப்பதற்கான உத்தியாகும் என்று அதில் குறிப்பிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் இடம்பெற்ற போது இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எவ்வித அழுத்தங்களையும் கருணாநிதி கொடுக்கவில்லை.

அதேவேளை இந்திய இராணுவத்தை அனுப்பி தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்று அப்போதைய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கோரியபோது அதனை அரசியல் இலாபம் என்று கருணாநிதி குறிப்பிட்டதாக த டெலிகிராப் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தற்போது தமிழ் ஈழம் மீது காதல் பிறந்துள்ளது. இது 2014 ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலை மையமாக் வைத்து நடத்தப்படும் பிரசாரம் என்று தமிழகத்தின் அரசியல்வாதிகளான வைகோ மற்றும் விஜயகாந்த் ஆகியோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனினும் இந்திய தேர்தலில் இலங்கை தமிழர்களின் பிரச்சினை தாக்கத்தை ஏற்படுத்தாது என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## வட,தென் மாநிலங்களில் கனமழை; மின்னல் தாக்கியதில் 27 பேர் பலி

(சென்னை)

இந்தியாவில் தமிழ்நாடு ஆந்திரா மற்றும் மேற்கு வங்கத்தில் மழை அவ்வப்போது பெய்து வருகின்றது. இந்நிலையில் ஆந்திரா மற்றும் மேற்கு வங்கத்தில் மின்னல் தாக்கி 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆந்திராவில் பரவலாக பல மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து மின்னல் தாக்கியதில் 17 பேர் உயிரிழந்தனர்.

அதிகபட்சமாக குண்டூர் மாவட்டத்தில் 10 பேர் பலியாகினர். கம்மம், வாரங்கல் மற்றும் பிரகாசம் மாவட்டங்களில் தலா இருவர் என மொத்தம் 17 பேர் பலியாகினர்.

திடீரென மின்னல் தாக்கியதில் இரண்டு பெண்கள் உட்பட 10 பேர் பரிதாபமாக இறந்தனர். மேலும் 16 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

இந்நிலையில் மின்னல் தாக்கி பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்ச ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். (அ-2)

## கூரிய ஆயுதங்களால் மாணவன் மீது தாக்குதல்

(கரவெட்டி)

தனியார் கல்வி நிலையத்திற்கு சென்ற மாணவன் மீது இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதங்களால் மேற்கொண்ட தாக்குதலில் மாணவன் பலத்த காயுங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு நெல்லியடி இராஜ கிராமப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, நெல்லியடியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்கு இரவுவேளை சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவனை வழி மறித்த இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதங்களால் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தில் கரவெட்டி மேற்கு சண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த இரத்தினயூ-தவநீதன் (வயது 17) என்ற பாடசாலை மாணவனே படுகாயமடைந்தவராவார்.

(அ-9-24)


நெஞ்சை விட்டகலா

4 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 27.04.1947

மறைவு 30.04.2008



அமரர் தேவகி துரைராஜா

(ஓய்வுபெற்ற தொலைக்கல்வி போதனாசிரியையும்
யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபரும்)


நீண்டகாலம் நோய் நொடியில்லாமல் வாழ்வாய்
என எண்ணிய எமக்கு சில மணிநேரத்தில்
சென்று வருகிறேன் என்றாய் அம்மா தாயே
பாசத்தால் கட்டுண்ட நாம் கலங்குகின்றோம்
ஆண்டுகள் நான்குதான் சென்றாலும் அருகிருக்கிறாய்
தேவா தேவா எனப்பலரும் கூப்பிடுவது கேட்குதம்மா
நீ அணைத்து அணைத்து வளர்த்தாயே அம்மா
எத்தனை பேர் உன்னை மறந்தாலும்
உன் நாமம், உன் பண்பு, உன் உபசரணை,
அறிவூட்டிய திறமை, அரவணைத்து ஆறுதல்
சொல்ல எத்தனை ஆயிரம் பேர் அம்மா,
தாங்கள் வாழ்ந்த காலம் எம்மை
அடிமைப்படுத்திய காலம் அம்மா, நினைக்கின்றோம்
உன் நாமம் நிலைக்குமம்மா சாந்தி! சாந்தி!

புறாடி லேன் (முன் ஒழுங்கை),
அரியாலை, யாழ்ப்பாணம்.

கணவர்

(8197)








யாழ். றோட்டறிக் கழக அனுசரணையுடன் கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு,கிழக்கு மாகாண கல்வியமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா மங்கள விளக்கேற்றுவதையும் நம்பிக்கை நிதிய தலைவர் சமாதான நீதவான் லயன் இ. செல்வநாதன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ். றோட்டறக் கழக தலைவர் எஸ்.சங்கர் மாணவியொருவருக்கு பாதணி பொதியினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கரப்பந்தாட்ட இறுதிப்போட்டிக்கு மத்திய அணியும் நவஜீவன்சும் தெரிவு

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட (செற் அப்) இறுதிப்போட்டியில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 16 அணிகள் பங்குபற்றிய கரப்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியை தோற்கடித்து ஆவரங்கால் மத்திய அணியும் 2 ஆவது அரையிறுதிப்போட்டியில் கெருடாவில் அண்ணா அணியை தோற்கடித்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

(அ-9-24)

# பணத்தை களவாடிய இராணுவ வீரருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஊடகவியலாளரின் பணத்தை களவாடிய இராணுவ வீரர் ஒருவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றிற்காக சென்றிருந்த ஊடகவியலாளரின் பத்தாயிரத்து இருபது ரூபா பணத்தை களவாடி தனது உள்ளாடைக்குள் மறைத்து வைத்திருந்த இராணுவ வீரர் குறித்து ஊடகவியலாளர் நீதிமன்ற பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து இராணுவ வீரரை சோதனையிட்டு பணத்தை மீட்டதுடன் குறித்த சந்தேக நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி திருமதி விஜயராணி முன்னிலையில் ஆஜர்படுத்தினர். குறித்த இராணுவ வீரரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறிலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(அ-9-24)

# உதவி கோருகின்றார்




(யாழ்ப்பாணம்)

போயிட்டி அச்செழுவை சேர்ந்த றொபோட் கிறீன்டன் (வயது 14) என்பவருடைய இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவருக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை செய்வதற்கு 15 இலட்சம் ரூபாய் தேவை என வைத்தியர்கள் தெரிவித்தள்ளனர்.

மேற்படி சிறுவனின் குடும்பம் மிக வறுமை நிலையில் உள்ளதால் கருணை உள்ளம் கொண்டவர்களிடமிருந்து உதவி கோரி நிற்கின்றார்.

எனவே உதவி புரிய விரும்பும் கருணை வள்ளல்கள் கொமர்ஷல் வங்கியின் 8560043163 என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்து உதவுமாறு வேண்டிநிற்கின்றார்.

மேலதிக விபரம் தேவைப்படின் 0771625531 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (அ)

# வலைப்பந்தாட்ட போட்டியில் மெதடிஸ்த பெண்கள் சம்பியன்

(கரவெட்டி)

யாழ். மாவட்டமட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் வலைப்பந்தாட்டப்போட்டியில் 17 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சம்பியனானது. யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அருணாசல வித்தியாலய அணியை தோற்கடித்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி சம்பியனாகியது.

இதில் 3 ஆம் இடத்தினை யா/அளவெட்டி அருணோதயா அணி பெற்றுக்கொண்டது.

(அ-9-24)




# அல்வாய் நாவலடி வீதியை புனரமைக்கக் கோரிக்கை



(கரவெட்டி)

மாலுசந்தி, அல்வாய் நாவலடி வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் அவ் வீதியிலுள்ள பெரிய பாலமொன்று பயணி களின் உயிருக்கு அச்சுறுத்தும் வகையில் உள்ளதாக பயணிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

மாலுசந்தியிலிருந்து அல்வாய்-நாவலடி நோக்கிச் செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக குன்றும் குழியுமாக காணப்படுவ துடன் நாவலடி சந்திக்கருகிலுள்ள பாலமொ ன்று மிகவும் சேதமடைந்து மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் காணப்படுகின்றது.

இவ்வீதியால் தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே உரியதரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-9-24)

# சங்காபிஷேகம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு அருகில் உள்ள குமுழடி விநாயகர் ஆலயத்தில் இருந்து பெண் பக்தர்களினால் பாற்குட பவனியும் ஆரம்பிக்கப்பட்டு ஆலயத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது. (அ-9-10)

# மேதின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் மே தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக் கண்மையில் உள்ள டி.எம்.ஐ. தனியார் கல்வி நிறுவனத்தில் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளதாக தொழிலாளர் ஒத்துழைப்புக்குழு அறிவித்துள்ளது. (அ-9)

# ஆலோசனைக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான 2012 ஆம் ஆண்டிற்கான பாடசாலைக் கல்வி அபிவிருத்திக்கான ஆலோசனைக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலியில் உள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

இக்கூட்டம் புதன்கிழமை நடைபெறவிருந்து பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி,கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-9)


# ஆங்கிலதினப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கோட்டமட்ட ஆங்கில தினப்போட்டிகளுள் எழுத்து மூலப்போட்டிகள் யாவும் இம்மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளன.

எனவே பாடசாலைகள் பங்குபற்றுவோரின் தெரிவுப் பட்டியலை எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் நி.வை.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ)

# அன்பை கொண்டாடுதல்



ஆன்மீகம் 42

### உணர்வுகள்

உங்கள் உடலை ஒரு துணி துவைக்கும் இயந்திரம்போல் நினைத்துக்கொள்ளுங்கள். உங்கள் மனதுதான் துவைக்கப்படவேண்டிய துணிகள். ஒவ்வொரு பிறவியும் ஒரு துவைக்கப்படும் முழு சுற்று (சோப்பு போடுதல் முதல் துவைத்து அலசிக் காய வைத்தல் வரை) சுத்தமான நீர்தான் அன்பு. .அறிவுதான் சோப்புத் தூள் என்று கொள்ளவும். மனமானது உடல் எனும் இயந்திரத்தில் நுழைந்து தன்னை அழுக்கு நீங்கி தூய்மையாக்கிக்கொள்ள விளைகிறது.

நல்ல சோப்புத்தூளுக்குப்பதில் அழுக்கான தூசிகளைச் சேர்த்து துவைத்தால் உங்கள் துணிகள் முன்பைவிட இன்னும் அழுக்காக அல்லவா மாறிவிடும்? மீண்டும் மீண் டும் துணிகளை இயந்திரத்தில் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும்? இந்த வழிமுறை திரும்பத் திரும்பச் செய்யப்படுகிறது. அதேபோல் உங்கள் தவறுகளை நிறுத்தும் வரை மீண்டும் மீண்டும் பிறவி எடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

சண்டைகள் சரிசம பலமானவரோடுதான் நிகழக்கூடும். சண்டையிடுபவரை உனக்குச் சமமாகக் கருதுகிறாய் என்று பொருள். ஆனால், உண்மையில் பார்த்தால் உனக்குச் சற்றுமேல் நிலையிலோ அல்லது கீழ் நிலையிலோ வைத்துப்பார்க்கும் பொழுது சண்டை என்பதேயிருக்காது. உனக்கு மேல் நிலையிலுள்ள மனிதர்களை நீ மதிக்கிறாய். உனக்குக் கீழ்நிலையில் உள்ளவர்களிடம் உனக்குக் கருணையும் அன்பும் ஏற்படுகிறது. எனவே மரியாதையின் பொருட்டோ, இரக்கத்தின் பொருட்டோ சண்டை நின்றுவிடும். ஆனால், இந்தப் பரிசீலனை சண்டைபோட்டு அலுக்கும் போதுதான் தோன்றும். ஓய்வு எடுத்தபின் மீண்டும் சண்டையிட ஆரம்பித்து குறும்புகள் நிகழும்.

இதேதான் மனதின் உண்மை நிலையும். மனது உணர்ச்சிகளோடு பிணைக்கப்பட்டு அல்லது மனதும் உணர்ச்சிகளும் ஒன்று என்று நினைக்கும் பொழுது தொடர்ந்து முரண்பட்டுக் கொண்டேயிருக்கும். அதாவது முரண்பாடுகள் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். ஆனால், மிருகங்களுக்கு உள்ளது போல் உணர்வுகளைவிட மனது சிறியதாக இருக்கும் நிலையில் முரண்பாடு தோன்றாது. மேலும் மனது உணர்வுகளை விடப்பெரியது, சக்திவாய்ந்தது



என்று உணரும் பொழுது முரண்பாடு இல்லை. மனது உணர்வுகளைத் தாண்டி மேம்பட்டு நிற்கும்போது அது தனது இயற்கையான குணத்திற்கு அதாவது வெகுளியான களங்கமற்ற நிலைக்குத் திரும் புகிறது. அதுதான் இன்னோசென்ஸ்.

### பழக்கங்கள்

உங்களால் ஒரு விடயத்தைச் செய்ய முடியவில்லையெனில் உதாரணமாக ஒரு தேவையற்ற பழக்கத்தை விட முடியவில்லையெனில் அது உங்களுக்கு, ஒரு குத்துவது போன்று உறுத்தலைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும். இந்த உறுத்தல் ஆழமாக ஏற்படும் பொழுது அது மிகுந்த வலியைக் கொடுக்கும். அந்தவலி உங்களை அந்தப் பழக்கத்திலிருந்து விடுவித்துவிடும். உங்களது தவறுகள் உங்களுக்கு வலியைக் கொடுத்தால், நீங்கள் ஒரு சாதகர் என்று கொள்ளலாம். வலி உங்களை ஏதோ ஒரு பழக்கத்திற்கு நீங்கள் அடிமையாகியிருப்பதிலிருந்து விடுவித்து விடுகிறது.

### துர்நடத்தை

நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை உற்றுநோக்கினால் உங்களுக்கு ஒன்று விளங்கும். அதாவது ஒரு நல்லவிடயத்தை நினைத்தவுடன் செய்யாமல் தள்ளிப் போட்டுக்கொண்டே போவீர்கள். ஆனால், கெட்டதை உடனே அவசர அவசரமாகச் செய்ய முனைவீர்கள். உதாரணமாக நீங்கள் உங்கள் கோபத்தை உடனே வெளிப்படுத்த நினைப்பீர்கள்.

ஏன் தெரியுமா? நற்குணங்கள் உங்கள் இயற்கை. அது சுலபத்தில் உங்களைவிட்டு நீங்காது. ஆனால், கெட்டவை உங்கள் இயல்பு அல்ல. எனவே அவை உங்களை விட்டு நீங்கிவிட அவசரப்படுகிறது. எதிர் மறை உணர்வுகள் கணத்தில் தோன்றி மறைபவை. நீங்கள் உடனே அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் செயற்படாமல் இருந்தால் குறிப்பாக அதே தீவிரத்துடன் இருக்காது! மெல்லமெல்லக் குறைந்துவிடும். நீங்கள் உங்களது துர்க்குணம் நீங்கிவிடவேண்டும் என்பதில் அக்கறைகொண்டு அக்குணம் தோன்றியவுடன் செயற்படாமல் வாளாவிருந்தால்...சும்மா இருந்தால், அக்குணம் உங்களை விட்டு நீங்கிவிடும்.

எனவே, கெட்டகுணம் தோன்றும் பொழுது அதை செயற்படுத்துவதைத் தள்ளிப்போட வேண்டும். ஏனெனில் அது அவ்வாறு தள்ளிப்

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

போடும் பொழுது தானே நீங்கிவிடும். அதேசமயம் நல்லவை செய்ய நினைத்தால் தள்ளிப்போடாமல் உடனே செயற்படுத்த வேண்டும். தள்ளிப்போட்டுக் கொண்டேயிருக்கக்கூடாது.

(தொடரும்)


# உங்கள் கைரேகை பலன்கள்

## ரேகைகளும் கிரகங்களும்

42

### இருதய இரேகையிலுள்ள குற்றங்குறைகளும் பலாபலன்களும்

2 இருதய இரேகையின் இறுதி முனை, கிளையாய் குருமேட்டை நோக்கியிருந்தால், பலர் கவனிக்கக்கூடிய மனிதராய் இருப்பர். செல்வந்தராக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. இத்தகையோர்பிரசித்தி பெற்றவராயும், மேன்மேலும் உயர்ந்த அந்தஸ்துக்கு உரியவராயுமிருப்பர்.



3 இருதய இரேகையின் கிளை சனி மேட்டில்சென்றிருந்தால், அசுமுக விருத்தியில்மேன்மை பெற்றவராவார். கலை ஞானத்தில் சிறந்தோர்களை நாடியிருப்பர். கையின் மத்திய பாகம் மேடாக இருந்தால், பயிர், சுரங்கம் முதலியவைகளில் சாஸ்திரோத்தமராயீடுபட்டிருப்பர். இத்தகையோர் சாந்தம், பொறுமை, நிதானம் முதலான நற்குணமுள்ளவர்களை நேசிப்பர். உயர்ந்த குணங்களைச் சிலாகிப்பர்.

4 இருதய ரேகையின் கிளை சூரிய மேட்டை நோக்கியிருந்தால் மனோராஜ்யம் செய்வகைக்குறிக்கும். சித்திரக்காட்சிகளைக் காண்பதில் இஷ்டமுள்ளவராயிருப்பர். கையின் மத்திய பாகம் மேடாக இருந்தால், ஓவியத் தொழிலில் பணம் சம்பாதிப்பவராவார். கையின் கடைசியான மூன்றாம் பகுதி மேடாக இருந்தால், சுத்தமாகவும் அழகாகவும்உடைதரிப்பதில் இஷ்டமுள்ள வராயிருப்பார்.

5 இருதய இரேகையின் கிளை புதன் மேட்டை நோக்கியருந்தால் புதனுடைய செல்வாக்கு மிகுந்தவராக இருப்பர். பிரசங்கம் செய்வதில் கீர்த்தி பெற்றவராயும் இருப்பர். கலைகளில் பாண்டித்தியம் பெற்றவராயும் விளங்குவர். கையின் மத்திய பாகம் மேடாயிருந்தால், சாஸ்திர ஆராய்ச்சியில் நுண்ணறிவு உடையவராவர். கையின் கீழ்ப்பகுதி மேடாயிருந்தால் விஷேடமாகப் பணம் சம்பாதிப்பதைக்குறிக்கும்.

**சக்தி**

6 இருதய இரேகையில் அநேக குறுக்கிட்ட சிறு இரேகைகள் பதிந்து காணப்படின் நோயைக்குறிக்கும். குறுக்கிட்ட இரேகைககள் பட்டும் படாமலும் இருந்தால், பாச பந்தத்தால் உண்டாகும் சங்கடத்தைக் குறிக்கும். குறுக்கிட்ட இரேகைகள் தோன்றி மறைவதாயின் இருதய சம்பந்தமான நோயைக் குறிக்கும். சூரிய மேட்டிற்கு நேரே தோன்றும் இரேகைக்குறி எப்பொழுதும் கடுமையான சந்தர்ப்பத்தைக்காட்டும்.



7 இருதய இரேகையில் தீவு க்காணப்படின் அது தேகாரோக்கியம் கெடுவதைக் குறிக்கும் தீவு எவ்வளவுக்குப் பெரிதோ அவ்வளவுக்கு கஷ்டம் அதிகமென கருதவேண்டும். இரேகையில் சிறு புள்ளிகள் தோன்றினாலும் அவ்வளவு கஷ்டம்கொடாது. ஆனால் தீவு அகன்று பதிந்திருந்தால் மிகக் கேடானதாகும்.

8 இருதய இரேகையில் புள்ளிகள் தோன்றினால், ஆரோக்கியக் குறைவைக் குறிக்கும். புள்ளி எவ்வளவு பெரிதோ அவ்வளவுக்கு கெடுதலைக் காட்டுவதாகும். சிறு புள்ளிகள் விஷேடக் கஷ்டத்தை கொடுக்கமாட்டா.புள்ளிபோல் காணப்படும் சில குறி இருதய இரேகையைப் பிரிக்கும் தன்மையிலிருக்கும் இரேகை துண்டுபடக் காரணமாயிருந்தால் மரணஹேதுவான கஷ்டத்தைக் குறிக்கும். அல்லது இருதய சம்பந்தமான நோய் உண்டாவதைக் குறிக்கும்.

(தொடரும்)

# தனியார் பேருந்து ஊழியர்களுக்கும் காப்புறுதி திட்டம் வழங்க நடவடிக்கை

## தே.போ.ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

**தனியார் பேருந்து ஊழியர்களை காப்புறுதி திட்டத்திற்குள் உள்வாங்குவதற்கும் அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவை பெற்றுக் கொடுப்பதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

**வீதி அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் போது நிபந்தனையாக இந்தத் தீர்மானத்தை முன்வைக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அடுத்த மாதம் 31 ஆம் திகதிமுதல் புதிய திட்டத்தை செயற்படுத்த எண்ணியுள்ள நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்,குழுவின் இந்தத் தீர்மானம் தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

தனியார் பஸ் ஊழியர்களை காப்புறுதி செய்யும் திட்டத்தை வரவேற்பதாகவும் இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தமது சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்களின் சம்மேளன செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் கூறியுள்ளார்.

ஆயினும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் உத்தேச திட்டத்தை நிராகரித்துள்ளது. பேருந்து ஊழியர்களை காப்புறுதி செய்து அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கான இயலுமை பஸ் உரிமையாளர்களுக்கு கிடையாது என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறியுள்ளார்.

அத்துடன் இந்த விடயத்தில் பேருந்து சங்கங்களை கட்டாயப்படுத்துவதற்கான அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடையாது.

இதேவேளை, தனியார் பேருந்து ஊழியர்களை காப்புறுதி செய்து அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது என மாகாணங்களுக்கிடையே சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சரத்விஜித்த குமார குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## தமிழ்த்தினப்போட்டி

(மல்லாவி)

துணுக்காய், முல்லைத்தீவு வலயங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட தமிழ்த்தின போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் வலய மட்டங்களில் முதலாம் இடங்களை பெற்ற நிகழ்வுகள் மட்டும் கலந்து கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

(அ-9-15)

# யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவர் இந்தியாவில் கைது

இலங்கையில் இருந்து ஆட்கடத்தல்காரர்களால் அழைத்துவரப்பட்டவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் இல்ங்கையை சேர்ந்த இருவர் கொல்லம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரையும் காவநாட் நகர மக்கள் விசாரித்த போது பதில் எதனையும் உரிய முறையில் வழங்காமையால் தாக்கப்பட்டுள்ளார்கள். இதனால் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் விசாரணையின் போது இருவரும் தாம் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்றும் வெளிநாடு ஒன்றுக்கு செல்வதற்காகவே இந்தியாவுக்கு வந்ததாகவும் தெரிவித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

(அ-2)

# ஆட்சியிலிருக்கும் அரசாங்கமே கறுப்பு சந்தைக்கு சொந்தக்காரர்

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றச்சாட்டு

ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தினரே நாட்டின் கறுப்புச்சந்தைக்கு சொந்தக்காரர்களாவர். அவர்களாலேயே இந்த நாடும் நாட்டு மக்களும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியள்ளார்.

அதிகரித்துசெல்லும்வாழ்க்கை செலவினை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. எனவே, அதனை கருத்திற் கொண்டு சகல தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சம் 7 ஆயிரம் ரூபா சம்பள உயர்வினையாவது பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது,இந்த அரசாங்கம் பொருட்களை இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு வழங்குகின்ற போது கொள்வனவு செய்த விலையை விட பன்மடங்கு வரிகளை உள்ளடக்கியே வழங்குகின்றது. கிட்டத்தட்ட 70 சதவீத வரியினை இவ்வாறு உள்ளடக்குகிறது.

இது ஒருபுறமிருக்க நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரிக்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் தமது வாழ்வை கொண்டு நடத்த முடியாத இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். அதிகரித்து வரும் வாழ்க்கை செலவினை கட்டுப்படுத்த முடியாதுள்ள இந்நிலையில் தொழிலாளர்களுக்கு கணிசமான அளவு சம்பள உயர்வினையாவது பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அரசாங்கம் முன்னெடுக்கும் முறையற்ற வேலைத்திட்டங்களினாலேயே நாடும் நாட்டு மக்களும் இன்று பாரிய பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.


இவ்வாறு நாட்டில் காணப்படுகின்ற மிகப் பெரிய கறுப்புசந்தையே இந்த அரசாங்கம் தான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இது ஒருபுறமிருக்க நாட்டின் ஜனநாயகமும் கேள்விக்குறியாகி வருகிறது.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களை நெருங்கியுள்ள போதிலும் வடக்கில் இன்னும் சரியான நிர்வாகம் தோற்றுவிக்கப்படவில்லை அது மாத்திரமின்றி அவர்களால் சுயமாக எமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. அவர்களை இணைத்துக் கொண்டு அதனை செய்ய முற்படுகின்ற போது அதற்கு அரசாங்கத்தினர் பல்வேறு முத்திரைகளை குத்துகின்றனர்.

எமது கட்சியின் மேதின செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் செய்வதை சிலர் அரசியல் இலாபங்களுக்காக வெவ்வேறு வகையில் வரைவிலக்கணப்படுத்துவதுடன் விமர்சனங்களையும் தெரிவிக்கின்றனர். நாம் அவர்களுக்கு ஒன்றை சொல்கின்றோம். இனியும் வேண்டாம் பிரிவினைவாதம். யாவரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஐக்கியத்துடன் வாழ்வதே சிறந்தது.

(அ-2)






தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் தேசத்தின் பிள்ளைகளுக்காக மனசாட்சியின் உறுதிமொழி என்னும் தொனிப்பொருளில் சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும் அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்குடனும் நாடளாவிய ரீதியில் கையெழுத்து பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் அண்மையில் இந்த கையெழுத்து பெறும் நிகழ்வின் ஆரம்ப விழா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கையெழுத்திடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:– அலுவலகச் செய்தியாளர்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 117



ஹங்கேரியப்படையின் அட்மிரல்
(ஹங்கேரிய தேசத்தைச்சேர்ந்தவன்)

செப்ரெம்பர் 16 ஆம்திகதி சோவியத் இரணுவம் பல்கேரியத் தலைநகராகிய சோபியவினுள் காலடி எடுத்து வைத்தது. சோவியத்யூனியனின் உறுதியான உதவியால் பல்கேரியாவில் சோவியத்புரட்சி வெற்றி பெற்றது. இதன் இடையறாத தாராளமான, தன்னலமற்ற சோதர உதவியின் பயனாய் சுதந்தர பல்கேரிய, - நூற்றாண்டுகளாக தான் பின்னடைந்து இருந்த நிலைக்கு முடிவுகட்டி செழுமையான தொழிற்துறை விவ்சாய சோஷலிச நாடாக மலர்ந்தது என்று பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முதல் செயலாளர் ஜிவ்கவ் கூறினார்.

செப்ரெம்பர் இறுதியில் சோவியத் துருப்புகள் ருமேனிய, ஹங்கேரிய, ருமேனிய-யுக்கோஸ்லாவிய, பல்கேரிய-யுக்கோஸ் லாவிய, பல்கேரிய -கிரீஸ் மற்றும் பல்கேரிய-துருக்கிய எல்லைகளை அடைந்தன. ருமேனி யாவின் பெரும்பகுதியும் பல்கேரியா முழுவதும் பாசிச ஜேர்மனிய ஆக்கி ரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டன. ஹங்கேரியிலும் யுக்கோஸ்லாவியாவிலும் பாசிஸ்டுகளை முறியடிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

கருங்கடற் கப்பற்படையும் துனாய் ப்ளீட்டும் 3-வது உக்ரேனிய சேனைத் துருப்புகளுடன் சேர்ந்து ருமேனியாவிலும் பல்கேரியாவிலுமிருந்த எதிரியின் எல்லா இராணுவ கடற்படைத் தளங்களையும் கைப்பற்றின. ருமேனிய பல்கேரிய மக்களை பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்ததானது 1944 ஆம் ஆண்டு நடைபெற்ற செப்ரெம்பர் சண்டைகளில் பெரும் முடிவாக அமைந்தது. ருமேனிய, பல்கேரிய மக்கள் தமது நாடுகளில் ஆட்சியை தாங்களே எடுத்துக்கொண்டு ஜனநாயக வளர்ச்சிப்பாதையில் உறுதியாக நின்றனர்.

### ஹங்கேரியின் விடுதலை

ருமேனியா விடுவிக்கப்பட்ட பின்னும் ஹங்கேரி தொடர்ந்து பாசிசஜேர்மனியின் கூட்டாளியாக இருந்தது. ஆனால், நாட்டின் உள்நாட்டு அரசியல் நிலவரம் மேன்மேலும் சிக்கலாகி வந்தது. 1944 ஆகஸ்டு 29 இல் ஜெனரல் லகடோஷ் தலமையில் இங்கே ஓர் அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தின் கொள்கையில் பெரும் ஊசலாட்டங்கள் இருந்தன. ஒருபுறம் இது செப்ரெம்பர் 8 ஆம்திகதி நடைபெற்ற தனது கூட்டத்தில் முந்தைய அரசாங்கத்தின் ஜேர்மனிய ஆதரவு நிலையை ஊர்ஜிதப்படுத்தியது. மறுபுறம் ஆங்கிலேயர்கள் அமெரிக்கர்களுடனும் சோவியத்யூனியனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவது அவசியம் என்று கருதியது. அந்நாட்களில் ரிபன்ரோப் எழுதிய கடிதம் இந்த அரசாங்கத்தின் நிலைமீது பெரும் தாக்கத்தை செலுத்தியது. இக்கால கட்டத்தில் கங்கேரியை பாதுகாப்பதாக உறுதியளித்த ஜேர்மனி சாத்தியமான மக்களுடைய போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியது. ஹங்கேரிய சர்வாதிகாரி ஹோர்டி அனுப்பிய பதிலில் முழுவதுமாக ஜேர்னியின் தரப்பில் தான் இருப்பதாக ஹிட்லருக்கு வாக்களித்தான். ஜேர்மனியத் தரைப்படைகளின் பிரதான தலைமையகத் தலைவன் குடேரியானின் கட்டளைப்படி இன்னும் சில ஜேர்மனிய டிவிஷன்கள் ஹங்கேரியினுள் அனுப்பப்பட்டன. சர்வாதிகாரி ஹோர்டி நடத்திய இரகசியக் கூட்டத்தில், நேசநாடுகளுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தைப்பற்றிய கருத்து அரசாங்க உறுப்பினர்களிடையே மேலோங்கி நின்றாலும் செப்ரெம்பர் 11 இல் நடந்த கூட்டத்தில் லகடோஷ் அமைச்சரவை, ஹங்கேரி யுத்தத்திலிருந்து வெளியேறும் யோசனையை பெரும் பான்மையான வாக்குகளால் நிராகரித்தது. ஹங்கேரிய பிரதான படைத் தலைமையகத்தின் தளபதி கேர்னல் ஜெனரல் வேரெஷ்டு கூடுதல் துருப்புகளை கேட்டுப்பெறுவதற்காக ஹிட்லரின் படைத்தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டான்.

ஆனால், செஞ்சேனை ஹங்கேரிய எல்லைகளை நெருங்கி வந்தபோது ஜேர்மனியால் இதன் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாது என்பதை ஹங்கேரிய ஆளும்வட்டாரங்கள் இறுதியாகப் புரிந்து கொண்டன. சோவியத்துருப்புகள் கங்கேரியினுள் நுழைவதைத்தடுக்கும் முகமாக ஹோர்டி தனியான சமரசம் செய்துகொள்ளும் முன்மொழிவுடன் அமெரிக்க பிரிட்டிஷ் அரசாங்கங்களை நாடினான். ஆனால், இந்த முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அப்போது பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஃபரோகோவின் தலைமையில் தனது தூதுக்குழுவை பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக சோவியத் யூனியனுக்கு அனுப்புவதென ஹோர்டிஸ்டுகள் முடிவு செய்தனர். 1944 அக்ரோபர் 1 ஆம்திகதி தூதுக்குழு மாஸ்கோவிற்கு வந்தது. ஸ்டாலினிடம் தருவதற்காக ஹோர்டி தன் பிரதிநிதிகளிடம் ஒரு கடிதத்தை தந்திருந்தான். இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறும் ஜேர்மனியத் துருப்புகள் ஹங்கேரியிலிருந்து தங்குதடையின்றி வெளியேற இடையூறு விளைவிக்க வேண்டாம் என்றும் ஹங்கேரியைப் பிடிப்பதில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகள் பங்கேற்கச் சம்ம திக்குமாறும் இக்கடிதத்தில் கேட்டுக் கொள்ளளப்பட்டிருந்தது. சமரச உடன்படிக்கையில் கையெழுத்திட இத் தூதுக்குழுவிற்கு அதிகாரம் அளிக் கப்படவில்லை. இதற்கான நிபந் தனைகளைப்பற்றி பேசி முடிவு செய்ய மட்டுமே இதற்கு உரிமை இருந்தது. ஹங்கேரித் தரப்பிலிருந்து வந்த இத்தகைய முன்மொழிவு ஏற்கப்பட முடியாதது என்பதும் ஹங்கேரி சரணடைவதப்பற்றிய பிரச்சினையைக் குறித்து தான்பேச வேண்டும் என்பதும் முற்றிலும் புரிந்ததே நிச்சயமாக இது ஹோர்டிக்கும் அவனைச்சுற்றியிருந் தோருக்கும் புரிந்தது. ஆனால், இந்த விளையாட்டில் ஆங்கிலேயர்களையும் அமெரிக்கர்களையும் ஈடுபடுத்தவும் அதிக அனுகூலமான சமரச நிபந்தனைகளைத் தாம் பெறவும் அவர்கள் காலத்தை இழுத்தடிக்க முயன்றனர். குறிப்பாக ஜேர்மனிக்கு எதிராக யுத்தத்தை அறிவிக்க வேண்டியிராத ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க அவர்கள் விருப்பப்பட்டனர்.

(தொடரும்)



ஹங்கேரியப்படை,ஜேர்மனிய டாங்கிஅணிகள்
ஹங்கேரியத் தலைநகரில்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு




ஹங்கேரியப்படை,ஜேர்மனிய
படைகளால்
சுற்றிவளைக்கப்பட்ட
யூதர்கள்



ஹங்கேரியிலிருந்து இடம் மாற்றுவதற்காக கொண்டவரப்பட்டுள்ள யூதர்கள்

# அதிசய உலகம்...

## பிலிப்ஸின் இரு தசாப்தங்களுக்கு ஒளிரக்கூடிய மின்குமிழ்



மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்கக்கூடியதும் சுமார் 20 வருடங்கள் வரை ஒளிதரக்கூடிய எல்.இ.டி மின்குமிழ் தற்போது சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளது. அதாவது சுமார் ஒரு இலட்சம் மணித்தியாலங்கள் இவற்றால் ஒளிரமுடியுமென தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக்காலமாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இம்மின்குமிழானது நெதர்லாந்து நாட்டு நிறுவனமான பிலிப்ஸ் இனால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

அண்மையில் அமெரிக்க அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மின்சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்தும் மின்குமிழுக்கான 10 மில்லியன் டொலர் பரிசினையும் இது வென்றது.

சுமார் 18 மாதங்கள் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே இப்பரிசு வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் இதன்விலை 60 அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்ப டுகின்றது. விலை சற்று அதிகம் தான் என்ற போதிலும் அதன் பாவனைக்காலத்தின் போது சுமார் 165 அமெரிக்க டொலர்கள் வரையான மின்சக்தி செலவினை மீதப்படுத்த முடியுமென பிலிப்ஸ் தெரிவிக்கின்றது. எனினும் சில இடங்களில் இதனை 25 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்ய எதிர்பார்ப்பதாக பிலிப்ஸ் குறிப்பிட்டுள்ளது.

## லொறியை கயிறு கட்டியிழுத்த 101 வயது முதியவர்



இந்திய மாநிலமான தமிழ்நாட்டில் தூத்துக்குடி என்ற இடத்தில் உடற்பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தி 101 வயது முதியவர் மினிலொறியை கயிறு கட்டி இழுத்தார். தூத்துக்குடி முத்தம்மாள் காலனியை அடுத்த நேதாஜி நகரைச் சேர்ந்தவர் பாவா ஜான் ஹாகிப் (101). அண்மையில் உடற்பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தி தனியார் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

மினி லொறியில் கயிற்றைக் கட்டி அதன் மறுமுனையை தனது கைகளில் பிடித்துக்கொண்டு பள்ளிவாசல் முன்பிருந்து 500 மீற்றர் தூரம் வரை இழுத்துச் சென்றார். பாவா ஜான் ஹாகிப் கூறும்போது,

நோயற்ற வாழ்வேகுறைவற்ற செல்வம். உடற்பயிற்சி செய்தால் வாழ்வில் நலமுடன் பலத்துடன் வாழலாம். அதை வலியுறுத்தியே மினிலொறியை இழுத்தேன் என்றார்.

## பியானோவை அசத்தலாக இசைக்கும் சிறுவன்



வெஸ்ட் பொர்ட் நகரத்தை சேர்ந்த ஈதன் வால்மார்க் என்ற ஆறே வயதுடைய சிறுவன் பிரம்மாண்டமான பியானோவை பயன்படுத்தி பில்லி ஜால் என்ற கிளாஸிக் இசையை எவ்வித மான பிழையும் இன்றி வாசித்து அசத்துகின்றான்.

அதேநேரம் தனது திறமையை பயன்படுத்தி சகோதரிக்கும் சிறந்த முறையில் பியானோ இசைக்கும் வித்தையை கற்றுக்கொடுக்கும் ஈமன் தற்போது மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருகின்றான்.

## தமிழக மீனவர்களை கொன்றமைக்காக இலங்கையிடம் இழப்பீடு பெறவேண்டும் மனிதநேய மக்கள் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

தமிழக மீனவர்களை சுட்டுக் கொன்றதற்காக இலங்கையிடமிருந்து இழப்பீடு பெற வேண்டுமென்று சட்டப்பேரவை உறுப்பினரும் மனிதநேய மக்கள் கட்சித் தலைவருமான ஜவாஹிருல்லா வலியுறுத்தியுள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்றுமுன்தினம் சுற்றுலா மற்றும் மீன்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் ஜவாஹிருல்லா கலந்துகொண்டு உரையாற்றினார்.

அப்போது இத்தாலிய கடற்படையால் அண்மையில் கொல்லப்பட்ட 2 மீனவர்களுக்கு தலா ஒரு கோடியை அந்த அரசு வழங்கியது. தமிழகக் கடற்பகுதியில் 500 இற்கும் மேற்பட்ட நமது மீனவர்கள் இலங்கைக் கடற்படைத் தாக்குதலுக்குப் பலியாகியுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிந்துள்ளனர். இலங்கை அரசுமீது இது தொடர்பாக சர்வதேச நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்து உரிய நிவாரணத்தைத் தமிழக மீனவர்களுக்கு பெற்றுத்தரவேண்டுமென அவர் தெரிவித்தார். (அ-2)

## வடக்கில் மலேரியா தாக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக வட பகுதியில் மலேரியா காய்ச்சல் அதிகரித்து வருவதாக மலேரியா தடுப்பு பணியகத்தின் பணிப்பாளர் டாக்டர் சரத் டேனியகே அறிவித்துள்ளார்.

மலேரியா காய்ச்சலினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களைக் குறிப்படலாம் என்று தெரிவித்த அவர்,

யுத்தத்தின் போது அரசாங்கப்படையினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பயன்படுத்தி கைவிடப்பட்ட தளபாடங்கள், பதுங்கு குழிகள் மலேரியா நுளம்பின் இனப்பெருக்கத்துக்கான காரணங்களில் பிரதானமானவை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டில் இருந்து இதன் காரணமாக பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களும் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மலேரியா ஒருவருக்கு தொற்றியுள்ளது என்பதை வைத்தியர்கள் இனம்கண்டு கொண்ட 24 மணித்தியாலங்களுக்கு வட பகுதியில் உள்ளவர்களுக்கு அங்குள்ள சகல பிரதான வைத்தியசாலைகளில் மலேரியா நோய்த்தடுப்பு மருந்துகளைக் கொடுப்பதற்கு சுகாதார அமைச்சு இப்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

1932 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வடமத்திய மாகாணத்திலும் வன்னிப் பிரதேசத்திலும் மலேரியா காய்ச்சலினால் பல்லாயிரக்கணக்கான கிராமத்துமக்கள் மரணமாகினர்.

இதையடுத்து அன்று பதவியில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் குயினின் என்ற புதிய மலேரியா நோய்த்தடுப்பு மருந்தை இலங்கைக்குத் தருவித்து அதனை இப்பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு வழங்கிய தன் மூலம் மலேரியாவினால் ஏற்பட்ட பல்லாயிரக்கணக்கானோரின் உயிரிழப்பை தடுத்து நிறுத்தக்கூடியதாக இருந்தது.

(அ-2)

## லண்டனில் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தும் தமிழ் மாணவன்




லண்டனில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஒலிம்பிக்போட்டிக்காக போட்டி ஆரம்பிப்பதற்கு முன் ஏந்தப்படும் தீபத்தினை ஏந்துவதற்காக தெரிவானவர்களுள் பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் மாணவன் ஒருவனும் தெரிவாகியுள்ளான்.

முருகேசப்பிள்ளை கோபிநாத் (வயது 21). மல்லாவியைச்சேர்ந்த இம்மாணவன் நியூ காஸ்டல் பல்கலைக்கழகத்தில் உயிரியல் மருத்துவபீடத்தில் கல்விபயின்று வருகிறார். ஒலிம்பிக் வரவேற்பு நடைபெற்ற போதும் எத்தனையோ மொழிகளுக்குள்ளும் முதலில் வணக்கம் என தமிழிலேயே ஆரம்பிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தீபம் அலுமினியத்தில் செய்யப்பட்டுள்ளது. இத்தீபத்தில் 8 ஆயிரம் துவாரங்கள் போடப்பட்டிருக்கின்றன. 8 ஆயிரம் துவாரங்கள் போடப்பட்டுள்ள இத்தீபத்தினை 8 ஆயிரம் வீரர்கள் 8 ஆயிரம் மைல்கள் ஓட விருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் மேற்படி தமிழ்மாணவன் என்பது குறிப்பிடத்தக்க பெருமைக்குரிய விடயமாகும். (அ-2-9)

## விவசாயி கொலை; இந்தியர் கைது

(கொழும்பு)

தமிழ்நாட்டில் இருந்து நீண்ட காலத்திற்கு முன் இலங்கைக்கு வந்து அம்பாந்தோட்டை ஹுங்கம பகுதியில் தொழிலாளியாக பணியாற்றி வந்த நபர் ஒருவர் அப்பகுதியில் இடம்பெற்ற விவசாயி ஒருவரின் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்கம பகுதியைச் சேர்ந்த மேற்படி விவசாயி நேற்று முன்தினம் காலை வீதியோரத்தில் சடலமாக காணப்பட்டார். அவர் தாக்கப்பட்டுள்ளதாகவும் இந்தியர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-9)

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

05

**கேள்வி 4:- நீரிழிவு நோயாளி உணவு சாப்பிடுவதில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறை என்ன?**

**பதில்:-** நீரிழிவு நோயாளி பின்வரும் கால அட்டவணையை பின்பற்ற வேண் டும். காலையில் சீனி கலக்காத பால், தேநீர், கோப்பி மற்றும் சிற்றுண்டியாக ஒரு ரொட்டித் துண்டு மற்றும் இரண்டு மூன்று பிஸ்கட்டுகள் சாப்பிடலாம்.

காலை 10-10.30 மணிக்கு ஒரு டம்ளர் மோர் மற்றும் ஒரு பழம் சாப்பிடலாம்.

மதிய உணவாக தவிட்டுடன் கூடிய மாவில் செய்யப்பட்ட 2-3 சப்பாத்திகள், ஒரு கப் வேக வைத்த காய்கறிகள் மற்றும் ஒரு டம்ளர் மோர் சாப்பிடலாம்.

மாலையில் சீனி கலக்காத தேநீர் மற்றும் 2-3 பிஸ்கட்டுகள் சாப்பிடலாம்.

இரவு உணவாக அரிசிக் கஞ்சி அல்லது ரொட்டி, ஒரு கப் வேக வைத்த காய்கறிகள், ஒரு கிண்ணம் தயிர் மற்றும் படுக்க போவதற்கு அரை மணி நேரம் முன்பு சீனி கலக்காத ஒரு டம்ளர் பால் சாப்பிடலாம்.

மேலே கூறப்பட்டுள்ள உணவு முறையினை தேவைக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம். கடுமையான உடலுழைப்பு மேற்கொள்பவர்களுக்கு அதிகமான உணவு தேவைப்படும். அதே சமயம் உடலுழைப்பு குறைவாக இருப்பவர்களுக்கு குறைந்த அளவு உணவே தேவைப்படும். அசைவ உணவு சாப்பிடுபவர்கள் காலை சிற்றுண்டியாக ஒரு முட்டை ஆம்லெட்டும் மதிய உணவில் இறைச்சி அல்லது மீனை சேர்த்து கொள்ளலாம்.

**கேள்வி 5:- நீரிழவு நோயாளிகள் தங்கள் உணவில் இனிப்பு சேர்த்துக் கொள்வது எப்படி?**

**பதில் :-** நீரிழிவு நோயாளிக்கு இனிப்பு சாப்பிட ஆசை இருக்கும். ஆனால், அவர்கள் சீனி சாப்பிட்டால் அது அவர்களுக்கு தீமை விளைவிக்கும். கட்டாயம் இனிப்பு சாப்பிட வேண்டுமென்று அவர்கள் விரும்பினால் சக்ரின் பழச்சீனி (Fructose), Aseortum, Sargitol முதலியவற்றை சேர்த்துக் கொள்ளலாம். இவற்றில் சக்ரின் எளிதாக கிடைக்கும். பொதுவாக இவை அனைத்துமே கடைகளில் கிடைக்கும். தேநீர் அல்லது உணவில் அவற்றை தயாரிக்கும் பொழுது சக்ரின் மாத்திரைகளை அவற்றில் சேர்க்க கூடாது. காரணம் அதிக உஷ்ணத்தில் சக்ரின் மாத்திரைகள் உடைந்து நொறுங்கி கசப்பு சுவையை கொடுக்கும். எனவே, தேநீர் கோப்பி மற்றும் உணவு சூடு குறைவாக இருக்கும் பொழுது அவற்றில் சக்ரின் மாத்திரைகளை போட வேண்டும்.

**கேள்வி 6:- நீரிழிவு நோயாளி இனிப்பு சாப்பிட்டாலோ அல்லது விருந்தில் கலந்து கொண்டாலோ குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட அதிக மருந்து மாத்திரைகள் சாப்பிடலாமா?**

**பதில்:-** கூடாது. இனிப்பு சாப்பிட்டாலோ விருந்தில் கலந்து கொண்டாலோ குறிப்பிட்ட அளவை விட ஒரு மாத்திரையை கூட அதிகம் எடுத்துக் கொள்ளக்கூடாது.காரணம் இரத்தத்தில் சீனியின் அளவு குறையத் தொடங்கும் பொழுது அதனைக் கட்டுப்படுத்த இயலாமல் போய்விடும். அதேபோன்று ஒருவர் மது அருந்தியிருந்தாலும் அவருக்கு மருந்து மாத்திரைகள் கொடுக்கக் கூடாது.

**கேள்வி 7:- நீரிழிவு நோயாளி எவற்றை சாப்பிடலாம், எவற்றை சாப்பிடக் கூடாது?**

**பதில் :- நீரிழிவு நோயாளி சாப்பிடக் கூடாதவை:**

**இனிப்பு:** சீனி, வெல்லம், இனிப்பு வகைகள், மிட்டாய், சொக்லேட், ஐஸ்கிறீம் முதலியவை.

**காய்கறிகள்:** மாச்சத்து நிறைந்த உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு போன்றவை.

**திரவம்:** நெய், நெய்யினால் செய்யப்பட்ட பொருட்கள், வெண்ணெய், கோவா, கிறீம் போன்றவை.

**பழங்கள்:** வாழைப்பழம், மாம்பழம், திராட்சைப்பழம் போன்றவை.

**ஏனையவை:** மைதா, அரிசி, மதுவகைகள், பியர் முதலியவை.

**அசைவ உணவு:** முட்டை மஞ்சள் கரு, ஈரல்

**நீரிழிவு நோயாளி சாப்பிட வேண்டியவை:**

**காய்கறிகள்:** பலாக்காய், பசளைக்கீரை, கத்தரிக்காய், கரட், வெண்டைக்காய், வெந்தயக் கீரை, காலிஃப்ளவர், சோயாபீன்ஸ், பாகற்காய், முட்டைக்கோஸ், பூண்டு முதலியவை.

**திரவம்:** ஆடை நீக்கிய பால், தயிர், பால் கட்டி, ரீஃபைண்டு எண்ணெய்.

**பழங்கள்:** அப்பிள், சாத்துக்குடி, தர்ப்பூசணி போன்றவை

**ஏனையவை:** தவிட்டுடன் கூடிய கோதுமைமா, அரிசியிலுள்ள மாச்சத்து, தந்தூரி, ரொட்டி, போன்றவை.

**கேள்வி 8:- ஒரு நாளைக்கு எத்தனை தடவை ஒரு நீரிழிவு நோயாளி தேநீர் அல்லது குளிர்பானம் அருந்தலாம்.**

**பதில்:-** நீரிழிவுநோயாளி ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவைக்கு மேல் தேநீர் அருந்தக் கூடாது. குறிப்பாக அதில் சீனி சேர்க்கக் கூடாது. சீனி கலக்காத தேநீர் சாப்பிடப் பிடிக்காதவர்கள் சுகர்ஃப்ரீ மாத்திரைகள் சேர்த்து கொள்ளலாம். நீரிழிவு நோயாளி குளிர்பானங்கள் பருகக் கூடாது. காரணம் அதிலுள்ள கலோரி சீனி கட்டுப்பாட்டினை சீர்குலைத்துவிடும்.

**கேள்வி 9:- நீரிழிவு நோயாளி தேநீருடன் பாண் அல்லது பிஸ்கட் சாப்பிடலாமா?**

**பதில்:-** நீரிழிவு நோயாளி தேநீர் சாப்பிடும் பொழுது இரண்டு பாண் துண்டுகளுக்கு மேல் சாப்பிடக் கூடாது. இது போக 3-4 பிஸ்கட்டுகள் சாப்பிடலாம்.பாணை டோஸ்ட் பண்ணியே சாப்பிட வேண்டும். வெண்ணெய், கேக், பேஸ்டி, உருளைக்கிழங்கு சிப்ஸ் முதலியவற்றை சாப்பிடக் கூடாது. காலை சிற்றுண்டி அல்லது தேநீருடன் வெள்ளரி அல்லது தக்காளிசான்ட்வீச்சாப்பிடலாம்.

**கேள்வி 10:- நீரிழிவு நோயாளி உண்ணாவிரதம் இருக்கலாமா?**

**பதில்:-** கூடிய வரை நீரிழிவு நோயாளிகள் உண்ணாவிரதம் மேற்கொள்ளாமல் இருப்பது நல்லது. காலையில் மிதமான சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொண்டு மதியம் அவர்களின் சீனியின் அளவு இரத்தத்தில் மளமளவென்று குறைந்துவிடும். உண்ணாவிரதம் இருக்கையில் அவர்கள் மருந்து மாத்திரைகள் எடுக்காவிட்டால் மறுநாள் அவர்களின் இரத்தத்தில் சீனியின் அளவு எக்கச்சக்கமாக அதிகரித்து விடும்.

## டாக்டர்.A.K.ஜிங்கான்

**கேள்வி 11:- நீரிழிவு நோயாளி அடிக்கடி முட்டை சாப்பிடலாமா?**

**பதில்:-** நீரிழிவு நோயாளி காலை சிற்றுண்டியில் ஒரு முட்டை சேர்த்துக் கொள்ளலாம். அவித்த முட்டை ஒன்று அல்லது இரண்டிற்கு மேல் சாப்பிடக் கூடாது. மஞ்சள் கருவை நீக்கிவிட்டு சாப்பிடுவது நல்லது.

**கேள்வி 12:- நீரிழிவு நோயாளி எந்தெந்த அசைவ உணவு சாப்பிடலாம்?**

**பதில்:-** நீரிழிவு நோயாளி அசைவ உணவு சாப்பிட விரும்பினால் தந்துரி மற்றும் வேகவைத்த கோழி சாப்பிடலாம். இது தவிர பொரித்த மற்றும் அவித்த மீன் சாப்பிடலாம். சிவந்த மாமிசத்தை சாப்பிடக் கூடாது. பட்டர், சிக்கன் மற்றும் சிக்கன் கறி சாப்பிடக் கூடாது. அவற்றில் கொழுப்புச்சத்து அதிகமாக இருக்கிறது.

**கேள்வி 13:- ஒரு நாளைக்கு எத்தனை சக்ரின் மாத்திரைகள் சாப்பிடலாம்?**

**பதில்:-** சக்ரின் மாத்திரை உணவில் சீனிக்குப் பதில் சேர்த்துக் கொள்ளப்படுவதாகும். ஒரு நாளைக்கு 5-6 மாத்திரைகள் சாப்பிடலாம். நாள் ஒன்றுக்கு 60-70 mg க்கு மேல் சக்ரின் மாத்திரை சாப்பிடக் கூடாது.

(தொடரும்)




# வெங்காயத்தின் மருத்துவக்குணங்கள்


வெங்காயம் இல்லாமல் உணவு வகைகளைப் பற்றி யோசிக்கவே முடியாது.

உலகிலேயே முதன் முதலாக எகிப்து நாட்டு மக்கள்தான் வெங்காயத்தை சரியாகவும் அதிகமாகவும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எகிப்திய மக்கள் அந்நாளில் வெங்காயத்தை தெய்வீக அம்சம் பொருந்தியதாக கருதி வந்துள்ளனர். பக்தி பூர்வமாக செய்யப்படும் பெரிய பூஜைகளின் போது வெங்காயமும் வெள்ளைப் பூண்டும் பூஜைக்குரிய மூர்த்திகள் போன்ற மதிப்புடன், மரியாதையுடன் பூஜையில் இடம்பெறுவது வழக்கம்.

பண்டடைய எகிப்திய நீதிமன்றங்களில் வழக்குகளை விசாரிக்கப்படும் போது வாதியும் பிரதிவாதியும் வெங்காயத்தின் மீது சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளுமாறு கோரப்பட்டனர். அத்தனை உயர் ந்த இடம் அதற்கு தரப்பட்டிருந்தது.

### பச்சையாகவே வெங்காயம் சாப்பிடுங்கள்

வெங்காயத்தில் விற்றமின் சி சத்து அதிகமாக உண்டு. குறிப்பாக பச்சை வெங்காயத்தில் இந்தச் சத்து அதிகமாக உண்டு. பெரும்பாலும் வெங்காயத்தை பச்சையாக உண்ணுவதன் மூலமே அதிலுள்ள சத்துக்களை முழுமையாக பெறமுடியும்.



பச்சை வெங்காயத்திலுள்ள கந்தக சத்து சிலருக்கு ஒத்து வராது. அப்படிப்பட்டவர்கள் பிஞ்சு வெங்காயமாக பார்த்து சாப்பிடலாம். முற்றின வெங்காயமாக இருந்தால் வேக வைத்து சாப்பிடலாம்.

### உடல் பருமனை குறைக்க

வெங்காயத்தில் கொழுப்புச் சத்து மிகவும் குறைவு.

அதனால் உடல் பருமனை குறைத்துக் கொள்ள விரும்புவோர் உணவில் வெங்காயத்தை தாராளமாக சேர்த்து கொள்ள வேண்டும்.

### அழகாக மாற

இரத்த விருத்திக்கும் இரத்த சுத்தத்திற்கும் வெங்காயம் மிகவும் உதவிக்கரமாக இருக்கிறது. அதனால் உணவோடு வெங்காயத்தை சேர்த்து கொள்ளும் போது அந்த உணவு வெகு எளிதில் ஜீரணமாக வெங்காயம் உதவுகிறது.

### உஷ்ண கடுப்பு

அகல பல்வேறு காரணங்களால் உஷ்ணம் அதிகரிக்கும் போது வெங்காயம் உடல் உஷ்ணத்தை சமப்படுத்துகிறது. நாடித் துடிப்பை சீராக வைத்திருக்க உதவும் ஆற்றலும் வெங்காயத்துக்கு உண்டு.

### சாதாரண தலைவலி

சாதாரணமாக தலைவலிக்கு வெங்காயத்தை நசுக்கி முகர்ந்தால் உடன் குணம் தெரியும்.

### விசக்கடி

வெங்காயத்தை பாதியாக நறுக்கி தேள், குளவி போன்ற விச ஜந்துக்கள் கடித்த இடத்தில் அழுந்தத் தேய்த்தால் வலி குறையும்.

01

### இருமல்

பொதுவான இருமலுக்கு வெங்காயச்சாற்றை மோருடன் கலந்து குடிக்க குணமாகும். முதுமைப் பருவத்தில் தோன்றுகின்ற கடுமையான இருமலுக்கு வெங்காயத்தை வதக்கி வெல்லம் கலந்து சாப்பிட குணம் தெரியும்.

### மூளையின் சக்தி பெருக

மூளையின்ஆற்றலை வலுப்படுத்தும் சக்தி வெங்காயத்துக்கு இருக்கிறது. அது நல்ல உடல் தேற்றும் டொனிக்காகவும் திகழ்கிறது.

ஆகவே, தினமும் வெங்காயத்தை சூப்பாகச் செய்து அடிக்கடி சாப்பிடலாம். இரவு உறங்கப் போவதற்கு முன்பு ஒரு கோப்பை வெங்காய சூப் சாப்பிடுவது மிகவும் நல்லது. வெங்காயத்தை வேக வைத்து தேன், கற்கண்டு சேர்த்து சாப்பிடலாம்.

**பல்வலி ஈறுவலி:** பற்களில் குறிப்பாக ஈறு பகுதிகளில் வீக்கம் கண்டு சீழ் வடிவதுண்டு. அப்போது வலியும் எரிச்சலும் கடுமையாக இருக்கும். அந்தக் குறைபாட்டை அகற்ற பதமான சுடுநீரில் தாராளமாக வெங்காயச் சாற்றை கலக்கி வாய் கொப்பளிக்க வேண்டும்.

பின்னர் வெங்காயச் சாற்றை கொஞ்சம் பஞ்சில் நனைந்து பாதிக்கப்பட்ட பற்களில் நன்றாக தடவி விட வேண்டும்.

(முற்றும்)

# பேச்சுமூலம் அரசியல் தீர்வு வேண்டுமாயின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வாருங்கள்

## அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா



(கொழும்பு)

**பேச்சுவார்த்தை மூலம் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விரும்புமாயின் உடனடியாக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு தமது கட்சியின் பிரதிநிதிகளை பெயரிட வேண்டும். சபாநாயகரை தொடர்பு கொண்டு இதனை முதலில் செய்ய வேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றை நாட்டுக்குள்ளேயே காண்பதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தடங்கல் நிலைக்கு சென்றுள்ளமைக்கு நாங்கள் காரணமல்ல என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த வாரம் கருத்து தெரிவித்திருந்தமை குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெரிவுக்குழுவில் இடம் பெறாது ஆளும் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை. அனைத்து கட்சிகளும் பேச்சு நடத்தும் இடமே பொருத்தமானதாகும்.

பேச்சுவார்த்தை மூலம் தேசிய பிரச்சினைக்குஅரசியல் தீர்வுகாண தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விருப்பம் அல்லது தயார் எனின் அவர்கள் முதலில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தங்கள் கட்சியின் பிரதிநிதிகளின் பெயர்களை வழங்குவதாகும்.

சபாநாயகரை தொடர்பு கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் இதனை செய்ய வேண்டும். அதாவது கூட்டங்களில் கலந்து கொண்டு இவ்வாறு பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண நாங்கள் தயார் என்று கூட்டமைப்பு கூறுவதில் அர்த்தம் இல்லை.

மாறாக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இந்நிலையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இடம்பெறாத நிலையில் ஆளும் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை என்றே கருதுகின்றோம்.

அதாவது ஆளும் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தனித்து பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை. மாறாக அனைத்து கட்சிகளும் இணைந்து அரசியல் தீர்வுகாண முன்வர வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி என பல கட்சிகள் பாராளுமன்றத்தில் உள்ளன. அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டே இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இடம்பெற வேண்டும் என வலியுறுத்தியிருந்தார் என அமைச்சா தெரிவித்துள்ளார். (அ-2)

# மேமாதம் 3ஆம் திகதி மது ஒழிப்பு வாரம்

## சுகாதார அமைச்சு

நாட்டின்சகலபகுதிகளிலும்நாளைமறுதினம் திகதிமுதல் எதிர்வரும்9 ஆம் திகதிவரை மது ஒழிப்புவாரத்தினை அனுஷ்டிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.வெசாக் தினத்தையொட்டி மதுவுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்ற தொனிப்பொருளில் மதுப்பாவனையை மக்க ளிடையே முற்றாக இல்லாதொழிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

சுகாதார அமைச்சு, கல்வியமைச்சு, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, இளைஞர் விவகார திறன் அபிவிருத்தியமைச்சு என்பன இணைந்து மேற்படித் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லவுள்ளன.

கிராமங்கள்தோறும் செயற்பட்டுவரும் மரண நலன்புரி அமைப்பு, இளைஞர் கழகங்கள், பெண்கள் அமைப்புக்கள் மற்றும் ஏனைய பொது அமைப்பு என்பவற்றின் ஊடாக மதுவுக்கு முற்றுப்புள்ளி திட்டத்தினை மேலும் வெற்றிகரமாக முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் என்.ஜீ.பண்டிதரெட்ன தெரிவித்துள்ளார். (அ-2)

# ஐ.தே.க.வினர் கழுதைத்தீவில் மேதின ஊர்வலத்தை நடத்த வேண்டும்

## சப்ரகமுவ மாகாண முதலமைச்சர்

(கொழும்பு)

ஐ.தே.க.வினர் கழுதைத்தீவில் மே தின ஊர்வலத்தை நடத்த வேண்டும என சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் கோரியுள்ளார்.

அப்படியான தீர்மானமொன்றை அவர்கள் மேற்கொண்டால் ஆதரவாளர்களின் போக்குவரத்து முதலான பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனவும் ஐ.தே.க.வின் மே தின ஊர்வலத்தை நடத்துவதற்கு புத்தளம் பொருத்தமான இடம் என தான் யோசனை கூறுவதாகவும் பலாங்கொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மே தின ஊர்வலத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டுமென ஐ.தே.க. தலைவரான ரணில் விக்ரமசிங்க கூறும்போது,

கொழும்பில் நடைபெறும் ஆர்.பிரேமதசவின் நினைவு தினக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கட்சி அனுதாபிகளை அக்கட்சியில் மாற்றுக்குழுவின் தலைவர்களான சஜித் பிரேமதாச, கரு ஜயசூரிய முதலானோர் தொடர்ச்சியாக கோருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு படையினரை குறைத்து மதிப்பிட்ட எம்.பி.களான லக்ஷ்மன் கிரியெல்ல, ரவி கருணாநாயக்க முதலானோர் யாழ்ப்பாணத்தில் அம்பலமாவார்கள். எல்.ரி.ரி. ஈ.யினால் படுகொலை செய்யப்பட்ட லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்க, ரணசிங்க பிரேமதாச முதலான தேசாபிமான தலைவர்களை அவர்கள் மறந்துவிட்டார்கள் எனவும் மஹிபால ஹேரத் கூறினார்.

ஐ.தே.க. தலைவர்கள் வெறும் பொம்மைகள் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான இரகசிய ஒப்பந்தத்தின் கீழ் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு செல்வார்கள் எனவும் அவர் கூறினார். (அ-2)

# கொழும்பு துறைமுகத்திற்கு அப்பால் 4 கப்பல்கள்

சுமார் 2 ஆயிரம் வாகனங்களைக் கொண்ட நான்கு கப்பல்கள் கடந்த இரண்டு வாரங்களாக கொழும்பு துறைமுகத்திற்கு அப்பால் தரித்து நிற்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

துறைமுகத்தில் இந்த வாகனங்களை இறக்க வைப்பதற்கான இடம் போதாமை காரணமாக இந்தக் கப்பல்களை துறைமுகத்துக்குள் கொண்டு வருவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை வாகன விற்பனையாளர்கள் துறைமுகத்தில் இருந்து எடுத்து செல்லாமையே இதற்கான காரணமாகும்.

அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வாகன இறக்குமதி தீர்வைகளை அதிகரித்தது. இதன் காரணமாக அதிகரித்த தீர்வுகளின் அடிப்படையில் தாம் இறக்குமதி செய்த வாகனங்களை வாகன இறக்குமதியாளர்கள் துறைமுகத்தில் இருந்து எடுத்து செல்வதில் தாமதப் போக்கை காட்டி வருகின்றனர்.

ஏற்கனவே தாம் கொடுப்பனவை செலுத்த தீர்மானித்திருந்த இறக்குமதி தீர்வையை காட்டிலும் தற்போது அதிக தீர்வையை செலுத்தி வாகனங்களை எடுத்துச் செல்வதன் மூலம் பாவனையாளர்களுக்கு அதிக விலைகளில் வாகனங்களை விற்பனை செய்ய முடியாதிருக்கும் என்பதே அதற்கான காரணமாகும்.


இந்தநிலையில் வாகன தீர்வைகள் அதிகரிக்கப்பட்ட பின்னர் நான்கு கப்பல்களில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவையும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

எனினும் ஏற்கனவே வந்த வாகனங்களை இறக்குமதியாளர்கள் எடுத்துச் செல்லாமை காரணமாக இந்த நான்கு கப்பல்களும் துறைமுகத்துக்கு தூரத்தே தரித்து நிற்கின்றன.

இதன் காரணமாக இந்தக் கப்பல்கள் தாமத கட்டணங்களாக துறைமுக அதிகார சபைக்கு சுமார் ஒரு மில்லியன் ரூபாய்களை மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வாகனங்களுக்கான தீர்வை அதிகரிப்பை அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாக வாகன இறக்குமதிகளை மேற்கொள்ளும் போது குறைக்க முடியும் என்று அரசாங்கம் வாகன இறக்குமதியாளர்களுக்கு உறுதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)







க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு -2012 இற்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் 2011 ஆம் ஆண்டு க.பொ.த.(உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொண்ட மாணவனுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள். என்.குமார்)

# "போர்க்குற்றங்கள் குறித்து பேசவில்லை"

## மாணிக்கம் தாகூர் எம்.பி. செவ்வி!


ஆறு நாட்கள் சுற்றுப்பயணமாக இலங்கைக்குச் சென்ற இந்திய நாடாளுமன்ற குழுவினர் கடந்த 21 ஆம் திகதி இந்தியா திரும்பி விட்டனர். ஒட்டு மொத்தமாக ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு பிரதமர் மன்மோகனிடம் ஒப்படைக்கப்படுகிற அதேவேளையில் காங்கிரஸ் எம். பிக்கள் மட்டும் தனியாக ஒரு அறிக்கையை கொடுக்கவும் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தப் பயணத்தின் போது ராஜபக்ஷவை தனியாகவும் குழுவினரோடும் சந்தித்த எம்.பிக்கள் குழுவின் தலைவர் சுஷ்மா சுவராஜ் மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் சிறப்பாகவே இருக்கின்றது. 13 ஆவது சட்ட திருத்தத்தை அமுல்படுத்தவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றவும் வலியுறுத்தினேன். அதை செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறார் ராஜபக்ஷ என்றவர் தமிழீழம் தொடர்பான கேள்விகளுக்கு பதில் சொல்வதைத் தவிர்த்தார்.

தமிழகத்தை சேர்ந்த மார்க்ஸிஸ்ட் எம்.பி.,டி.கே.ரங்கராஜன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரையும் ஏனைய சில தமிழர் அமைப்புகளையும் சந்தித்து விவாதித்த போது தமிழீழத்தை அவர்கள் ஏற்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் கூடுதல் அதிகாரங்கள் வேண்டுமென்றுதான் விரும்புகின்றனர் என்கிறார். இந்த சூழலில் இலங்கைக்கு சென்ற தமிழக காங்கிரஸ் எம்.பிக்களில் ஒருவரான மாணிக்கம் தாகூரை சந்தித்தோம்.



மக்களை சந்தித்தும் பேசியது அவர்களிடமிருந்து இன்னும் பயம் விலகவில்லை. இராணுவத்தின் கெடுபிடிகளை தெரிவித்த தமிழர்கள் சாவு நடந்தாலும் சடங்கு நடந்தாலும் இராணுவத்திடம் சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டுதான் ஏனைய காரியங்களை பார்க்க வேண்டிய நிலை இருக்கு என்று சொன்னார்கள்.

(மெனிக்பாம்) மற்றும் சில முகாம்களுக்கு சென்றோம். இரண்டு இரண்டு பேராக இணைந்து ஒவ்வொரு பகுதியாக சென்று மக்களிடம் பேசினோம். மெனிக்பாமில் மட்டும் 6 ஆயிரம் இருக்கிறார்கள். அவர்களில் பலபேர் விதவைக்ள். அதுவும் 23, 25 வயது இளம் விதவைகள்தான் அதிகம். சுமார் 45 ஆயிரம் விதவைகள் இருப்பதாக ஒருசோக புள்ளிவிபரத்தை கொடுத்தனர். தமிழ்ப் பெண்கள் சிலரை



தனியாக அழைத்து இராணுவத்தின் பாலியல் ரீதியான சித்திரவதைகள் இருக்கிறதா என்று கேட்டேன். அதற்கு அந்த சித்திரவதை எனக்கு ஏற்படவில்லை. ஆனா அப்படிப் பட்ட துன்புறுத்தல்கள் பல பகுதிகளில் நடப்பதாக கேள்விபடுகின்றோம் என்று சொன்னார்கள். முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்களிடம் எங்களை எங்கட இடத்துத்துக்கு அனுப்பி வையுங்கள் என்பதுதான் அழுத்தமான கோரிக்கையாக இருந்தது. தமிழகத்தில் இருப்பது போல பல இடங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களை தங்களுக்

நக்கீரன்

குள்ளேயே அமைத்து அதன் மூலம் தங்களின் தேவைகளை நிறைவேற்றிகொள்வதையும் பார்க்க முடிந்தது.

**தமிழர் பகுதிகளில் 70 சதவீத வளர்ச்சி பணிகளை சிங்கள அரசு நிறைவேற்றியிருப்பதாக சொல்வது உண்மைதானா?**

ராஜபக்ஷ அரசு அப்படி சொல்லியிருந்தால்... அது கப்ஸாதான். தமிழர் பகுதிகள் எப்படி இராணுவமயமாக்கப்பட்டிருக்கிறதோ அதே போல சிங்களகுடியேற்றமும் புத்த விகாரைகள் நிறுவுவதும் அதிகரித்தே கிடக்கின்றன. தமிழர்களுக்காக 50 ஆயிரம் வீடுகள் கட்டும் இந்திய அரசின் திட்டத்தில் வருடத்திற்கு ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

ராஜபக்ஷ அதன்படி போர் முடிந்த இந்த 3 ஆண்டுகளில் 3 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், வெறும் 300 வீடுகள் அளவில்தான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல பாடசாலைகள் கட்டுவதிலும் சுணக்கம் இருக்கிறது.

அதைக் காட்டிலும் ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிகம். அதை அங்குள்ள தமிழர்கள் மூலம் அறியும் போது தமிழகத்தில் எத்தனையோ ஈழத் தமிழர்கள் ஆசிரியர் படிப்பு முடித்து வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை தமிழர் பகுதியில் ஆசிரியர் பணியில் அமர்த்தலாம் என்கிற யோசனை வந்தது. அப்துல் கலாம் இலங்கையில் அறிமுகப்படுத்திய மும்மொழித் திட்டத்தின்படி ஒவ்வொரு தமிழனும் சிங்களம் படித்தே ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

**தனித் தமிழீழம் என்பது பற்றி மக்களின் சிந்தனை எப்படி இருக்கிறது?**

இது குறித்து அவர்களிடம் கருத்து கேட்கவில்லை. ஆனால், இலகை அரசாங்கத்தின் மீதும் இலங்கை இராணுவத்தின் மீதும் தமிழர்களுக்கு இருக்கும் பயம் அதிகரித்தே கிடப்பதால் வேறுவழி தெரியாத நிலையில் சிங்களத்துடன் தமிழர்கள் இணைந்திருப்பது போல ஒரு தோற்றம் இருக்கிறது. தவிர டக்ளஸ், கருணா, பிள்ளையான் போன்றவர்களால் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்படுவதாலும் தமிழீழ சிந்தனையை எங்களிடம் தெரிவிக்க விரும்பாமல் இருந்திருக்கலாம்.



**ராஜபக்ஷவுடனான சந்திப்பில் தமிழர்கள் நலன் சார்ந்து உங்களால் விவாதிக்க முடிந்ததா?**

எல்.எல்.ஆர்.சி. அறிக்கையினை அமுல்படுத்துங்கள் என்று வலியுறுத்தினோம். ஆனால், அதை என்னால் தனிப்பட்ட முறையில் செய்ய இயலாது. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வோம். நாடாளுமன்றம் தான் முடிவெடுக்கும் என்றார்.

ராஜபக்ஷ இராணுவத்தின் கெடுபிடிகளை சுட்டிக்காட்டிய போது அருகில் இருந்த அதிகாரிகளை பார்த்து சிங்களத்தில் திட்டினார். அது என்னென்னு புரியவில்லை. எங்க பக்கம் திரும்பி, இனி அந்த கெடுபிடிகள் இருக்காது என்றார். மேலும் தமிழர் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற போது நோ சான்ஸ்.

தமிழர் பகுதி என்றும் எதுவும் கிடையாது. ஏனைய பகுதிகளில் இராணுவம் எப்படி நிலைநிறுத்தப்பட்டுள்ளதோ... அப்படித்தான் அங்கும் என் நாட்டுக்குள் இராணுவத்தை நிறுத்தாமல் வேறு எங்கு போய் நிறுத்த முடியும்? என்று கோபத்துடன் மறுத்தார். 13 ஆவது சட்ட திருத்தத்தையும் அதற்கு அப்பாற்பட்டும் தமிழர்களுக்கான அரசியல் உரிமை குறித்து வலியுறுத்தியபோது முயற்சிக்கின்றேன் என்றதோடு மேற்கொண்டு விவாதிக்க விரும்பவில்லை அவர்.

**இலங்கையில் நடந்த மனித உரிமைகளுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் இந்தியாவின் ஆதரவுடன் நிறைவேறியது. இந்தச் சூழலில் ராஜபக்ஷவிடம் போர்க்குற்றங்கள் குறித்து விவாதித்தீர்களா?**

உண்மையைச் சொல்லணும்னா... போர்க்குற்றங்கள் குறித்து இந்தியக் குழு எந்தக் கேள்வியும் எழுப்பவில்லை.

*ஆர். இளையசெல்வன்*

# தீர்வுத்திட்ட பேச்சுக்களின் போது நிபந்தனைகளை அரசு விதிக்கக்கூடாது

## அமைச்சர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கம் எவ்விதமான நிபந்தனைகளையும் விதிக்காது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்க வேண்டும். அதேபோன்று கூட்ட மைப்பினர் பாராளுமன்ற தெரிவுக்குழுவை புறக்கணிக்கக்கூடாது என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

அரசியல் தீர்வுத் திட்டம் என்பது இன்று நாட்டில் அத்தியாவசியமான விடயமாகவே காணப்படுகிறது. எனவே, ஏனைய அரசியல் கட்சிகளும் சாதகமான தீர்வொன்றுக்கு பங்களிப்புக்களை செய்ய வேண்டுமே தவிர கடந்த கால தவறுகளை சுட்டிக்காட்டி விமர்சிப்பது நாகரிகமான விடயமல்ல.

இன்றைய தினம் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் தினம். இதனை அனைத்து கட்சிகளுமே உள்நாட்டில் வேறுபாடுகளை மறந்து உழைக்கும் மக்களின் எழுச்சிக்காக பல்வேறு கூட்டங்களை நடத்துகின்றன. இவ்வாறு அனைத்து அரசியல்கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

அரசியல் தீர்வுத்திட்டத்தில் பங்கெடுக்கும் இரு பிரதான தரப்புக்களுமே வெளிப்படைத் தன்மையை பாதுகாக்க வேண்டும். அத்துடன் நேர்மையும் விட்டுக் கொடுப்பும் மிகவும் அவசியமாகும். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பாரிய பொறுப்பே தவிர கூட்டமைப்பிற்கு மட்டுப்பட்ட விடயமல்ல. எனவே, தீர்வுத்திட்ட பேச்சுவார்த்தைகளில் எவ்விதமான நிபந்தனைகளையும் அரசாங்கம் முன்வைக்கக் கூடாது.

ஏனெனில் இவ்வாறு நிபந்தனைகளை முன்வைப்பதால் அநாவசியமான சந்தேகங்களே ஏற்படும். தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அரசியல் உட்பட அனைத்து பிரச்சினைகள் குறித்தும் அதற்கான தீர்வுத் திட்டங்கள் குறித்தும் எல்லைகளிட்டோ நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டோ பேசுவதால் பயன் ஏற்படப்போவதில்லை. இதனை இரு தரப்புகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய சந்தர்ப்பங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவறவிடக்கூடாது. எனவே, பாராளுமன்ற தெரிவுக்குழுவை அரசியல் தீர்விற்காக கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார். (அ-2)

## மாபெரும் பொதுக்கூட்டம்

மேதினத்தையொட்டி மன்னாரிலுள்ள பொது அமைப்புகளின் ஒன்றியம் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றை இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் தொழிலாளர்களின் உரிமைக்காக ஒன்றிணைந்து குரல்கொடுக்கும் வகையிலும் அவர்களது அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் மேதினத்தையொட்டி மாபெரும் பொதுக்கூட்டத்தை நடத்தவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அனைவரையும் அணிதிரண்டு வருமாறு மன்னார் மாவட்ட பொது அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-2)

# முஸ்லிம் சமூகத்தின் இறைமைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்

## உலகத் தமிழர் பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலுக்கு எதிராக லண்டனை தலைமையகமாக கொண்ட உலக தமிழர் பேரவை மற்றும் ஒரு முன்னணியை உருவாக்கியுள்ளதாக இலங்கையின் த. ஐலண்ட் நாளிதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாகவும் அந்த செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் இறைமைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. பெரும்பான்மையின பௌத்த பிக்குகளே தம்புள்ள பள்ளிவாசலை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் சர்வாதிகார வழிகளை கையாள்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வழி காட்டலிலேயே சிறுபான்மையினருக்கான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இதற்கு உதாரணமாக ஆளும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, தம்புள்ள பள்ளிவாசல் தகர்க்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் இல ங்கை அரசாங்கம் பௌத்த விகாரைகளை அமைத்து வருவதும் இந்து மற்றும் கிறிஸ்தவ கோயில்களை நிர்மாணிக்க மறுத்துவரும் நடவடிக்கைகளும் இடம்பெறுவதாக உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இலங்கை அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் உலக தமிழர் பேரவை தம்புள்ள பள்ளிவாசல் விடயத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முனைவதாக குற்றம் சுமத்தியுள்ளார் என்று அப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பாருக் எம்.பியின் சகோதரர் மீது கடற்படையினர் தாக்குதல்

(கொழும்பு)

அரச தரப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குனைஸ் பாருக்கின் சகோதரர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் மீது கடற்படையினரே தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிலாபத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சகோதரர் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை பகுதியில் வைத்து கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று குறித்த பொலிஸ் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-2)



*மாறிவரும் பொருளாதாரச் சூழலில் சமூகத்தின் பங்கு* எனும் கருப் பொருளிலான மாதாந்த ஆய்வரங்கு அண்மையில் சொண்ட் நிறுவனத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா, மத்திய வங்கியின் வட மாகாண சிரேஷ்ட முகாமையாளர் ப.சிவதீபன் ஆகியோர் விரிவுரை ஆற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மேற்குலக நாடுகளின் செயற்பாடுகளால் உலகில் காலநிலை மாற்றம் ஏற்படுகின்றது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் காரணமாகவே உலகில் கால நிலை மாற்றங்கள் விரைவாக சம்பவிக்கின்றன என எரிசக்தி மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

பூட்டான் கைத்தொழில் வாணிபப் சபையும் *சார்க்* வலய கைத்தொழில் வாணிபச் சபையுடன் இணைந்து பரோ நகரில் ஏற்பாடு செய்த காலநிலை மாற்றம், எரிசக்தி ஒத்துழைப்பு தொடர்பான தெற்காசிய வலய மாநாட்டில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வளர்ச்சி அடைந்துள்ள மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் காரணமாகவே காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. கால நிலை மாற்றம் காரணமாக வலயத்தில் எரிசக்தி உற்பத்தி, வர்த்தகம், விநியோகம் தொடர்பாகச் சிக்கல்கள் உள்ளன.

எமது வலயத்தில் இலங்கையும் தென் இந்தியாவும் வளி மூலமான எரிசக்தியை உற்பத்தி செய்ய மிகப் பொருத்தமான நாடுகளாக இனம் காணப்பட்டுள்ளன என்றார். பூட்டான் பிரதமர் ஜிக்மே நில்லே மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (அ-2)

# அப்பாவி தமிழ் மக்களோடு விளையாட இது தருணமல்ல

## கே.பி.கூறுகிறார்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகள் முரண்பாட்டு அரசியலை கைவிட வேண்டுமென புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியில் சிறுவர் இல்லமொன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கைச் சேர்ந்த அப்பாவி தமிழ் மக்களை சில புலம்பெயர் புலி ஆதரவு தமிழர்களும் தமிழ் அரசியல்வாதிகளும் தங்களது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.


ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் பொது மக்களோடு விளையாட இது தருணமல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் அனுபவித்த பல்வேறு இன்னல்களிலிருந்து விடுபடவே மக்கள் விரும்புவதாகவும் கடந்த காலங்களில் இழைத்த அதே தவறினை மீள இழைக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக வடக்கில் பெரும் எண்ணிக்கையிலான கணவனை இழந்த பெண்களும் அநாதைச் சிறுவர், சிறுமியரும் உருவாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான நிலைமைகளை மிகவும் நிதானமாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். (அ-2)

# புலிகளால் உருவாக்கப்பட்ட ஆயுதங்கள் மக்கள் பார்வைக்கு



(முல்லைத்தீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்ட போராயுதங்களை போர் நினைவுச் சின்னமாக பாதுகாத்து வைத்திருக்கும் அரசாங்கம் முல்லைத்தீவில் வைத்துள்ளது.

கடந்த வாரம் புதுக்குடியிருப்பு- முள்ளிவாய்க்கால் வீதி திறக்கப்பட்டுள்ள நிலையில் முன்னர் சிங்கள மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த தமிழரின் சொத்துக்களை மீண்டும் தமிழர்கள் காணக்கூடியதாகவுள்ளது.

இவற்றில் புலிகளால் தமது சொந்த முயற்சியால் உருவாக்கி எடுக்கப்பட்ட பாரிய படகுகள், சிறிய நீர் மூழ்கி கப்பல்கள் மற்றும் போர் ஆயுதங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த காட்சிக் கூடத்தை தினசரி பெருமளவான மக்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

இதனை கடந்த சில தினங்களாகவே தமிழர்கள் சென்று பார்வையிட்டுத் திரும்புகின்றனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.05 01

★ 1328- ஸ்கொட்லாந்தைத் தனிநாடாக இங்கிலாந்து அங்கீகரித்தது. ஸ்கொட்லாந்து விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1707- இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து இணைக்கப்பட்டு பெரிய பிரித்தானியா என்ற ஒரு நாடாகியது.

★ 1778- அமெரிக்கப் புரட்சி பென்சில்வேனியாவின் ஹாட்பரோ என்ற இடத்தில் பிரித்தானியப் படையினர் பென்சில்வேனியா துணை இராணுவத்தினர் மீது திடீர்த் தாக்குதலை நிகழ்த்தி 26 பேரைக் கொன்று 58 பேரைக் கைது செய்தனர்.

★ 1834- பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.

★ 1840- உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டக்கூடிய தபால்தலை பென்னி பிளாக் ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.

★ 1851- லண்டனில் பெரும் பொருட்காட்சி விக்டோரியா மகாராணியினால் திறந்து வைக்கப்பட்டது.

★ 1886- ஐக்கிய அமெரிக்காவில் 8 மணிநேர வேலை நாளை அறிவிக்க வேண்டி வேலைநிறுத்தம் ஆரம்பமானது. இந்நாள் பின்னர் மே நாள் எனவும் தொழிலாளர் நாள் எனவும் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

★ 1891- பிரான்சில் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது படையினர் சுட்டதில் 9 பேர் கொல்லப்பட்டு 30 பேர் காயமுற்றனர்.

★ 1898- அமெரிக்கக் கடற்படையினர் மணிலா விரிகுடாவில் ஸ்பானிய கடற்படைக் கப்பலை தாக்கியழித்தனர்.

★ 1900- ஐக்கிய அமெரிக்காவின் யூட்டா மாநிலத்தின் ஸ்கொஃபீல்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற சுரங்க விபத்தில் 200 பேர் உயிரிழந்தனர்.

★ 1915- ஆர்.எம்.எஸ். லூசித்தானியா என்ற கப்பல் தனது 202 ஆவதும் கடைசியுமான பயணத்தை நியூயோர்க் நகரில் இருந்து ஆரம்பித்தது. இது புறப்பட்ட ஆறாவது நாள் அயர்லாந்துக் கரைக்கருகில் மூழ்கியதில் ஆயிரத்து 198 பேர் உயிரிழந்தனர்.

★ 1925- சீனாவில் அனைத்து சீன தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இன்று 134 மில்லியன் உறுப்பினர்களுடன் உள்ள உலகின் மிகப்பெரிய தொழிற்சங்கம் ஆகும்.

★ 1930- புளூட்டோவின் பெயர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

★ 1931- நியூயோர்க் நகரில் எம்பயர் ஸ்டேட் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

★ 1940- கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் போர் க்ாரணமாக நிறுத்தப்பட்டன.

★ 1941- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் கிரேக்க தீவான கிறீட் மீது மிகப் பெரும் வான் தாக்குதலை நிகழ்த்தினர்.

★ 1945- சோவியத் இராணுவத்தினர் பேர்லினில் நாடாளுமன்றக் கட்டடத்தில் சோவியத் கொடியை ஏற்றினார்கள்.

★ 1946- மேற்கு அவுஸ்திரேலியாவில் பில்பாரா என்ற இடத்தில் அவுஸ்திரேலியக் பழங்குடிகள் மனித உரிமை, போதுமான சம்பளம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 3 ஆண்டுகள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

★ 1948- கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது. கிம் உல்-சுங் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.

★ 1950- குவாம் ஐக்கிய அமெரிக்காவின் பொதுநலவாயத்தில் இணைக்கப்பட்டது.

★ 1956- இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1960- மகாராஷ்டிரா மாநிலம் அமைக்கப்பட்டது.

★ 1961- கியூபாவை சோஷலிச நாடாகவும் தேர்தல் முறையை ஒழித்தும் அதன் பிரதமர் பிடெல் காஸ்ட்ரோ அறிவித்தார்.

★ 1977- தொழிலாளர் நாள் நிகழ்வின் போது துருக்கியின் இஸ்தான்புல் நகரில் 36 பேர் உயிரிழந்தனர்.

★ 1978- ஜப்பானியரான நவோமி யூமூரா தன்னந்தனியாக வட முனையை அடைந்த முதல் மனிதராவார்.

★ 1987- இரண்டாம் உலகப் போரின் போது அவுஷ்விட்ஸ் வதை முகாமில் கொல்லப்பட்ட யூதப் பெண்மதகுரு ஈடித் ஸ்டெயின் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டார்.

★ 1993- இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா மே தினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுத்தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார்.

★ 2004- சைப்பிரஸ் செக் குடியரசு எஸ்தோனியா, ஹங்கேரி, லாத்வியா, லித்துவேனியா, மால்ட்டா, போலந்து, சிலவாக்கியா, சிலவேனியா ஆகியன ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தன.

★ 2006- புவேர்ட்டோ ரிக்கோ அரசு நாட்டின் பணவீக்கம் காரணமாக பாடசாலையும் அரசு நிறுவனங்களையும் மூடியது.

### பிறப்புக்கள்

★ 1951- கோர்டன் கிரீனிட்ச், மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் துடுப்பாளர்.

★ 1971- அஜித்குமார், தமிழ்த் திரைப்பட நடிகர்.

### இறப்புக்கள்

★ 1965- ஜி. என். பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைப் பாடகர், நடிகர் (பி.1910)

★ 1993- ரணசிங்க பிரேமதாசா, இலங்கை முன்னாள் ஜனாதிபதி (பி.1924)

### சிறப்பு நாள்

★ மே நாள்- உலகத் தொழிலாளர் நாள்

★ இத்தாலி- தேசிய நாள் (Giorno dei Lavoratori)

★ செக் குடியரசு- தேசிய காதல் நாள்

# தேசப்பற்று, தேசத்துரோகம் இவற்றிற்கு அரசு கொடுக்கும் வரைவிலக்கணம்....?



இலங்கையின் பன்மைத்துவம் பற்றி ஜெனிவாவில் பெருமையாகப் பிரஸ்தாபிக்கையில் அங்கு அமைச்சர் ஹக்கீமின் பிரசன்னமும் அதற்கு வலுச் சேர்த்திருந்ததை ஞாபகப் படுத்திக் கொள்வோம். பன்மைத்துவத்தின் உண்மையான இலட்சணம் பள்ளிவாசல் இடிப்பு வடிவில் பறைசாற்றப்பட்டது.

இச்சம்பவம் இலங்கைச் சமூகத்தின் பன்மைத்துவம் தொடர்பில் சில வினாக்களை எழுப்பி நிற்கின்றது. நாட்டில் எல்லோருமே சட்டத்தின் முன் சமனாக உள்ளார்களா? சட்டத்தின் சமமான பாதுகாப்பு யாவருக்கும் கிடைக்கின்றதா? தேசப்பற்றும் சட்டத்தின் ஆட்சியும் ஒன்றோடொன்று முரண்படும் நலன்களா அல்லது ஒன்றையொன்று பரஸ்பரரிதியில் உறுதிப்படுத்தி நிற்பவையா? பெரும்பான்மை இனத்தின், மதத்தின் நலன்கள் என்று வரும்போது சட்டத்தின் ஆட்சி மௌனிக்கின்றதா? இப்படித் தொடர்ந்து கேட்டுக் கொண்டே போகலாம்.

இலங்கையில் எல்லா மக்களும் சமமானவர்கள் என்றும் அவர்கள் எந்த உரிமையாயினும் அனுபவிப்பதில் எவ்விதத்தடையும் கிடையாது என்றும் ஆள்வோர் ஆண்டாண்டு காலமாகச் சொல்லி வருகின்றார்கள். அதற்கு ஆதாரமாக அரசியலமைப்பையும் ஏணைய சட்டங்களையும் அடுக்கிக் கூறுவார்கள் உள்நாட்டில் மட்டுமன்றிச் சர்வதேச அரங்குகளிலும் இத்தகைய அச்சடிப்புக்களைக் காட்டியே காரியம் சாதித்துவிட அரசாங்கம் எப்போதுமே முனைப்புக் காட்டுவதுடன் அதில் பலதடவைகளில் வெற்றியும் பெற்றுள்ளது.



நாட்டில் எல்லா இனங்களும் மதப்பிரிவினரும் எவ்வித பிணக்குமின்றி வாழ்கின்றார்கள், சிறுபான்மையின அரசியல்வாதிகளே குட்டையைக் குழப்புகின்றார்கள், என்றவாறான அண்மைக்கால வாய்பாடு ஒன்றும் உள்ளது. போர் முடிந்த கையுடன் அமைதி திரும்புவதற்கான கால அவகாசத்தை வழங்குங்கள் என்றுதான் அரசாங்கம் சர்வதேச அரங்கில் கோரிக்கை வைத்தபடி உள்ளது.

முதலில் உள்நாட்டச் சட்டத்திற்குள் நிவாரணங்களைத் தேடவேண்டும் என்றொரு சர்வதேச சட்ட நியதி உண்டு. எனவே இருக்கின்றதான உள்நாட்டுச் சட்டங்களை சுட்டிக்காட்டி அவற்றின் போதுமான தன்மை குறித்து சந்தேகிக்கூடாது என்ற அப்பாவிப் போர்வையை போர்த்திக்கொள்வதன் மூலம் உள்ளே நடப்பவற்றை அப்படியே அமுக்கி விடுவதற்கான வாய்ப்புகளை அரசுகள் இலகுவில் பெற்றுவிடுகின்றன.

வீரியம் மிக்க, அரசாங்க சார்பற்ற நிறுவனங்களும் சிவில் சமூகக் குழுக்களும் கண்கொத்திப்பாம்பாக செயற்பட்டாலேயே இந்தப் போர்வையை அகற்றி நிஜமுகத்தை வெளிக்கொணர முடியும். பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசர காலச்சட்டம் என்பவற்றின் கீழான அடக்குமுறை விதிகள் கூட நாட்டின் உள்ளகச் சட்ட ஏற்பாடுகள் என்ற அளவில் சர்வதேச அரங்கில் பெரிதாக ஆட்சேபனை எதனையும் ஏற்படுத்த போதுமானவையாக கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆக சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மட்டுமே அச்சட்டங்களின் நியாயமற்ற தன்மையை சுட்டிக்காட்டி வந்துள்ளன.

எப்படி இருந்தபோதிலும் அதே அரசியல் அமைப்பும் அதே சட்டங்களும் இருக்கத்தக்கதாகவே எல்லோரும் சமத்துவமாகவே நடத்தப்படுகின்றார்கள் என்று நம்பவைக்கப்பட்டது. ஏதேனும் அநியாயம் இழைக்கப்படின் நீதி மன்றம் சென்று நிவாரணம் கோரலாமே என்று உள்நாட்டிலும் சவால்கள் விடுக்கப்படுவதுண்டு. வெளிநாட்டிலும் நம்பவைக்க முயற்சிக்கப்படுவதுண்டு. மேலோட்டமாகப் பார்த்தால் இவை எல்லாம் நேர்மையான செயற்பாடுகளாகவே தோன்றும். அரசுகளுக்கு இருக்கக்கூடிய ஏகபோக வாய்ப்பொன்றாக அமையும் இந்த சட்டக்போர்வை எல்லாவித அராஜகங்களையும் மூடி மறைக்க போதுமானதாக இருக்கின்றது. பெரும் பான்மையினமான அரசொன்று ஆக்கும் சட்டங்களினால் சமத்துவம் பேணப்படும் என்பது எலியினை பூனையொன்று விரட்டிச் செல்கையில் இரண்டமே ஓடிப்பிடித்து விளையாடுகின்றன என்று நம்புவதைப் போன்றதே.

ஒரு நாட்டுக்குள் இருக்கும் எண்ணிக்கையில் சிறுபான்மையான இனங்கள் அந்த அரசால் எங்கனம் நடாத்தப் படுகின்றன. என்பதை வைத்தே அந் நாட்டின் ஜனநாயகப் பண்பும் மதிப்பும் எடை போடப்படவேண்டும் என்பது சர்வதேச அரங்கில் தற்போது தவிர்க்க முடியாத நியதியாகி வருகிறது. தமது சட்டங்களின் நியாாயத் தன்மையினை நிறுவவேண்டிய தேவை அரசுகளுக்கு இப்போது அடிக்கடி ஏற்படுகின்றன.




மக்கள் மீது ஏற்படும் அபரிமிதமான அக்கறை காரணமாகவும் அரசு விஷேட சட்டங்களை ஆக்குவதுண்டு உதாரணமாக பயங்கரவாத தடை சட்டத்தின் நியாயமற்ற தன்மையை எவ்வளவோ எடுத்துக்காட்டியும் இயன்றளவு அரசு அசைந்து கொடுக்கவே இல்லை.

நியாயமற்ற சட்டங்கள் உண்மையிலேயே சட்டங்களாகுமா? என்று கேட்கும் அளவுக்கு இலங்கையில் மக்கள் விழிப்புணர்வு பெற்றுவிடாதவாறு மிகவும் கெட்டித்தனமாக பல்வேறு கவர்ச்சிகள், கண்சிமிட்டுதல்கள் நீண்டகால வரலாறாகும். இனம், மதம், மொழி, பிரதேசம் என்ற பல்வேறு கவர்ச்சிகளின் பின்னால் இழுபட்டுப் போகும் மக்கள் தமக்கான ஆட்சி முறைமையின் நியாயத்தன்மையை கேள்விக்குட்படுத்த மறந்துவிடுகின்றனர். இந்தக்கவர்ச்சிகளின் பெயரால், மக்கள் ஜனநாயக விழுமியங்கள் பலவற்றையும் தியாகம் செய்யும்படியான நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது பாராளுமன்றத்தில் அதை எதிர்த்துப் பேசியவர்களில் அப்போதைய எதிர்க்கட்சிக் கொறடாவாக இருந்த மைத்திரிபால சேனநாயக்க மட்டுமே எதிர்காலத்தில் எப்படி ஜனநாயக விரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம் என்ற எச்சரிக்கையை விடுத்திருந்தார். தனக்கு மூக்குப்போனாலும் பராவாயில்லை என்ற விதத்தல் பெரும்பான்மை இனம் செயற்பட்டால் அதன் பிற்கால விளைவுகள் எப்படி இருக்கும் என்று அன்றைக்கு எச்சரிக்கப்பட்ட அத்தனை விடயங்களும் தற்போது அரங்கேறி வருகின்றன.

எத்தகைய சட்டங்களையும் ஆக்கலாம் என்ற அதிகாரத்தை மக்கள் தங்கள் கைகளில் தந்துள்ளார்கள் என்று ஆளவந்தோர் செயற்பட முனைந்தால் அதற்கு எல்லை நிர்ணயம் செய்தல் என்பது பிற்காலத்தில் சாத்தியப்படாது என்பதை அப்போது உணரமறுத்தவர்கள் இப்போது அனுபவத்தில் சந்திக்கின்றார்கள். ஜனாதிபதி தேர்தலில் எதிர்கட்சி வேட்பாளராக நின்றவரே சிறையில் அடைக்கப்படுகையில் இந்த ஜனநாயக சோஷலிசக் குடியரசின் மக்களால், எதுவுமே செய்யமுடியவில்லை.



(தொடரும்)

நன்றி:இணையம்

# இலங்கை விவகாரத்தினை கையிலெடுத்த அமெரிக்க உயர்கல்வி மாணவ சமூகம்

(கொழும்பு)

**சர்வதேச பொதுமன்னிப்பு சபை என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பில் அமெரிக்க உயர்கல்வி மாணவ சமூகத்தினால் நியூயோர்க் நகரில் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வொன்று பலரது கவனத்தையும் பெற்றுள்ளது.**

Get on the Bus for human rights எனும் தலைப்பில் இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையினை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட இந்த கவனயீர்ப்பு நிகழ்வானது உள்ளக அரங்க நிகழ்வாகவும் வெளித்திடல் கவனயீர்ப்பு போராட்டமாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து தற்போது அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ள பிரபல ஊடகவியலாளர் ஏ.எஸ்.திசநாயகம் மற்றும் பர்மா, இந்தோனேசியா பிரதிநிதிகள் பலரும் உரையாற்றியிருந்தனர்.

காணாமல் போயும் கடத்தி வைக்கப்பட்டும் உள்ளவர்களது நிலையினை வலியுறுத்தும் வகையில்இடம்பெற்றிருந்த நிகழ்வரங்கொன்று பர்மிய பெண்ணொருவரினால் மேற்கொள்ளப்பட்டமை அனைவரது கவனத்தையும் பெற்றது.

அண்ணளவாக 700 இற்கும் மேற்பட்ட உயர்கல்வி மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர். உள்ளரங்கினை தொடர்ந்து இலங்கையின் உயர் ஆணையத்தினை நோக்கி பேரணியாக சென்ற மாணவர்கள் இலங்கையே உன்னை கண்காணித்துக் கொண்டிருக்கின்றோம் என தொடர் முழக்கமிட்டனர். இந்நிகழ்வில் பங்கெடுத்திருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதி சான்சுந்தரம் அமெரிக்கர்கள் இவ்வாறு இலங்கை தொடர்பில் அணிதிரள்வதும் குறிப்பாக மாணவ சமூகம் இலங்கையின் விவகாரத்தினை கையிலெடுத்திருப்பது நம்பிக்கையினை தருவதாக உள்ளதென தெரிவித்தார். இலங்கையின் முள்வேலிக்குள் அகப்பட்ட தமிழர்கள் மற்றும் வெள்ளைக் கொடியேந்திய தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் படுகொலை செய்திருந்தமை ஆகியனவற்றை வெளிக்காட்டும் வகையில் அமைந்திருந்த ஓவியங்கள் இவ்விரு நிகழ்வுகளிலும் முக்கிய இடத்தினை பிடித்திருந்தது. (அ-2)

## காலி முகத்திடல் கடலில் நீராடிய இளைஞர் பலி

(கொழும்பு)

கொழும்பில் பண்டாரநாயக்க உருவச்சிலைக்கு முன்பாகவுள்ளதான காலிமுகத்திடல் கடலில் நேற்று முன்தினம் மாலை குளித்துக் கொண்டிருந்தபோது இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவலப்பிட்டியவை சேர்ந்த இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடற்படையினரின் உதவியுடன் சடலத்தை தேடுவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-9)

# முள்ளிவாய்க்கால் நினைவுதினம் லண்டன் நகர பகுதியில் நடைபெறும்

ஜேர்மனியை ஆட்சிபுரிந்த ஹிட்லர் காலத்தில் நடந்தவை போலவே முள்ளிவாய்க்காலிலும் எம் இன மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். இதனை நினைவு கூரும் முகமாக மே மாதம் முள்ளிவாய்க்கால் தின மாக வேற்றின மக்கள் ஒன்று கூடும் லண்டன் நகரின் மையப்பகுதியில் நினைவு தினத்தை நடத்த பிரித்தானிய தமிழர் பேரவை முடிவெடுத்துள்ளது.

இதனை நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் முன்மொழிய மக்கள் அதற்கான ஆதரவினை நல்கியுள்ளனர்.

தமிழர்கள் செரிந்து வாழும் பகுதியில் இந்நிகழ்வை ஏன் நடத்தக் கூடாது? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டது. அதாவது ஒரு இனத்தின் அழிவை குறிப்பிட்ட அந்த இன மக்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்த முடியாது. தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட்டதை தமிழர்கள் மட்டும் ஒரு இடத்தில் கூடி நின்று மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செய்வதால் என்ன பயன்? இந்த இன அழிப்பு வேற்றின மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டியதொன்று! தமிழர் அல்லாத பல்லின மக்கள் முள்ளிவாய்க்காலில் எம்மின மக்கள் கொல்லப்பட்டதை அறியவேண்டும்.

துடி துடித்து இறந்த தமிழ் கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் முதியோர்களின் நிலை பற்றி அறியவேண்டும். எனவே, முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை வேற்றின மக்கள்பார்க்கும் வகையில் லண்டன் நகரின் மையப் பகுதியில் நடத்த வேண்டும் என பிரித்தானிய தமிழர் பேரவை மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை தமிழர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதாக நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூதர்கள் தமது இனவழிப்பு நாளை எவ்வாறு ஹோலகாஸ்ட் என்று கூறுவார்களோ அதேபோல் முள்ளிவாய்க்கால் என்றால் அது தமிழர்களின் இன அழிப்பு நாளாக பிரகடனப்படுத்த வேண்டும் என பிரித்தானிய தமிழர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இச் சொல்லானது (முள்ளிவாய்க்கால்) ஐக்கிய ராட்சிய ஆங்கில அகராதியில் சேர்க்கப்பட வேண்டிய சொல் என்பதனையும் தமிழ் மக்கள் முன்னெடுக்கவுள்ளனர். இந் நாளில் பிரித்தானியாவின் பல முன்னணி அரசியல்வாதிகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் மற்றும் பல பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# சரத் பொன்சேகா வைத்தியசாலையில் தங்கியிருக்க வைத்தியர்கள் பரிந்துரை!

நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எல்லை நிர்ணயிக்கப்படாத காலத்திற்கு வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

சரத் பொன்சேகாவின் நுரையீரல் நோய்க்காக ஒவ்வொரு 4 மணித்தியாலங்களுக்கும் புகைவடிவ மருந்தை சுவாசிக்க கொடுக்க வேண்டும். இது சுவாசக் குழாயிலுள்ள தடைகளை அகற்றுவதற்காக வழங்கப்படுகின்றது.

வைத்தியசாலையிலிருந்து எப்போது சரத் பொன்சேகா வெளியேற முடியுமென்பது குறித்து வைத்தியர்களினால் தீர்மானிக்க முடியவில்லையெனவும் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா கூறியுள்ளார்.

தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் தனது கணவர் மகஸீன் சிறைச்சாலையில் இன்னும் சில நாட்களுக்கு தங்க வேண்டியுள்ளதாகவும் ஆனால் அங்கு போதியளவு வசதிகள் இல்லையெனவும் அனோமா பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவுக்கு சிறையில் வழங்கப்பட்ட ஆவி மூலமான மருந்து போதாமலிருந்ததாகவும் இதனால் அவருக்கு தொடர்ந்து இருமல் காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆஸ்துமா நோயால் வருந்திக் கொண்டிருந்த சரத் பொன்சேகா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டுமென கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. சரத் பொன்சேகாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதில் ஏற்பட்ட தாமதத்தை தொடர்ந்து தான் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக தெரிவித்ததைத் தொடர்ந்து சரத் பொன்சேகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ-2)

# துமிந்தவை தகுதியற்ற சாட்சியாக மாற்றுவதற்கு நடவடிக்கையாம்

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரன் கொலை வழக்கின் பிரதான குற்றவாளியான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை தகுதியற்ற சாட்சியாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மிகவும் நம்பகரமான தகவல் மூலம் தெரிய வந்துள்ளது.

துமிந்த சில்வாவிற்கு எதையாவது கூறும் பட்சத்தில் அதனை கிரகித்து கொள்வதற்கோ அதற்கு பதிலளிப்பதற்கோ அவருக்கு தற்போது ஞாபகமறதி இருப்பதாகவும் அவர் மனரீதியாக பாதித்த நிலையில் இருப்பதாகவும் நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வு பிரிவினர் அறிக்கை தாக்கல் செய்ய தயாராகி வருகின்றனர்.

அவரிடம் சம்பவமொன்று குறித்து வாக்குமூலத்தை பெறுவது கடினம் என்பதால் அவரை தொடர்ந்து விசாரணை செய்ய முடியாது எனவும் எனவே, துமிந்த சில்வாவை தவிர்த்து குறித்த படுகொலை சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் துமிந்த சில்வாவை தகுதியற்ற சாட்சியாக கருத வேண்டும் எனவும் நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது. (அ-2)

மீண்டும்
உங்கள் அபிமானத்துக்குரிய....
சங்குநாதம்
வலம்புரியுடன் இணைந்து ஞாயிறு வாரமலராக
மிகவிரைவில்

- ஆலடிமாநாடு
- வியாசர் கேள்வி பதில்
- சிறுகதை
- அரசியல் ஆய்வு
- சமூகக் கருத்தாடல்கள்

இன்னும்பல...

- ஆலடி மாநாட்டிற்கான தகவல்கள்
- சிறுகதைகள்
- அரசியல் ஆய்வுகள்
- வியாசர்கேள்வி பதில்கள்
- சமூகக் கருத்தாடல்கள்

இவற்றை நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

பிரதம ஆசிரியர்
வலம்புரி- சங்குநாதம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.




## அம்புலி மாமா கதைகள்

# நினைத்தது ஒன்று, நடந்தது வேறு!



நடு இரவு நேரத்தில் வீட்டிற்குத் திரும்பிய அனந்த சாஸ்திரி தன் வீட்டுக் கதவை தட்டினார். அவருடைய மனைவி அருந்ததி தூக்கம் கலைந்து சோம்பல் முறித்துக் கொண்டே வந்து கதவைத் திறந்து விட்டாள். நாளைக்குத் திரும்பி வருவேன் என்று சொல்லி விட்டுப் போன நீங்கள் இவ்வாறு நடு இரவில் வந்து ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? என்று சிணுங்கினாள். போன காரியம் சீக்கிரம் முடிந்து விட்டது. அதனால் திரும்பி விட்டேன் என்று சொல்லிவிட்டு கை, கால்களைக் கழுவச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து வந்த அருந்ததி, நமது வீட்டுப் பூனை ஜானகிராமனின் வீட்டிற்குள் நுழைந்து பாலைக் குடித்து விட்டதாம்! அவர் மனைவி என்னுடன் சண்டை போட்டாள். அவள் கணவனை விட்டு உங்கள் மண்டையை உடைக்கச் செய்வாளாம்! என்று வத்தி வைத்தாள்.

சரி சரி! அதை விடு, எனக்குப் பசி பிராணன் போகிறது! உடனே சாப்பாடு போடு! என்று சாஸ்திரி உத்தரவு இட்டார். சாப்பாடா? நீங்கள் நாளைக்குத் தான் திரும்பி வருவீர்கள் என்று நினைத்துக் கொண்டு நான் சாப்பாடு மீதம் வைக்கவில்லையே! சாதம் வடிக்கலாம் என்றால் குழம்பு கூட இல்லை என்று கூறிய அருந்ததி தொடர்ந்து, நான் சாதம் வடிக்கிறேன் நீங்கள் தோட்டத்திற்கு சென்று கத்தரிக்காய்



பறித்து வாருங்கள். நான் பொரியல் செய்து போடுகிறேன்! என்று சமையலறைக்குள் சென்றாள்.

சலித்துக் கொண்டே சாஸ்திரி தனது வீட்டிற்குப் பின்புறம் இருந்த தனது தோட்டத்தில் கத்தரிக்காய் பறிக்கச் சென்றார். தோட்டத்து வேலிக்கு அப்பால் ஜானகிராமனின் வீடு இருந்தது. தோட்டத்தில் ஒரே இருட்டாக இருந்தது. தட்டுத் தடுமாறிக் கொண்டே கத்தரிக்காய் பறிக்கச் சென்றபோது, சாஸ்திரி தரையில் இருந்த எதையோ மிதித்து விட்டார். அவர் காலில் மிதிபட்ட பொருள் மெத்தென்று இருந்தது. என்னவென்று பார்த்தால் அது பூனைக் குட்டி! குனிந்து பார்த்தால் அந்தப் பூனைக் குட்டி செத்துப் போயிருந்தது. பூனைக் குட்டியை கொன்றால் மகாபாவம்! விடயம் தெரிந்தால் அருந்ததி ஊரையே கூட்டி விடுவாளே என்று பயந்து போன சாஸ்திரி என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

அருந்ததிக்கு விடயம் தெரியும் முன் அதை சத்தமின்றி புதைத்து விட முடிவு செய்தார். உடனே மடமடவென்று மண்வெட்டியால் ஒரு குழி தோண்டி பூனைக் குட்டியை அதனுள் புதைத்தார். பின்னர் ஏதோ சில கத்தரிக்காய்களைப் பறித்து வீட்டிற்குள் நுழைந்தார்.

கத்தரிக்காய்களை பறிக்க ஏன் இத்தனை நேரம்? என்று அருந்ததி கேட்க, அவளுக்கு ஏதோ சமாதானம் கூறி நிலைமையை சமாளித்த சாஸ்திரி, சமையல் ஆகும் வரை ஓய்வெடுத்தார். பின்னர் உணவருந்தி உறங்கச் சென்றார்.

பின் பக்கத்து வீட்டு ஜானகிராமனின் மனைவி சாஸ்திரி நடு இரவில் தோட்டத்தில் குழி தோண்டி வெள்ளையாக ஏதோ சிறிய மூட்டையை புதைப்பதைப் பார்த்ததும் அவளுக்கு ஒரே பரபரப்பு! உடனே தன் கணவன் ஜானகிராமனை உலுக்கி எழுப்பினாள். ராமன் கடுகடுப்புடன் எழுந்தார். தூங்க விடாமல் ஏன் உயிரை எடுக்கிறாய் என்று சிடுசிடுத்தவரிடம் சாஸ்திரி தன் தோட்டத்தில் குழி தோண்டி தங்க நகைகள் கொண்ட ஒரு மூட்டையை அதில் புதைத்ததை என் இரு கண்களால் பார்த்தேன். நீங்கள் உடனே சென்று அந்த நகைகளைக் குழியிலிருந்து எடுத்து வாருங்கள்! என்று கூறி விரட்டினாள்.

தங்க நகை என்றதும் வாயைப் பிளந்த ராமன் உடனே ஒரு காலிப் பெட்டியுடனும் மண்வெட்டியுடனும் சென்று வேலியைத் தாண்டிக் குதித்து சாஸ்திரியின் தோட்டத்தை அடைந்தார்.

அப்போது தான் குழி தோண்டப்பட்டு பின் மண்ணால் மூடப்பட்டு இருந்த இடத்தைக் கண்டு பிடிப்பது அவருக்கு எளிதாக இருந்தது. மண்வெட்டியால் அந்த இடத்தைத் தோண்ட முற்பட்டவரின் கரத்தை யாரோ ஒருவர் பிடித்து இழுத்தார். திரும்பிப் பார்த்தால் கறுத்த மேனியுடனும் கையில் கத்தியுடனும் ஒரு முரடன் நின்று கொண்டிருந்தான்.

குழி தோண்டி பணப் பெட்டியை புதைக்கும் சிரமம் உனக்கு ஏன்? பெட்டியை என்னிடம் கொடுத்து விடு! என்று அந்த ஆள் முரட்டுக் குரலில் கூறியதும் அவன் ஒரு திருடன் என்று ராமனுக்குப் புரிந்தது. தன்னை அந்த வீட்டு சொந்தக்காரன் என்றும் தான் பணப் பெட்டியைப் புதைத்து வைக்கப் போகிறதாகவும் அவன் தன்னைப் பற்றி தவறாக எண்ணியதை ராமன் புரிந்து கொண்டான்.

இந்தப் பெட்டியின் அளவிற்கு ஒரு குழி தோண்டச் சொல்லி என் மனைவி சொல்லியிருக்கிறாள். குழி தோண்டிய பின்னர் அவள் தன் நகைகளை எனக்குத் தருவாள். அதை இந்தப் பெட்டியில் போட்டுப் புதைப்பதாக இருந்தேன். நீ போய் கதவைத் தட்டு! அவள் தரும் நகைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிடு! என்றார் ராமன்.

சரிதான்! நான் உன் மனைவியை அழைத்தால் என் குரல் மீது சந்தேகம் ஏற்பட்டு அவள் கதவையே திறக்க



மாட்டாள். அதனால் நீயே அவளை அழைத்து நகைகளை வாங்கிக் கொடு! என்றான் அந்த கெட்டிக்காரத் திருடன். சொன்னதோடல்லாமல் கத்தியை ராமன் முதுகில் அழுத்தி அவரைத் தள்ளிக் கொண்டு சென்று கதவருகே நிறுத்தினான்.

வேறுவழியின்றி ராமன் சாஸ்திரியின் மனைவிக்குக் குரல் கொடுத்தான். அந்தக் கூக்குரலைக் கேட்டு சாஸ்திரியின் மனைவி அருந்ததி விழித்துக் கொள்ளவில்லை. ஆனால் சாஸ்திரி விழித்துக் கொண்டார். ஏற்கனவே தன் மண்டையை உடைப்பதாக சவால் விட்டிருந்த ராமன் மீதுள்ள கோபம் இப்போது நடு இரவில் தன் மனைவியை பெயர் சொல்லி அழைத்ததும் கட்டுக்கடங்காமல் பொங்கியது. ராமனின் மண்டையை பிளந்து விட எண்ணி ஒரு தடியை எடுத்துக் கொண்டு சாஸ்திரி கதவைத் திறந்தார்.

நகைகளை எடுத்து வருகிறாள் என்று எண்ணிய திருடன் நகைகளைப் பிடுங்குவதற்காக ராமனைப் பின்னுக்கு தள்ளிவிட்டு தான் கதவிற்கு முன்னால் நின்றான். கதவைத் திறந்த சாஸ்திரி எதிரில் நிற்பது ராமன் என்று எண்ணி தடியால் ஓங்கித் தலையில் போட்டார் ஒரு போடு! திருடன் மயக்கமாகித் தரையில் விழுந்தான். கையில் தடியுடன் ஆவேசமாக நின்று கொண்டிருந்த சாஸ்திரியைக் கண்டு ராமன் நடுங்கிப் போனார். அவருடன் சமாதானம் செய்து கொள்வதே புத்திசாலித்தனம் என்று கருதி ஆகா! பிரமாதம் சாஸ்திரி! சபாஷ்! ஒரு திருடனைச் சிறிதும் கூட பயப்படாமல் அடித்து வீழ்த்தி விட்டாயே! என்று ராமன் பிரமாதமாக சமாளித்தார்.

அயோக்கியப் பயலே! உன் நாடகமெல்லாம் எனக்குத் தெரியும்! திருடனை என் வீட்டிற்குத் திருட அழைத்து வந்தவனே நீ தான்! உன்னை என்ன செய்கிறேன் பார்! என்று தடியை ஓங்க வெலவெலத்துப் போன ராமன் சாஸ்திரியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டதுடன் நடந்த உண்மையை ஒப்புக் கொண்டார். பின்னர் சாஸ்திரி வீணாக உன்னுடன் சண்டை போட்டுக் காலங் கழித்தேன்! இனி பழைய விரோதத்தை மறந்து இன்று முதல் நாமிருவரும் நண்பர்கள் ஆவோம்! என்றார். சமாதானம் அடைந்த சாஸ்திரியும் ராமனை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்.

சாஸ்திரியும் ஜானகிராமனும் அன்று முதல் நண்பர்களாயினர். நடந்த விடயத்தை அறிந்த சாஸ்திரியின் மனைவி ஐயோ பாவம்! உங்கள் கால் பட்டு பூனைக் குட்டி இறந்து போனதாகத் தப்பு கணக்கு போட்டிருக்கிறீர்கள். அது இரண்டு நாளாகவே உடல் சரி இல்லாமல் அன்று சாயங்காலமே இறந்து விட்டது. மறுநாள் காலை நீங்கள் வீடு திரும்பிய பின்னர் அதைப் புதைக்கச் சொல்லலாம் என்றிருந்தேன். அதற்குள் அவசரப்பட்டு இரவோடு இரவாக அதைப் புதைத்தீர்கள். ஆனால் அதனால் ஏற்பட்ட பலனைப் பார்த்தீர்களா? உங்களுடைய பகை நட்பாக மாறியது என்றாள். சாஸ்திரியின் முகத்தில் அசடு வழிந்தது.

## சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தங்காலையில் கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி விடுதியொன்றில் வைத்து பிரித்தானிய பிரஜையை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தங்காலை பிரதேச சபை தலைவர் உட்பட 8 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு தங்காலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஷெமான் சீக் என்ற பிரித்தானியர் கொலை செய்யப்பட்டதுடன் அவரது காதலியான விக்டோரியா எலக்சாண்டரா என்பவர் இந்த சம்பவத்தில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் வழக்கு தொடர்பான மரபணு அறிக்கை இதுவரை கிடைக்காததால் வழக்கை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அதுவரை சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-2)

## வெள்ளோட்டம்

உயரப்புலம் ஆனைக்கோட்டை ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பற வெள்ளோட்ட விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-3-6)

# கொழும்பின் ஐந்து இடங்களில் டிஜிற்றல் இரத்த அழுத்த கருவிகள்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய பொது மக்கள் தங்களது இரத்த அழுத்தத்தை சுலபமாக பரிசோதித்து கொள்வதற்கு ஏற்ற வகை யில் முதற்கட்டமாக ஐந்து டிஜிற்றல் இரத்த அழுத்த சோதனைக்கருவிகள் நேற்று முன்தினம் தொடக்கம் செயற்பட ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். இது தொடர்பில அவர் மேலும் தெரிவிக் கையில்,

இக்கருவிகள் கொழும்பு மாவட்டத்தில் பொது மக்கள் சுலபமாக இரத்த அழுத்தத்தை பரிசோதித்துக்கொள்ளக்கூடிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கருவிகள் சுகாதார அமைச்சின் சிற்றுண்டிச்சாலை, கொழும்பு தேசிய கண் வைத்தியசாலை, அரச மருந்தாக்க கூட்டுத்தாபனக்கட்டடம், பொறளையிலுள்ள தொழு நோய் சிகிச்சைப்பிரிவு, புறக்கோட்டையிலுள்ள இலங்கை வங்கித் தலைமையகக் கட்டடம் ஆகிய ஐந்து இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன.


உயர் இரத்த அழுத்தம் காரணமாக தினமும் பலர் இருதய பாதிப்புக்கும் உயிராபத்து நிலைக்கும் உள்ளாகின்றனர். அதனால் 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் வாரத்திற்கு ஒரு தடவையாவது தமது இரத்த அழுத்தத்தை பரிசோதித்து கொள்வது அவசியம். இதற்காக வைத்தியரை அணுக வேண்டும்.

என்றாலும் உயர் அழுத்த பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளவர்கள் கூட இப்போது தங்களது இரத்த அழுத்த நிலைமையை ஒழுங்குமுறையாக பரிசோதித்து கொள்ளாதிருப்பது தெரிய வந்திருக்கின்றது.

இதனைக் கருத்தில் கொண்டுதான் பொதுமக்கள் தங்களது இரத்த அழுத்தத்தை இலகுவாக பரிசோதித்துக்கொள்ளக்கூடிய வகையில் இக்கருவிகளை பொருத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு ஜப்பான் நாட்டின் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவரகம் முழுமையாக ஒத்துழைப்பு நல்கின்றது.

இந்த கருவியினுள் கையை வைப்பதன் மூலம் சில விநாடிகளில் அந்த சமயத்தில் உடலின் இரத்த அழுத்தத்தை அறிந்து கொள்ள முடியும்.

பொதுவாக சாதாரணமான ஒருவருக்கு 120/80 என்றபடியே இரத்த அழுத்தம் இருக்கும். இதைவிட அதிகமாகக் காணப்பட்டால் வைத்தியரை அணுகி மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்றார். (அ-2)



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த கனடா பாதுகாப்பு ஆலோசகரை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி வடமாகாண ஆளுநர் பணிமனையில் சந்தித்து கைலாகு கொடுத்து வரவேற்றதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# நான் ஊடகங்கள் தொடர்பில் அன்புடன் செயற்படுகின்றேன்

### அமைச்சர் மேர்வின் கூறுகின்றார்

தன்மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டு ஒன்று உள்ளது என யாராவது நிரூபிப்பார்களானால் ஒரு இலட்சத்து ஐம்பத்து இரண்டு வாக்குகளை பெற்ற நான் பொதுமக்களிடம் கூறிவிட்டு அமைச்சு பதவி மற்றும் அரசியலில் இருந்து விலகப்போவதாக மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பு மற்றும் பொது செயற்பாடுகளுக்கான அமைச்சின் ஊடான சேவையை கிராமத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஜனசெத்தட ஜன ஹவுல என்ற வேலைத்திட்டத்தின் கம்பஹா மாவட்டத்தின் இறுதி நடமாடும் சேவை நீர்கொழும்பு நகரில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாம் ஊடகங்கள் மீது மிகுந்த அன்புடன் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டார். இலங்கையில் உள்ள ஊடகங்கள் சர்வதேசத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ்வதாக மேர்வின் தெரிவித்தார்.

இருந்த போதும் சில ஊடகங்கள் துரோக மிழைக்கும் வகையில் தாம் ஊழல் மோசடிகள் குறித்து விசாரிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

தமது சொத்து விபரங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவே ஊழல் மற்றும் மோசடிகள் தடுப்பு திணைக்களத்திற்கு சென்றதாக குறிப்பிட்ட அவர்,

தன் மீது எதற்காக தேசிய நாளிதழ்கள் இவ்வாறு சேறு பூசுகின்றன என்றும் கேள்வியெழுப்பியுள்ளார். (அ-2)

# அரசியல் தீர்வை பெறும்வரை தமிழர்கள் பொறுமை காக்கவேண்டும்

### சீ.யோகேஸ்வரன் எம்.பி. அறிவுரை

நாம் கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக எங்களது உரிமைக்காக எமது மக்கள் பல உயிர் தியாகங்களை புரிந்துள்ளார்கள். இரண்டு இலட்சத்துக்கு மேல் உயிர்களை இழந்துள்ளோம். ஆனால் எமக்கு அடிப்படை உரிமைகள் கூட இந்த நாட்டில் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாகரை பிரதேசத்தில் உள்ள கதிரவெளி கிராமத்தில் நடத்திய மக்கள் சந்திப்பு ஒன்று கூடலில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆயிரக்கணக்கான பலர் அங்கவீனர்களாகவும் விதவைகளாகவும் தபுதாரர்களாகவும் அநாதைகளாகவும் மாறியுள்ளனர். இருப்பிடங்கள், சொத்துக்கள், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் உட்பட பலவற்றை இந்நாட்டில் இழந்துள்ளோம். இவ் இழப்புக்களை அனுபவித்த எமது இனம் தான் எதிர்பார்த்த இலக்கை அடைந்தே ஆக வேண்டும்.

இதற்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் எதிர்பார்த்த இலக்கை நோக்கி வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில் ஒரு சிறந்த அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையில் எமக்கு வழங்க வேண்டிய சகல அதிகாரங்களையும் கொண்ட நிரந்தர அரசியல் தீர்வை பெறும் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

எங்களது செயற்பாட்டுக்கு ஆதரவு தர வேண்டிய கடமை எம் வடக்கு,கிழக்கு தமிழ் மக்களுக்கு உண்டு. ஆகவே பொறுமையை பாதுகாத்து எங்களது நோக்கத்தை நிறைவேற்ற எங்களுடன் என்றும் துணையாக எமது தமிழ் மக்கள் அனைவரும் நிற்க வேண்டும்.

இன்று சில அரசியல்வாதிகள் கிழக்கு மட்டும் தனியாக இருக்க வேண்டும். எங்களுக்கு வடக்கு,கிழக்கு இணைப்பு வேண்டாம் என பிரதேசவாதம் பேசி தமிழ்மக்களின் எதிர்காலத்தை நோக்காது தமது சுயநல அரசியல் தேவையை நிறைவேற்ற முனைகின்றனர். இவ்விடயத் தில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் உணர்வு மிக்க தமிழர்களாக இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் என கேட்டுகொண்டார். (அ-2)


## வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பரீட்சைகள்-2010

1. இசைமாணி / நடனமாணி முதலாம் வருடம்
2. இசைமாணி / நடனமாணி இரண்டாம் வருடம்
3. இசைமாணி / நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுவருகின்றன. இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/-க்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 15.06.2012 (வெள்ளிக் கிழமை) வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

*குறிப்பு: கடந்த வருடம் நடைபெற்ற பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் வெளியாகி உள்ளன.*

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
27.04.2012 (சி-6471)

# கிழக்கு மாகாணசபை தேர்தலில் அரசுடன் இணைந்து வரதர் போட்டியிடமாட்டார்

## நம்பிக்கை உள்ளது என்கிறார் மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம்

(கொழும்பு)

**அரசின் ஆதரவுடன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் போட்டியிடவுள்ளதாக வெளிவந்துள்ள செய்தியானது முற்றிலும் ஆதார மற்ற அடிப்படையற்ற செய்தியென கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்துள்ளார்.**

வரதராஜப் பெருமாள் அரசாங்கத்தின் ஆதரவுடன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் குதிக்கவுள்ளதாகவும் அதற்காக இலங்கையில் இருந்து சென்ற குழு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் வெளியான செய்தி தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிழக்கு மாகாணத்தில் சிறந்த ஜனநாய சூழல் ஏற்பட்டு சிறந்த தலைமைத்துவம் அதனை வழிநடத்த வேண்டும் என்ற நோக்கோடு உள்ள அவர் ஒருபோதும் கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடமாட்டார் என நான் கருதுகின்றேன்.

1990 ஆம் ஆண்டு அவர் முதலமைச்சராக இருந்த போது வடக்கு, கிழக்கில் காணி, பொலிஸ், நிதி, நீதி போன்ற அதிகாரங்களுடன் 19 அம்ச கோரிக்கை பிரேரணையை மாகாண சபையில் முன்வைத்து அதிகாரங்களை மத்திய அரசிடம் கோரியதற்கு அமைய அக்காலகட்டத்தில் மாகாண சபை கலைக்கப்பட்டது. அந்த உத்வேக உணர்வுடன் இருக்கும் ஒருவர் அரசுடன் இணைந்து போட்டியிடமாட்டார் என நம்புகின்றேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் ஈ.பி.ஆர்.எல்.எப். இணைந்து செயற்படுவது தொடர்பிலும் கிழக்கு மாகாணத்தில் எதிர்கொள்ளப்படும் தேர்தலில் இணைந்து செயற்படுவது தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று அது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையிலும் அதிகார பரவலாக்கல் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் பேச்சுவார்த்தைகள் முடுக்கிவிடப்பட்டுள்ள நிலையிலும் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தமிழ் மக்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய எக்காரியத்திலும் முன்னிற்கமாட்டார்.

தமிழ் மக்களின் நலனில் மிகுந்த அக்கறையுடனும் நன்மதிப்புடனும் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளார் என்பதனை நாங்கள் நன்கு அறிவோம். கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கான அதிகார பரவாலக்கல் தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டுவரும் தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையினை நிலைநிறுத்த வேண்டும் என்ற சிந்தனையுடன் இந்தியா'வில் வசித்துவரும் ஒரு திறமையானவரை திட்டமிட்டு காய் நகர்த்த வைப்பது ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்தார். (அ-2)

# பாலியாற்றுக்கு விரைவில் பாலம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாரதிநகர் கிராமத்தையும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கரும்புள்ளியான் கிராமத்தையும் பிரிக்கும் பாலியாற்றின் மேலாக பாலமொன்று அமைக்கப்படவுள்ளது.

இப்பாலமானது வடக்கு மாகாணத்தின் குறித்தொதுக்கப்பட்ட 8 மில்லியன் ரூபா செலவில் நவீன வடிவிலானதாக அமைக்கப்படவுள்ளது.

தற்போது இப்பாலம் அமையவுள்ள பகுதியின் மதிப்பீடுகள், திட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு பூர்த்தியடைந்த நிலையில் உள்ளதுடன் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி மனு கோரப்பட்டு வேலைகள் வழங்கப்படவுள்ளன.

இப்பாலம் அமைக்கின்றபோது மாந்தை கிழக்கு பிரதேச மக்கள், மல்லாவி பொது வைத்தியசாலைக்கும் மல்லாவி பொது சந்தை உட்பட பல்வேறுபட்ட தேவைகள் நிறைவு செய்து கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்படுகிறது. (அ-9-15)

# சிங்கள இன ஆதிக்கத்தை நிறுவுவதில் இலங்கை அரசு கங்கணம் கட்டி நிற்கிறது

## மசூதி விவகாரம் குறித்து கருணாநிதி அறிக்கை

மசூதிகள், கோயில்களை நாசப்படுத்துவதை நாகரிக உலகம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளாது. மத சகிப்புத்தன்மை உடையோர் மனம் கசந்து கலங்கிடுவர்.

இலங்கையில் நடை பெறும் இத்தகைய நிகழ்சிகள் கடும் கண்ட னத்திற்குரியவை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இலங்கையில் மசூதி ஒன்று சேதப்படுத்தப்பட்டதாக வெளியான செய்தி குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் தம்புள்ள என்ற இடத்தில் இருந்த மசூதி ஒன்றினை சில நாட்களுக்கு முன்பு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்த பிக்குகள் கடப்பாரை, சம்மட்டிகள் கொண்டு இடித்துடைத்து நாசம் செய்திருக்கின்றனர் என்று ஒரு செய்தி தெரிவிக்கின்றது. தென்னிலங்கையில் இவ்விடத்தில் இருந்த மசூதியை அகற்றி அந்த இடத்தை புத்த புனித இடமாக இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது என்று வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

இந்த மத வெறியை மதத்தின் பெயரால் நடந்த வன்முறையை இலங்கையிலேயே பலர் கண்டித்திருக்கின்றனர். இலங்கையில் நடைபெற்று வரும் ராஜபக்ஷ அரசு– சிங்கள இன ஆதிக்கத்தை நிறுவுவதிலும் சிங்கள மொழி ஒன்றையே முதன்மை இடத்தில் வைத்துக் கொண்டாடுவதிலும் இலங்கை முழுவதையும் பௌத்த மயமாக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டு வருகின்றது என்பதை அனைவரும் அறிவர்.

இந்த நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்காகத்தான் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் தமிழர்களை விரட்டி அடித்து விட்டு சிங்களவர்களை குடியேற்றுதல், மிகுதியாக இருக்கும் தமிழர் பகுதிகளை எந்நேரமும் இராணுவக் கண்காணிப்பில் வைத்திருத்தல், இந்துக் கோயில்களையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் நாசப்படுத்தல் போன்ற இன–மதங்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

அவற்றின் தொடர்சியாகவே தற்போது மசூதிகளின் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய தாக்குதல்கள் புத்தர் போதித்த அன்பு, அறம், அமைதி ஆகியவற்றுக்கு எதிரானவை.

மசூதிகளாயினும் தேவாலயங்களாயினும் கோயில்களாயினும் அவ்வற்றைத் தாக்கி நாசப்படுத்துவதை நாகரிக உலகம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளாது. மத சகிப்புத்தன்மை உடையோர் மனம் கசந்து கலங்கிடுவர். இலங்கையில் நடைபெறும் இத்தகைய நிகழ்சிகள் கடும் கண்டனத்திற்குரியவை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தென்னிந்திய திருச்சபை பேராயருடன் ரணில் சந்திப்பு





(யாழ்ப்பாணம்)

ஐக்கியத் தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அக்கட்சியின் உறுப்பினர்கள் நேற்று தென்னிந்திய திருச்சபை பேராயர் டானியல் எஸ்.தியாகராஜாவை சந்தித்து கலந்துரையாடினர்.

வட்டுக்கோட்டையிலுள்ள ஆஜர் இல்லத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த இந்தக் குழுவினர் ஆயரைச் சந்தித்து கலந்துரையாடியபோது,

நல்லிணக்க ஆணைக்குழுவினை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும். வடபகுதியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள் பயனுள்ளதாகவிருக்க வேண்டும். மக்களின் வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்து செல்கின்றது. இதற்கு பொருட்களின் விலை ஏற்றம் முக்கிய காரணம் எனவும் சுட்டிக்காட்டிய ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவினர் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகவும் தமது கட்சியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேதினக் கூட்டம் தொடர்பாகவும் கருத்து வெளியிட்டனர்.

இந்தச் சந்திப்பில் பேராயர் கருத்து தெரிவிக்கையில், நெடுந்தீவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடிக்கு மனவருத்தத்தினை தெரிவித்ததோடு மேதினக் கூட்டம் வெற்றியளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-6)

# நாம் ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதையே விரும்புகிறோம்

## ஏசியன் ட்ரிபியுன் ஊடகத்திடம் சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சிறுபான்மை சிங்கள மக்களுடன் சம உரிமைகள் வழங்கப்பட்ட ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதனையே தாம் எதிர்பார்ப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஏசியன் ட்ரிபியுன் இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களோ முஸ்லிம் மக்களோ இலங்கையில் இரண்டாம்பட்ச மக்களாக வாழ்வதை தாம் விரும்பவில்லை. அனைத்து மக்களும் அனைத்து உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதையே தாம் விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களிடமும் இதனையே தாம் தெரிவித்ததாகவும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, நாட்டை பிரிக்காமல் ஒரே இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதையும் தாம் இந்திய குழுவிடம் தெரிவித்ததாகவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

(அ-2)

பணக்காரன் தங்கச் சங்கிலியோடு பிறப்ப தில்லை. –ரூஸோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அந்தக் கால மே தினமும் இந்தக் கால மே தினமும்

இன்று தொழிலாளர் தினம். உழைக்கும் மக்களின் உரிமை வென்றெடுக்கப்பட்ட நாள். அந்த நாள் உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் முதலாளித்துவ ஆதிக்கத்தில் வதைபட்ட தொழிலாளர்களின் உரிமை விடயங்கள், வேலை நேரங்கள், வேதன நிர்ணயங்கள் என்ற பல்வேறு அடிப்படை உரிமைகள் தொடர்பில் உலகம் சிந்திக்கத் தலைப்பட்டது.

அதன் விளைவாக வேலைநேரம் மற்றும் ஓய்வு என்பன வரையறுக்கப்பட்டன என்ற வரலாற்றின் அடிப்படையில் மே தினம் அனுஷ்டிக்கப்படுவது அனைவரும் அறிந்ததே.

எனினும் அன்றைய காலத்தில் தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தால் நசுக்கப்பட்டதன் காரணமாக தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்வியல் பிசங்கிப் போனது.

ஆனால் இன்று அந்நிலைமை இல்லை. இருந்தும் பழைய மரபின் பிரகாரம் இப்போதும் மே தினக் கூட்டங்களில் மானிய கால சமுதாயத்தில் நின்றுகொண்டு மேடையில் முழங்கும் கலாசாரத்தைக் காண்கிறோம்.

உண்மையில் சமகால மே தினம் என்பது தொழிலாளர்களுக்கும் அவர்களின் பழக்க வழக்கங்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்கும் தினமாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

உண்மையில் எங்கள் நாட்டை எடுத்துக் கொண்டால் ஒரு சில துறைகள் தவிர்ந்த ஏனைய துறைகளில் தொழிலாளர்களின் வேதனம் திருப்தியாக இருக்கின்ற போதிலும், அவர்களில் பெரும்பாலானவர்களின் வாழ்க்கைத் தரம் மிக மோசமாகவே காணப்படுகின்றது.

இந்நிலைமைக்கு காரணம் தொழிலாளர்களின் மனப்பாங்கு என்றே கூறவேண்டும்.

ஒரு நாளில் ஆயிரம் ரூபாயை கூலியாகப் பெறும் தொழிலாளி ஒருவர் அதில் அரைப் பங்கை மதுவுக்கும் சிகரெட்டுக்குமாக தாரை வார்த்து விடுகிறார். எஞ்சிய தொகையும் வீட்டில் உள்ளவர்களுக்கு கிடைப்பது அரிது.

உடற் களைப்புக்கு மது அருந்தல் என்ற நியாயப்பாடு முன்வைக்கப்பட்டு தன் உழைப்பை; தன் உடல் ஆரோக்கியத்தை கேடு தரும் மதுவுக்கு கொடுக்கும் அறியாமை ஒருபுறம்.

குடித்துவிட்டு, வீட்டில் இருக்கின்ற பெண்களையும் சிறுவர்களையும் வதைக்கும் கொடூரம் மறுபுறம்.

இவையாவற்றுக்கும் மேலாக மதுபோதையில் வீட்டில் இருக்கக்கூடிய பொருட்களை உடைத்து நாசம் செய்வதென தங்களை தாங்களே அழித்துக் கொள்ளும் தொழிலாளர் வர்க்கத்தை விழிப்படையச் செய்ய இன்று முதலான மே தினங்கள் உதவ வேண்டும்.

கூடவே தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விசார் விடயங்கள், அந்தப் பிள்ளைகளும் பிரபல்யமான பாடசாலைகளில் கற்கும் ஏற்பாடுகள் தொடர்பிலும் சமூக மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்.

அப்போதுதான் மே தினம் அர்த்தமுடையதாக அமையும்.

எங்கே இன்றைய மே தினத்தில் இவற்றுக்கான அத்திபாரம் இடப்படுகின்றதா எனப்பார்க்கலாம்.

# ஆணைக்குழுவின் சிபார்சை ஆராயும் முஸ்லிம் காங்கிரஸ்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து அவற்றை அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்குவதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு குழுவை நியமித்துள்ளது.

முஸ்லிம்களின் அபிலாஷைகளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கவனத்தில் கொள்ளவில்லையென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றம்சாட்டியது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஒரு வேலைத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் அரசாங்கம் அதன் கூட்டு கட்சிகளிடம் ஆலோசனைகளை கோரியிருந்தது.

இந்த பரிந்துரைகளை ஆராய்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் கடந்த சனிக்கிழமை ஒரு குழுவை நியமித்தது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.டி.ஹஸன் அலி கூறினார். இக் குழுவில் அமைச்சர்ரவூப் ஹக்கீம், ஹஸன்அலி, கல்முனை பிரதி மேயர் நிஸாம் காரியப்பர், ஏ.எம்.பையஸ், எம்.எஸ்.எம். சல்மான் ஆகியோர் உள்ளனர்.

இதேவேளை ஆளும் கூட்டமைப்பின் ஒரு அங்கமான ஜாதிக ஹெல உறுமய தன் ஆலோசனைகளை இந்த வாரம் அரசாங்கத்திடம் வழங்கும் என கூறியுள்ளது.

இந்த அறிக்கையில் 285 பரிந்துரைகள் உள்ளன. இவற்றில் முக்கியமான சிபாரிசுகளை தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர் இவற்றிலிருந்து உடன் கவனிக்க வேண்டிய சிபாரிசுகளை நாம் இனம் காணவேண்டும். அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழ தனக்கு வழங்கப்பட்ட பணியாணைக்கு அப்பால் சென்ற சந்தர்ப்பங்களையும் இனம் காணவேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளரும் மின் மற்றும் வலு அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறினார். (எ-11)

# நெடுந்தீவு சிறுமி கொலை வழக்கு மே 8-ம் திகதி வரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுச் சிறுமி கொலை வழக்கு மேலதிக சாட்சிகளை பதிவு செய்வதற்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் சிறுமியொருவரினை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்தார் என சந்தேகத்தின் பேரில் கைதான கந்தசாமி ஜெகதீஸ்வரன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு நேற்றுவரை பிற் போடப்பட்டிருந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதவான் ஆர்.எஸ்.எம்.மகேந்திரராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மன்றில் ஆஜராக வேண்டிய நெடுந்தீவுப் பொலிஸார் கடல் கொந்தளிப்பு காரணமாக மன்றில் ஆஜராக முடியாத நிலை காணப்படுவதாக ஊர்காவற்றுறை பொலிஸார் மூலம் மன்றில் தெரிவித்தனர்.

இந்நிலையில் வழக்கினை விசாரணை செய்த நீதவான், மேலதிக சாட்சிகளின் சாட்சியங்களை பதிவு செய்வதற்காகவும் மேலதிக விசாரணைக்காகவும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினர் சார்பாக சட்டத்தரணி எஸ். செலஸ்ரீன் ஆஜராகி இருந்த நிலையில் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-4)

# உலக புத்தக தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள்

உலக புத்தக தினம் ஏப்ரல் 23ஆம் திகதி கொண்டாடப்பட்டதையொட்டி நூலக விழிப்புணர்வு நிறுவனம் மாணவர் மத்தியில் திறந்த போட்டிகளை நடத்தவுள்ளது. கட்டுரை, கவிதை, சிறுகதை, சித்திரம் ஆகிய துறைகளில் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்று மூன்று பிரிவாக மாணவர்கள் பங்குபற்ற முடியும். மாணவர்களின் ஆக்கங்களை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும் என நூலக விழிப்புணர்வு அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் கட்டுரைப்போட்டியில் தரம் 6,7,8 இல் கல்வி பயிலும் கீழ்ப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் 300-500 சொற்களில், என்னைக் கவர்ந்த எழுத்தாளர், எனது வாசிப்பு அனுபவம், நல்ல புத்தகங்கள் நல்ல எண்ணங்களை வளர்க்கும் எனும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்யலாம் அல்லது மூன்று தலைப்புக்களிலும் தனித்தனியே எழுத முடியும்.

9,10,11 ஐச் சேர்ந்த மத்திய பிரிவு மாணவர்கள் 500- 550 சொற்களில் வெற்றிகரமான வாழ்க்கைக்கு வாசிப்பின் அவசியம், நூலகங்களும் மாணவரின் பயன்பாடுகளும், சிறுவர்களும் வாசிப்புப் பழக்கங்களும் எனும் தலைப்பில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்யலாம் அல்லது மூன்று தலைப்புக்களிலும் தனித்தனியாக ஆக்கங்களை எழுதலாம். தரம் 12, 13 ஐச் சேர்ந்த மேற்பிரிவு மாணவர்கள் 1000-1100 சொற்களில் அறிவுலகின் நுழைவாயில், வாசிப்பும் சமூக மேம்பாடும், வாசிப்புத்திறன் வரை எனும் தலைப்புக்களில் மேற்படி நிபந்தனையில் பங்குபற்றலாம்.

கவிதைப் போட்டியில் கீழ்ப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள், சிறுவர்களின் மகிழ்வுலகம் எனும் தலைப்பில் 16 வரிகளுக்கு மேற்படாமலும், மத்திய பிரிவு மாணவர்கள் அறிவுத்தீபம் எனும் தலைப்பில் 32 வரிகளுக்கு மேற்படாமலும், மேற்பிரிவு மாணவர்கள் அகவிழி திறக்கும் அறிவாலயம் எனும் தலைப்பில் 48 வரிகளுக்கு மேற்படாமலும் எழுதுதல் வேண்டும்.

சிறுகதைப்போட்டியில் பங்குபற்றுபவர்களில் கீழ்ப் பிரிவு மாணவர்கள் ஏ-4 தாளில் 2 பக்கத்திற்கு மேற்படாத வகையில் மேன்மையுறு வாழ்விற்கு வாசிப்பே உந்துசக்தி எனும் தொனிப் பொருளிலும், மத்திய பிரிவு மாணவர்கள் ஏ- 4 தாளில் 4 பக்கத்திற்கு மேற்படாத வகையில் ஒரு நூல் நிலையம் திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன எனும் தொனிப் பொருளிலும் மேற்பிரிவு மாணவர்கள் ஏ-4 தாளில் 6 பக்கத்திற்கு மேற்படாமல், புத்தகம் வாசித்தால் நீ புனிதனாவாய்; இல்லையேல் மனிதனாய் இருப்பாய் எனும் தொனிப்பொருளிலும் சிறுகதைகள் ஆக்கப்பட வேண்டும்.

சித்திரப் போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவர்களில் கீழ்ப்பிரிவைச் சேர்ந்தவர்கள் உயிர்ப்பூட்டும் உன்னத நூல்கள் எனும் தொனிப்பொருளில் ஏ-4 தாளில் எத்தகைய வர்ணங்களினையும் பயன்படுத்தி எத்தனை ஆக்கங்களையும் அனுப்ப முடியும்.

மத்திய பிரிவினைச் சேர்ந்தவர்கள் வாசிப்பினால் ஒன்று சேர்வோம் எனும் தொனிப்பொருளிலும், மேற்பிரிவு மாணவர்கள் மனிதன் புனிதனாக இருக்க புத்தகங்கள் வாசித்தல் வேண்டும் எனும் தொனிப்பொருளில் பிறிஸ்ரல் போட்டளவு அல்லது ஆர்ட் போட் அல்லது தகுதியான வெள்ளை மட்டையில் எண்ணெய் வர்ணம் அல்லது நீர்வர்ணம் பாவித்துச் சித்திரம் வரைதல் வேண்டும்.

மேற்படி போட்டிகளுக்கான முடிபுத் தினம் மே மாதம் 4ஆம் திகதியாகும். இத் திகதிக்கு முன்பாக தலைவர், நூலக விழிப்புணர்வு நிறுவகம், வட்டுவினி. அம்மன் கோவிலடி, இணுவில் மேற்கு எனும் விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். வெற்றிபெறும் 3 மாணவர்களுக்கு பெறுமதிமிக்க புத்தகங்களும் சான்றிதழ்களும் வழங் கப்படும் எனவும் அந் நிறுவகம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அமைதிபெற என்ன வழி?



அகத்தூய்மை இல்லாவிட்டால் புறத்தூய்மையால் பயனேதும் இல்லை. ஆன்மீக ஒளியற்ற மனிதன் எவ்வளவு அழகுடையவனாக இருந்தாலும் விலங்குக்குச் சமமாவான்.

மனத்தூய்மை பெற்றுவிட்டால் நம்மிடம் உயர் குணங்கள் மேலோங்கும். மனம் ஒருமுகப்படும். உற்சாகம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும்.

இறைவன் பெரிய காந்தக்கல்லைப்போல இருக்கிறார். நாம் அனைவரும் இரும்புத்துகள் போல அவரால் கவரப்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

வாழ்நாளில் நாம் செய்யவேண்டிய வேலை என்ன தெரியுமா? காந்தக்கல் போல இருக்கும் இறைவனை அணுகிச் செல்வதுமட்டும்தான்.

இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டால் வாழ்வில் இருக்கும் போராட்டம், கொந்தளிப்பு அனைத்தும் நீங்கி அமைதிபெற்று விடுவோம்.

கடவுள் மீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உண்மையானதாக இருக்குமானால் உங்களுடையது எனக் கருதுகின்ற அனைத்தும் அவருடையது என்று நம்புங்கள்.

# ஈழஏதிலிகளை தாயகத்தில் குடியேற்றிவிட்டு ஐ.நா.வின் பார்வையில் வாக்கெடுப்பு நடத்துக!

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு



(சென்னை)

**தமிழீழத்துக்காக மீண்டும் பொது வாக்கெடுப்பு நடத்துவதை நான் எதிர்க்கவில்லை. வெளிநாடுகளில் அகதிகளாக உள்ள தமிழர்களை மீண்டும் தாயகத்தில் குடியேற்றிவிட்டு சுதந்திரமான முறையில் ஐ.நா. பார்வையாளர்களின் நேரடி கண்காணிப்பில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். அப்போதுதான் மக்களின் உண்மையான உணர்வுகள் வெளிப்படும் என உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் கூறியுள்ளார்.**

இது குறித்து பெங்களூரில் தினமணி நிருபருக்கு அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில்,

காங்கிரஸ் கூட்டணியலிருந்து விலகுவதற்காகவே தமிழீழம் குறித்து கருணாநிதி பேசத் தொடங்கியிருக்கிறார்.

இலங்கையில் 1977 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களில் தமிழ் வேட்பாளர்களுக்கே தமிழர்கள் வாக்களித்துள்ளனர். அங்கு 1997 இல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தமிழீழத்தை முன்வைத்து போட்டியிட்ட போது ஒரு தொகுதியை தவிர மற்ற தொகுதிகளில் தமிழர்கள்தான் வெற்றி பெற்றனர். தமிழீழத்துக்கு 35 ஆண்டுகளாக அங்குள்ள தமிழர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

1983 இல் கருணாநிதி, வீரமணி மற்றும் நானும் சேர்ந்துதான் டெசோ அமைப்பை உருவாக்கினோம். ஆனால், எங்கள் யாரிடமும் ஆலோசிக்காமல் டெசோ இனி இயங்காது என்று கருணாநிதி அறிவித்தார். அதே போல இப்போதும் யாரிடமும் கேட்காமல் டெசோ மீண்டும் உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

2009 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டபோது அதைத் தடுக்க எதையும் செய்யாததால் கருணாநிதி மீது உலகத் தமிழர்கள் கோபத்தில் உள்ளனர். அதை மாற்ற செம்மொழி மாநாடு தொடங்கி டெசோ வரை அவருக்குத் தெரிந்த வித்தைகளை செய்து பார்க்கின்றார். காங்கிரஸ் கூட்டணியில் இருந்து கருணாநிதி விலக விரும்புவதால் தமிழீழக் கோரிக்கையை மீண்டும் கையில் எடுத்திருக்கிறார் என்றார். (அ-2)

## தென்ஆபிரிக்காவில் 35 ஆயிரம் கைதிகள் விடுவிப்பு

தென்ஆபிரிக்காவில் சுகந்திரமாக நடந்த தேர்தல் தினத்தையொட்டி 35 ஆயிரம் கைதிகள் விடுதலை செய்ப்பட்டுள்ளனர். தென்னாபிரிக்கா வெள்ளையர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு கடந்த 94 ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது. இதில் நெல்சன் மண்டேலா போட்டியிட்டு ஜனாதிபதியானார். இந்த நாளை கொண்டாடும் விதமாக அந்நாட்டில் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இதற்கிடையே இந்த தினத்தை யொட்டி பல்வேறு சிறைகளில் சிறுகுற்றங்களுக்காக அடைக்கப்பட்டிருந்த 35 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். பாலியல்பலாத்காரம், போதைப் பொருள் கடத்தல், ஆயுதங்களால் தாக்கு தல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை. இந்த நடவடிக் கையால் சிறைகளில் கைதிகளின் நெரிசல் குறைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## நாசா மையத்தை பார்வையிட சென்னை மாணவர்கள் பயணம்

அமெரிக்காவில் இருக்கும் நாசா விண்வெளி மையத்தை பார்வையிட சென்னையில் உள்ள செட்டி நாடு வித்தியாஸ்ரம் பாடசாலை மாணவர்கள் 100 பேர் அமெரிக்கா செல்கின்றனர்.

சென்னையை சேர்ந்த ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா என்ற அமைப்பு இந்திய மாணவர்களிடையே விண்வெளி அறிவியல் குறித்த ஆர்வத்தை அதிகரிக்க ஆண்டுதோறும் மாணவர்களை அமெரிக்காவில் இருக்கும் நாசா விண்வெளி ஆய்வு மையத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

இந்த ஆண்டு சென்னையில் உள்ள செட்டிநாடு வித்யாஸ்ரம் பாடசாலை மாணவர்கள் 100 பேர் மற்றும் அவர்களுக்கு துணையாக ஆசிரியர்கள் 5 பேரும் அமெரிக்கா செல்கின்றனர்.

அவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை சென்னையில் இருந்து அமெரிக்கா புறப்படுகிறார்கள். அமெரிக்கா செல்லும் அவர்கள் நாசா விண்வெளி மையம், கனடாவில் உள்ள விண்கல் மையம் ஆகியவற்றை பார்வையிட்டு அங்குள்ள விஞ்ஞானிகளையும் சந்தித்து பேசுவார்கள். நாசா செல்லும் மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்ச்சி சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் நடந்தது. இன்று அமெரிக்கா செல்லும் இம்மாணவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி சென்னை திரும்புவார்கள். (அ-2)

## சூடான்-தென் சூடான் எல்லையில் போர் வெடிக்கும் அபாயநிலை!


### அவசரகாலநிலை பிரகடனம்

சூடான், தெற்கு சூடான் எல்லையில் உள்ள பகுதிகளில் சூடான் அரசு அவசர நிலையை பிரகடனப் படுத்தியுள்ளது.

இரு நாட்டு எல்லையில் உள்ள ஹெக்லிக் என்ற இடத்தில் எண்ணெய் வளம் அதிகமாக உள்ளது.

இதை தங்களிடம் ஒப்படைக்கும் படி சூடான் அரசு தெற்கு சூடானை எச்சரித்து வந்தது.

இதற்கு தெற்கு சூடான் மறுப்பு தெரிவித்ததால் இரு நாடுகளுக்கிடையே சமீபத்தில் சண்டை நடந்தது. இந்த சண்டையில் இரு தரப்பிலும் 22 வீரர்கள் பலியாயினர்.



சூழ்நிலை விபரீதமாகப் போவதைக் கண்ட ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன்,

சர்ச்சைக்குரிய ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இதைத் தொடர்ந்து தன்னுடைய படைகளை வாபஸ் பெறுவதாக தெற்கு சூடான் ஜனாதிபதி சால்வா கிர் அறிவித்தார். இருப்பினும் சூடான் படையினர் தொடர்ந்து குண்டு வீசி வருவதாக தெற்கு சூடான் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தெற்கு சூடானையொட்டிய கார்டோபன், வொயிட் நைல், செனார் ஆகிய பகுதிகளில் சூடான் ஜனாதிபதி அல் பஷீர் அவசர நிலையை அறிவித்துள்ளார்.

இதன்மூலம் தெற்கு சூடானுடனான வர்த்தகம் துண்டிக்கப்பட்டுள்ளது. அவசர நிலையால் போர் தொடரக்கூடிய அச்சம் ஏற்பட்டுள்ளது. (அ-2)

## இளவரசர் ஆண்ட்ரூ இந்தியா விஜயம்



இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரூ ஒருவார கால சுற்றுப் பயணமாக நேற்றையதினம் இந்தியா வந்துள்ளார்.

இது குறித்து இங்கிலாந்து தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது,

இங்கிலாந்து அரசி குயின் எலிசபெத்தின் 60 ஆண்டுகாலம் ஆவதை முன்னிட்டு அவரது சார்பாக இந்தியா வரும் இளவரசர் ஆண்ட்ரூ மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூர் மற்றும் வடகிழக்கு மாநிலமான நாகலாந்திற்கும் பயணம் மேற்கொள்கிறார்.

இளவரசர் வருகையின் மூலம் இருநாடுகளிடையே வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத்துறையில் வளர்ச்சி ஏற்படவாய்ப்பு உருவாகும் என இங்கிலாந்து உயர் ஆணைக்குழு தகவல் தெரிவித்துள்ளது.

டில்லியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அவர் மும்பையில் மேற்கு கடலோரக்காவற்படை அம்பானியின் சர்வதேச பாடசாலை மற்றும் வர்த்தக பிரமுகர்களைச் சந்தித்துப்பேசவுள்ளார்.

கொல்கத்தாவில் குழந்தைகள் மையம், பெண்கள் அமைப்பைப் பார்வையிடுகிறார். பெங்களூரில் மாநில ஆளுநரைச் சந்தித்துபேசும் ஆண்ட்ரூ தொடர்ந்து ஹிந்துஸ்தான் ஏரோநோட்டிக்ஸ், இன்போசிஸ் நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிடவுள்ளார்.

பின்னர் நாக லாந்திற்குச் செல்லும் ஆண்ட்ரூ கொமன்வெல்த் போரில் உயிரிழந் தவர்களின் நினைவிடங்களுக்குச் செல்கிறார். (அ-2)

## ரஷ்யாவில் எதிர்வரும் ஆண்டுகளில் இரசாயன ஆயுதங்களை அழிக்க முடிவு

(மொஸ்கோ)

ரஷ்யா தன்வசம் வைத்திருந்த சுமார் 25 ஆயிரம் மெற்றிக் தொன் இரசாயன ஆயுதங்களை அழித்துள்ளது என ஏஜென்சி செய்திகள் தெரிவித்துள்ளன.

உலகம் முழுவதும் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ரஷ்யா கடந்த 15 ஆண்டுகளாக தன் வசம் வைத்திருந்த இரசாயன அயுதங்களை சிறிது சிறிதாக அழித்து வருகின்றது. தற்போதைய நிலவரப்படி சுமார் 62 சதவீத அளவிற்கு ஆயுதங்கள் அழிக்கப்பட்டு விட்டுவிட்டதாகவும் மீதமுள்ளவைகள் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டிற்குள் 100 சதவீத அளவிற்கு அழித்துவிட முடிவு செய்துள்ளதாகவும் கூறியுள்ளது.

அதேசமயம் அமெரிக்கா தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்களை அழித்து விட்ட போதிலும் மீதமுள்ள 2 ஆயிரம் மெற்றிக் தொன் ஆயுதங்களை எதிர்வரும் 2021 முதல் 2023 க்குள் முற்றிலு மாக அழித்துவிட முடிவு செய்துள்ளது. (அ-2)

## பான் கீ மூனின் கருத்துக்கள் கடுமையானவை-சிரிய அரசு கண்டனம்

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனை ஒரு தலைப்பட்சமானவர் என்றும் அவரது கருத்துக்கள் கடுமையானவை என்றும் சிரிய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்பும் வன்முறைகள் நடந்து வருவது குறித்து பான் கீ மூன் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு எதிராக சிரிய அரசு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இவ்வாறு திடீரென பான் கீ மூன் மீது சிரிய அரசு சாடியுள்ளது. ஜனாதிபதி ஆசாத் கூடுதல் கால அவகாசத்தைப்பெறும் ஒரு முயற்சி எனக் கருதப்படுகிறது.

அதன்மூலம் தனது பதவியை தக்கவைத்துக்கொள்ள ஆசாத் முயல்வதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

மேலும் சிரிய ஜனாதிபதிக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே சிரியாவின் அரசியல் எதிர்காலம் குறித்துப் பேச்சு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் செயலர் மீது சிரியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஐ.நா. பார்வையாளர்கள் குழுவின் தலைவரான நோர்வேயின் மேஜர் ஜெனரல் ரொபேர்ட் மூட் டமாஸ்கசுக்கு ஒரு சில நாட்களில் வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நடுவர் கைவிட்டார் ஷில்பா கவலை



ஐ.பி.எல். 5 போட்டித் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் டில்லி டேர்டேவில்ஸ் அணியிடம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

இப் போட்டியில் டில்லி அணியின் மோர்னி மோர்கல் வீசிய 19 ஆவது ஓவரின் 4ஆவது பந்து லெக்சைட்டுக்கு வெளியே சென்றது. ஆனால் நடுவர் வைட் கொடுக்கவில்லை.

இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இது குறித்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரும், பிரபல நடிகையுமான ஷில்பா ஷெட்டி டுவிட்டர் இணையத்தளத்தில் கூறியிருப்பதாவது,

மிகவும் முக்கியமான கட்டத்தில் நடுவர் வைட் கொடுக்க மறுத்து விட்டார். இதனால் தான் நாங்கள் தோல்வியடைந்தோம். அந்த பந்து வைட் என்பது நன்றாக தெரிந்தது. இது விளையாட்டுக்கு உகந்தது அல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

# சொந்த மண்ணில் சென்னை தோல்வி

(சென்னை)

ஐ.பி.எல்.போட்டித் தொடரின் 41-வது லீக் ஆட்டம் சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், கவுதம் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

சென்னை அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்ததால் மைக் ஹசி சென்னை அணிக்கு திரும்பியுள்ளார். குலசேகரவுக்கு பதிலாக இவர் இடம்பெற்றார்.

விரித்திமன் சகாவுக்கு பதிலாக யோ மகேஷ் சேர்க்கப்பட்டிருந்தார்.

கொல்கத்தா அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி சென்னை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக மைக் ஹசியும், டூ பிளசிஸ்ஸும் களமிறங்கினர்.

ஆட்டத்தின் இரண்டாவது ஓவரில் டூ பிளசிஸ் 3 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் பிரெட்லியின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்த சுரேஷ் ரெய்னா மைக் ஹசியுடன் ஜோடி சேர்ந்தார். நிதான ஆட்டத்தை ஆரம்பித்த ஹசி 18 ஓட்டங்களில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து ரெய்னாவுடன் பிராவோ ஜோடி சேர்ந்தார்.




பிராவோவும் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற தோனி களமிறங்கி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க போராடினார்.

இந்நிலையில் ரெய்னா 44 ஓட்டங்களில் கலிஸின் பந்துவீச்சில் பதானிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களையே சென்னையால் பெற முடிந்தது.

தோனி 34 ஓட்டங்களுடனும் அல்பி மோர்கல் 13 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில் 140 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற ஓரளவு எளிய இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கியது கொல்கத்தா அணி.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக காம்பீரும் மக்குலமும் களமிறங்கினர்.

ஆரம்பத்தில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது கொல்கத்தா.

அவ் அணி 2.5 ஓவர்களில் 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மக்குலம் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து காம்பீருடன் கலிஸ் ஜோடி சேர்ந்தார். இருவரும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை சீரான வேகத்தில் அதிகரித்தனர்.

அடுத்து கலிஸ் 26 ஓட்டங்களில் ஆட்டமிழக்க காம்பீருடன் திவாரி ஜோடி சேர்ந்தார்.

ஒருமுனையில் காம்பீர் அதிரடியாக விளையாடினார்.

இந்நிலையில் திவாரி 13 ஓட்டங்களில் ஆட்டமிழக்க பதான் ஜோடி சேர்ந்தார்.

கொல்கத்தா 18.1 ஓவர்களில் 124 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, காம்பீர் பிராவோவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

காம்பீர் 52 பந்துகளை எதிர்கொண்டு 63 ஓட்டங்களை பெற்றார்.

இறுதி ஓவரில் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இறுதி ஓவரை அஸ்வின் வீசினார்.

அவ் ஓவரில் முதல் பந்தில் 2 ஓட்டங்கள், 2-வது பந்தில் பூச்சியம்3-வது பந்தில் ஆட்டமிழப்பு, 4-வது பந்தில் 4 ஓட்டத்தைப் பெற கொல்கத்தா அணி வெற்றி இலக்கைப் பெற்றது இதன் மூலம் கொல்கத்தா அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக தாஸ் தேர்வானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**

மாலை 4 மணிக்கு கட்டாக்கில் நடைபெறும் போட்டியில் புனே வாரியர்ஸ் அணி எதிர் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், இரவு 8 மணிக்கு ஜெய்ப்பூரில் நடைபெறும் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் புனே டில்லி அணியும் மோதுகின்றன.

# பார்சிலோனா தொடரில் ரபேல் நடால் சம்பியன்

ஸ்பெயினின் ரபேல் நடால் பார்சிலோனா பகிரங்க டெனிஸ் சுற்றுத் தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சக வீரர் டேவிட் பெரரை 7-6,7-5 என்ற கணக்கில் வெற்றி கொண்டே இந்தப் பட்டத்தை அவர் வெற்றி கொண்டார்.

களிமண் தரையில் இடம்பெறும் இத் தொடரில் களிமண் தரை ராஜாவான ரபேல் நடால் தனது சகநாட்டு வீரர் டேவிட் பெரரடமிருந்து கடுமையான போட்டியை எதிர்கொண்டே இறுதியில் வெற்றிகொண்டார். இதன்மூலம் களிமண் தரையில் தான் பங்குபற்றியுள்ள இறுதி 77 போட்டிகளிலும் ரபேல் நடால் வெற்றி கொண்டுள்ளார்.

உலகின் இரண்டாம் நிலை வீரரான ரபேல் நடால், கடந்த வாரத்தில் மொன்ரி கார்லோ மாஸ்டர்ஸ் தொடரை வெற்றிகொண்ட உத்வேகத்தில் ஆடியபோதிலும், ஸ்பெயினின் மற்றொரு சிறந்த வீரரான டேவிட் பெரர் அவருக்கு ஈடுகொடுத்து ஆடினார். இறுதியில் ரபேல்நடால், 7-6,7-5 என்ற கணக்கில் வெற்றி கொண்டார்.

இந்த சம்பியன் பட்டம் 48 ஆவது சம்பியன் பட்டம் என்பதோடு களிமண் தரையில் அவரது 34 ஆவது சம்பியன் பட்டமாகும். அத்தோடு பார்சிலோனா பகிரங்கத் தொடரை ரபேல் நடால் வெற்றி கொள்ளும்7 ஆவது தடவை இதுவாகும். கடந்த 8 வருடங்களிலேயே இந்த 7 தடவைகள் சம்பியனாகியுள்ளார்.

இதேவேளை இடம்பெற்ற பெண்களுக்கான பார்சிலோனா பகிரங்க டெனிஸ் சம்பியன் தொடரில் ரஷ்யாவின் மரியா ஷெரபோவா சம்பியன் பட்டம் வென்றார். உலகின் முதற்தர வீராங்கனை விக்டோரியா அஷெரங்காவை 6-1,6-4 என்ற கணக்கில் இலகுவாக வெற்றி கொண்டே அவர் இந்தச் சம்பியன் பட்டத்தை வெற்றிகொண்டார்.

25 வயதான மரியா ஷெரபோவா வெற்றி கொள்ளும் 25வது சம்பியன் பட்டம் இது வென்பதோடு இவ்வாண்டில் அவர் கைப்பற்றும் முதலாவது சம்பியன் பட்டம் இது வென்பதும் குறிப்பிடத்தக்கது.

# கீரிமலை நகுலேஸ்வரர்...

வெட்டுவதற்கு தடை விதித்ததுடன் யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் நிதி உதவியுடன் குறித்த காளை மாட்டை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு ஒப்படைக்க முடியும் எனவும், அந்த முடிபை எடுப்பதற்காக மாட்டின் உரிமையாளருக்கு நேற்றைய தினமான 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து நேற்றைய தினம் காளை மாட்டு வழக்கு யாழ் நீதிமன்றில் நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மாட்டின் உரிமையாளர் சார்பில் சட்டத்தரணிகள் ஜொனி மதுரநாயகம், நுஃமான் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

தமது தரப்பு வாதி, குறித்த காளை மாட்டை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு ஒப்படைக்க சம்மதம் தெரிவிப்பதாகவும் அதே நேரம் மாட்டின் கொள்விலை மற்றும் கடந்த 39 நாட்கள் மேற்கொண்ட பராமரிப்புச் செலவு, இறைச்சிக்காக வெட்டியிருந்தால் அதன் மூலம் தனக்குக் கிடைக்கக்கூடிய இலாபம் மற்றும் வழக்குச் செலவு என்பவற்றை உள்ளடக்கியதான தொகையை மாட்டைக் கொள்ளவனவு செய்பவரிடமிருந்து பெற்றுத் தருமாறு நீதிபதியிடம் கேட்டனர்.

மாட்டை வெட்டுவதற்கு தடை விதிக்க வேண்டும் என்ற தரப்பின் சார்பில் வாதிட்ட ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான இ.த. விக்னராஜா தனது விவாதத்தில்,


யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இவ்வழக்கை சுமுகமாக முடிப்பதற்கான நன்நோக்கில் யாழ். வணிகர் கழகம் செய்யும் அன்பளிப்புப் பணத்தின் மூலமே மாட்டின் உரிமையாளருக்கும் பணம் செலுத்த வேண்டி இருப்பதால்,

அன்பளிப்புச் செய்பவரிடம் கலந்தாலோசித்த பின்னரே இது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது.

எனவே இது இந்து சமய நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் இவ்வழக்கை தீர்த்து வைப்பதற்கு குறுகிய தவணை தருமாறு மன்றிடம் விண்ணப்பம் செய்தார்.

இதையடுத்து வழக்கு நாளை புதன்கிழமை மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதி மா.கணேசராஜா அறிவித்தார். (ந-4)

# நல்லெண்ணச் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்க்ள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று மாலை நல்லெண்ண சந்திப்பொன்று இடம் பெற்றது.

இச் சந்திப்பு அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றது.

சந்திப்பின் நிறைவில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்க வேண்டும் என தான் கேட்டுக் கொண்டதாக ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்ததாகவும் அதனை தாம் வரவேற்பதாகவும் அதனை ஊக்குவிக்கும் முகமாகவே இச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) உள்ளிட்டோருடன் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோரும் உடனிருந்தனர். (எ-11)

## யுத்த நிறுத்த மீறல்...

இந்தியாவுக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த பான் கீ மூன் இந்தியா ருடேக்கு வழங்கிய செவ்வியின்போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். இச்செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஜனாதிபதியாக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டு பலமான ஆணையைக் கொண்டுள்ள நிலையில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அவர் விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

தீவிரவாதத்திற்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட படை நடவடிக்கையின் இறுதி மாதங்களில் பத்தாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன் மோசமானமனித வுரிமை மீறல்களும் இடம்பெற்றுள்ளன.

இத்தகைய மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறப்பட வேண்டும். இத்தகைய மோசமான மனிதவுரிமை மீறல்களுக்கு பொருத்தமானவழிகளில்பதிலளிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நான் கேட்டுக்கொண்டுள்ளேன்.

இவ்விவகாரம் தொடர்பில் நான் ஒரு நிபுணர்கள்குழுவை நியமித்தேன். அதேபோன்று சர்வதேச அழுத்தங்களை அடுத்து இலங்கை அரசாங்கமும் உண்மைகளைக் கண்டறிவதற்கானநல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. இந்த நல்லிணக்க ஆணைக்குழு இவ்விவகாரம் தொடர்பில் நல்ல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இந்நிலையில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் முழுமையான பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இச்செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில்பான் கீ மூன் இவ்வாறு அழுத்தம் கொடுத்திருப்பது இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என சர்வதேச நாடுகளும் மனிதவுரிமை அமைப்புக்களும் வலியுறுத்தி வருகின்றமை தெரிந்ததே. (எ-11)

## 250 பேருடன்...

கவிழ்ந்துள்ளது.

சுமார்35பேரின் சடலங்கள்மீட்கப்பட்டுள்ளன. ஏனையோரின் நிலை உடனடியாக தெரியவில்லை. மீட்பு நடவடிக்கைகளுக்காக எல்லை பாதுகாப்பு படையினரும் அழைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## பான் கீ மூன்...

எஸ்.எம்.கிருஸ்ணா ஆகியோருடன் கடந்த 27 ஆம் திகதி புதுடில்லியில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது இலங்கையில் போருக்கு பின்னரான நல்லிணக்க முயற்சிகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (எ)

## ஹிருணிகா...

சருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக ஹிருணிகா பிரேமசந்திரவினால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்தே அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (எ-11)

## புலிகளுக்கு எப்போது...

பதிலளிக்கையில்,

**கேள்வி:** நீங்கள் ஆட்சியில் இல்லாத போதுதான் இலங்கை பிரச்சினையை தீவிரமாக கையில் எடுப்பதாக கூறுகிறார்களே?

**பதில்:** ஆட்சியில் இருக்கும் போதும் இல்லாத போதும் இலங்கை தமிழர்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் வாதாடி இருக்கிறோம். போராடி இருக்கிறோம். அமைதிப்படை என்ற பெயரால் இலங்கையில் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டனர். அந்த அமைதிப்படை இந்தியா வந்தபோது அன்று முதலமைச்சராக இருந்த நான் வரவேற்கச் செல்லவில்லை. அதனால் ஆட்சியை இழக்கவும் தயாராக இருந்தவர்கள் நாங்கள்.

**கேள்வி:** இலங்கையில் போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது அதைத்தடுக்க தவறிய நீங்கள் இப்போது டெசோ அமைப்பை கையில் எடுத்திருப்பதாக விமர்சிக்கிறார்களே?

**பதில்:** விமர்சிப்பவர்களை பற்றி கவலை இல்லை என்னையோ டெசோ அமைப்பையோ விமர்சிப்பது அவர்களாகவே இந்த அமைப்புக்கு தரும் விளம்பரமாகவே கருதுகிறேன். நாங்கள் ஆட்சியை இழந்ததால் இதை உருவாக்கவில்லை.

**கேள்வி:** போர் முடிந்த பிறகு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பால் ஈழத்தமிழர்களுக்கு எந்த அளவுக்கு உதவ முடியும்?

**பதில்:** முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம். அறவழியில் அனைத்து நாட்டு ஆதரவையும் திரட்ட இருக்கிறோம். இதற்கு அனைவரும் ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும்.

**கேள்வி:** பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா?

**பதில்:** விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்ற போராளிகளுக்கு எப்போதும் சாவு இல்லை.

**கேள்வி:** மத்திய அரசு உதவி செய்யாவிட்டால் ஆட்சியில் இருந்து விலகுவீர்களா?

**பதில்:** உதவி பெற முயற்சிக்கிறேன். முயற்சி வெற்றி பெறும் என்று நம்புகிறோம். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது தி.மு.கவால் தான் என்பதை மறந்து விடக்கூடாது.

**கேள்வி:** புலிகள் மீண்டும் போராடினால் டெசோ ஆதரிக்குமா?

**பதில்:** அவர்களை ஜனநாயக வழியில் போராட வேண்டும் என்று கேட்டுக் கொள்வோம்.

**கேள்வி:** இந்த அமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

**பதில்:** இந்த அமைப்பை தமிழ்நாடு முழுவதும் பரப்புவது. மக்களிடையே ஆதரவைத் திரட்டுவது. தமிழ் ஈழம் பெற ஜனநாயக வழிமுறைகளை கடைப்பிடிப்பது. அதற்கு மத்திய அரசு ஒத்துழைக்க வலியுறுத்துவது. என்றார். (எ)

## பான்கி மூன் செவ்வி:...

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் பான் கீ மூனின் இக்கருத்துக்கள் நியாயமற்றது எனவும் அவரின் இக்கருத்துக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் தமக்கு சார்பாக பயன்படுத்திக் கொள்ளக் கூடும் எனவும் அரசாங்கம் கருதுவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அத்துடன் பான் கீ மூனின் இக்கருத்துக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் கேள்வி எழுப்புமாறு நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி பாலித்த கொஹன்னவுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பணித்துள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

## வரலாறு...

பலப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நடத்தவுள்ள மே தின ஊர்வலமும் கூட்டமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில் ஆரம்பமாகவுள்ள ஊர்வலம் யாழ்.சென்றோக் விளையாட்டு மைதானத்தை சென்றடையவுள்ளதோடு அங்கு பொதுக் கூட்டமும் இடம்பெறும்.

இதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மேதின ஊர்வலங்கள் பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை வீதி வீரமாகாளி அம்மன் ஆலயம் முன்பாகவும், பண்ணை ரெலிக்கொம் சுற்று வட்டாரத்திலிருந்தும், யாழ். புகையிரத முன்றலில் இருந்தும் பேரணிகள் ஆரம்பமாகி யாழ். வேம் படிச்சந்தியை வந்தடையும். பின்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.மாநகர சபை வளாகத்தினை சென்றடையும். அங்கு பொதுக்கூட்டமும் இடம்பெறும்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டமும் ஊர்வலமும் நடத் தப்படவுள்ளதோடு தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணி - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகள் இணைந்து மேதினக் கூட்டத்தையும் ஊர்வலத்தையும் ஏற்பாடு செய்துள்ளன.

இவ்வாறுஇம்முறை யாழ்ப்பாணத்தில் மேதினக்கூட்டமும் ஊர்வலமும் பெரும். எதிர்பார்ப்பைமக்கள்மத்தியில் ஏற்படுத்தியுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (எ-6)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

Batch I: 2-5-2012 09.00 - 12.00 | Batch II: 5-5-2012 03.00 - 5.00 | Batch III : 7-5-2012 09.00 - 12.00

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar (Quick Learning Course) 1 1/2 Months

Diploma In English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்
A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
◇ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2 1/2 Months
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777-585913, 0777-222422, 071-4299935, 0777-730074



அறிவித்தல்
தகவல் தொழில் பட்டக்கற்கை நெறி
கொழும்பு பல்கலைக்கழகம்.
கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
-இணைப்பாளர்,BIT கற்கை .நெறி
MCS தகவல் தொழில் நுட்ப வளாகம்
BIT சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.
Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.



மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
(8266)
4 ரெக்டர் - 23000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு (கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு கண்ணா 0776766499


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.